Vol.8, Issue 7 | Annual Subscription ₹ 480
Rotary News, December 2025, Chennai

@NewsRotary /RotaryNewsIndia

டிசம்பர் 2025

ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org

தேஜஸின் தலைவர்கள்

மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் RI இயக்குநர் K P நாகேஷ் மற்றும் மாநாட்டுத் தலைவர் PDG ஷரத் ஜெயின்.

படம்: ரஷீதா பகத்

உள்ளே

12

ஒற்றுமையான மற்றும் அமைதியான சமூகங்களை உருவாக்க நாம் பாடுபடுவோம்

18

தலைமைத்துவத்தின் அறிவுரை

20

இயக்குநர்களுக்கு 3 ஆண்டு பதவிக்காலம் இருக்க வேண்டுமா?

28

போலியோ போராளிகளுக்கு கௌரவம்

36

200 பெண்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவிய RID 3233

42

என்னை விட்டுப் பிரியாதே

48

வெள்ளத்தின்போது ரோட்டரியன்களின் உதவி

Rotary

A publication of Rotary Global Media Network

நம் சுற்றுச் சூழலை பாதுகாக்க மின்பதிப்புக்கு மாறவும்

மின்னிதழ் கட்டணம் குறைப்பு

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து ₹324-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

நலமும் மகிழ்ச்சியும்

ரோட்டரி இதழின் இந்த மாதச் சிறப்பிதழ், மனித ஏக்கங்களின் அடிப்படையான மகிழ்ச்சியைப்பற்றியது. ஆனால், இது வெறும் உணர்வு இல்லை, நேர்விதமான நல நிலை. அதை உருவாக்கவும் தக்கவைக்கவும் தேவையான சூழ்நிலைகள் பிரபஞ்ச உரிமையாகக் கருதப்படவேண்டும்.

டிசம்பர் மாதம் ரோட்டரியின் நோய்த் தடுப்பு மற்றும் குணப்படுத்தல் மாதமாகும். இதில் நாம் நலத்தை (மன நலம் உள்பட) முன்னிறுத்தும் நம் உறுப்பினர்களின் பணியைக் காட்சிப்படுத்துகிறோம். உலக அளவில் சுமார் ஏழில் ஒருவருக்கு ஒரு மன நலக் குறைபாடு உள்ளது என்று உலகச் சுகாதார நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையொன்று சொல்கிறது. எனினும், மனச்சோர்வு கொண்ட மக்களில் 9% பேர்தான் போதுமான சிகிச்சையைப் பெறுகிறார்கள்.

ரோட்டரியில் உணர்வு நலம் மற்றும் மகிழ்ச்சியை ஆதரிக்கும் ஆற்றல் மிக்க வழி ஒன்று உள்ளது நம் அதிர்ஷ்டம்தான். அந்த வழி: நட்பு. ரோட்டரியில் நாம் கட்டமைக்கும் இணைப்புகள் மாற்றத்துக்கான ஆற்றல் மிக்க விசை ஆகலாம். இதை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன்.

நான் சங்க உறுப்பினராகவேண்டும் என்று மற்ற உறுப்பினர்கள் முதன்முறையாகச் சொன்னபோது, நான் தயங்கினேன். எனக்குத் திக்குவாய் உண்டு. எனக்குப் பேசுவதென்றாலே அச்சம். ஆனால், என்னை ஆதரிக்கிற சங்க உறுப்பினர்கள் அன்பால் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள், என் அச்சத்தைச் சந்திக்க எனக்கு உதவினார்கள், நான் ஒரு கூட்டத்தின்முன் நம்பிக்கையோடு நிற்க ஒரு வழியைக் கண்டறிந்தேன்.

இன்று, நான் பல கூட்டங்களில் ஆயிரக்கணக் கானோருக்கு முன்னால் பேசுகிறேன், அதுவும் என் தாய்மொழி அல்லாத ஒரு மொழியில். என் வாழ்க்கையில் வந்த ரோட்டரி உறுப்பினர்கள் எனக்குள் நீடித்த மாற்றத்தை உருவாக்க எனக்கு உதவினார்கள்.

அந்த நட்பு, உலகில் நீடித்த மாற்றத்தை உருவாக்கத் தேவையான துணிச்சல், வழிகளையும் நமக்கு வழங்குகிறது. மன நலச் சேவைகளை விரைவில் மேம்படுத்தவேண்டியுள்ளது. அரசாங்கங்கள் தங்கள் நலத் திட்டத் தொகைகளில் சராசரியாக வெறும் 2%-தான் மன நலத்துக்காகச் செலவிடுகின்றன என்றும், அந்த நிதியில் வெறும் 11%-தான் சமூக அடிப்படையிலான சேவைகளுக்குக் கிடைக்கிறது என்றும் WHO தெரிவிக்கிறது. சில நாடுகளில், 100,000 பேருக்கு ஒரு பயிற்சி பெற்ற மன நலத் தொழில் வல்லுநர்தான் உள்ளார். இந்த இடைவெளியை நிரப்புவதற்கு வியூக அடிப்படையிலான, உடனடி நடவடிக்கை வேண்டும் என WHO அழைத்துள்ளது.

ரோட்டரியால் அந்த அழைப்புக்குப் பதிலளிக்க இயலும். நாம் நம் சங்கங்களில் மன நல விழிப் புணர்வை முன்னிறுத்தலாம், உள்ளூர் நல அமைப்புகளுடன் பணியாற்றலாம், சமூக நலப் பணியாளர்களுக்கான பயிற்சிகளுக்கு நிதியளிக்கலாம், பராமரிப்பு இல்லாத இடங்களுக்கு அதைக் கொண்டு வருவதற்கான முன்னெடுப்புகளை ஆதரிக்கலாம். மன நலத்தில் சிறு முதலீடுகளும் உற்பத்தித்திறன், பொது நலம் மற்றும் மகிழ்ச்சியில் மிகப் பெரிய பலன்களைத் தருகின்றன.

நாம் உலகில் நீடித்த மாற்றத்தை உருவாக்கும்போது, ஒருவரை ஒருவர் கவனித்துக்கொள்ளாமல் விட்டுவிடக் கூடாது. RI முன்னாள் தலைவர் காடன் மெக்இனல்லி, “நீங்கள் எப்படி உள்ளீர்கள்?” என்று கேட்பதைத் தாண்டிச் செல்லவேண்டும் என்று நமக்குச் சிறப்பாக நினைவூட்டுகிறார். அதற்குப் பதிலாக, நீங்கள் உண்மையில் எப்படி உள்ளீர்கள்?” என்று நாம் கேட்கவேண்டும். அது நம் கடமை.

புதிய வாய்ப்புகள் நிறைந்த ஒரு புது ஆண்டுக்கு நாம் நகர்கிற இந்த நேரத்தில், நாம் தேறுவதற்காக, நட்புக்காக, மகிழ்ச்சியின் அணுகலுக்காக, அதாவது, நன்மைக்காக ஒருங்கிணைவோம்.

ஃப்ரான்ஸஸ்கோ அரேஸ்ஸோ
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்

மதிப்பின் மகத்துவத்தை வழங்கிய மாநாடு

ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்ட, அசாதாரண வேலைகளைச் செய்த சாதாரண மக்களிடமிருந்து நம்பமுடியாத கதைகளை கேட்பதற்கு சிறந்த இடம் மண்டல மாநாடு. தில்லி தேஜஸ் மாநாட்டிலும் 1,400 பிரதிநிதிகள் பங்கேற்று சில விசித்திரமான மக்களை சந்திக்கும் வாய்ப்பு பெற்றனர். ஆனால், இந்த முறை இரண்டு பேச்சாளர்கள் தங்களது பேச்சுதிறமையால் பார்வையாளர்களை வாயடைக்கச் செய்தனர். இருவருமே இந்திய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் கேப்டன் ரகுராமன்- "26,000 அடி உயரத்தில் தலைமைத்துவம்" பற்றி பேசினார். மற்றொருவர் பிரிகேடியர் D S பஸேரா- விசிஷ்ட் சேவா பதக்கம் பெற்றவர். தற்போது பாதுகாப்புத் துறையில் கேந்திரிய சைனிக் வாரியத்தில் செயலாளராகப் பணிபுரிகிறார். முன்னாள் ராணுவத்தினர் மற்றும் போரில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினரின் நலன்களை கவனித்து வருகிறார்.

கேப்டன் ரகுராமன், சியாச்சின் பனிப்பாறை பகுதியில் 26,000 அடிக்கு அப்பால் வாழும் வாழ்க்கையை தெளிவாக எடுத்துக் கூறினார். அங்கு வெப்பநிலை மைனஸ் 20 முதல் 25 டிகிரிவரை இருக்கும். இவற்றுடன் பனிக்காற்றும் வீசும். இந்த பனி பிரதேசத்தில் ரோந்து செல்லும் ராணுவ வீரர்கள் துப்பாக்கி, பூட்டுகள் மற்றும் 15–20 கிலோ பொதிகளை எப்படி சுமந்து செல்கிறார்கள் என்பதை விடியோ காட்சிகள் மூலம் விளக்கினார். சாதாரண சூழலில் தில்லியிலிருந்து துவாரகை வரை ரோந்து செல்ல 3 மணி முதல் 4 மணி நேரம் ஆகும். ஆனால், பனிப்பாறை பகுதியில் ரோந்து செல்ல நான்கு நாட்களாகும்.

ஒரு கோப்பை தேநீர் குடிக்க முடியாத சூழ்நிலையில் தலைமைத்துவம் வழங்கப்பட வேண்டும். ஒரு சிப்பாய், கோடரி மூலம் கான்கிரீட் போன்ற பனிப்பாறையை உடைத்து ஒரு பாத்திரத்தில் தேயிலையை போட்டு ஒன்றரை மணி நேரத்திற்கு மேல் சூடாக்கினால்தான் தேநீர் தயாரிக்க முடியும். பனிப்பாறைகளை உருக்க திரவ தங்கம்-மண்ணெண்ணெய் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. "நீங்கள் உணவோ அல்லது தண்ணீரோ இல்லாமல் பல வாரங்கள் சமாளித்துவிடலாம். ஆனால், மண்ணெண்ணெய் இல்லாமல் ஓர் இரவைக்கூட சமாளிக்க முடியாது. நீங்கள் தங்கியிருக்கும் கூடாரத்தில் இரவில் விளக்கு எரியவில்லை என்றால், காலையில் நீங்கள் ஐஸ் தட்டுபோலத்தான் எழுந்திருப்பீர்கள்". இங்கு வீரர்களை போருக்கு அழைத்துச் செல்ல ராணுவ ஜெனரல்கள்தான் தலைமைத்துவம் ஏற்க வேண்டும். "ஊதிய உயர்வு இல்லாமல், சிறந்த ஊழியர் விருது அல்லது போனஸ் இல்லாமல்" என்று அவர் கிண்டலாக குறிப்பிட்டார்.

பிரிகேடியர் பஸேரா, தனது நெகிழ்ச்சியான உரையில், ராணுவ வீரர்கள் நாட்டை, நமது மண்ணை, நமது தேசிய கொடியை பாதுகாக்க எப்படி போராடி வருகிறார்கள் என்பதை ரோட்டேரியன்களிடம் விவரித்தார். ராணுவத்தினரின் பாதுகாப்பால்தான் நாம் அச்சமின்றி வாழமுடிகிறது. நாம் உயிருடன் இருந்தால் மார்பில் பதக்கங்கள் இருக்கும். நாம் உயிரிழந்துவிட்டால், நமது பெயர், இந்தியா கேட் பின்னால் உள்ள தேசிய போர் நினைவுச்சின்னத்தில் பதிக்கப்படும். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் நம்மை நினைவில் கொள்வார்கள். தேசியக் கொடி போர்த்தப்பட்டு நமது உடல் இந்த உலகத்தைவிட்டு பிரிவதைவிட வேறு என்ன பெரிய மரியாதை வேண்டும் என்கிறார்.

இந்த இரு பேச்சாளர்களும் பங்கேற்பாளர்களுக்கு மதிப்புமிக்க தகவல்களையும் உணர்வுகளையும் வழங்கியிருந்தாலும், இருவேறு அமர்வுகளும் இடம்பெற்றன. RI முன்னாள் தலைவர் K R ரவீந்திரன், RI தலைவர், துணைத் தலைவர், வாரியம் மற்றும் TRF அறங்காவலர் குழுவில் இடம்பெற்ற இரு இந்திய இயக்குநர்களிடம் பல கேள்விகளை எழுப்பினார். அதில் ரோட்டரியை இயக்குவது யார்- RI வாரியமா அல்லது ஊழியர்களா? என்னும் தந்திரமான கேள்வியும் ஒன்று. மற்றொரு அமர்வில் இந்தியாவைச் சேர்ந்த போலியோ போராளிகளான PRID அசோக் மகாஜன், PDG தீபக் கபூர் மற்றும் முன்னாள் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷவர்தன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் மூவரும் போலியோ ஒழிப்புக்கான தங்களது நெடும் பயணத்தை விவரித்தனர்.

ஒரு மகிழ்ச்சியான தகவல் என்னவென்றால் பங்கேற்பாளர்கள் போக்குவரத்து வசதிக்காக ஓலா, உபேர் என போராடுவதை தவிர்க்க அனைவருக்கும் வாகன வசதி செய்யப்பட்டது. மாலை நேர அமர்வுகள் இசை, நாட்டியம் மற்றும் விருந்து சாப்பாடு எனச் சென்றது. பிரபல யோகா பயிற்சியாளர் சௌரவ் போத்ராவை சந்திக்க பெண்கள் வரிசையாக காத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஒட்டு மொத்தமாக மாசுபடிந்த நகரமான தில்லிக்கான பயணம் சுவாரஸ்யமாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது.

ரஷீதா பகத்

ரோட்டரி நியூஸின் அற்புதமான இதழ்கள்

ரோட்டரி நியூஸின் சமீபத்திய இதழ்கள் மிகச் சிறப்பாக இருந்தன. நம் ரோட்டரி உலகில் பலரும் பல இடங்களில் அற்புதமான செயல்களை செய்து வருகிறார்கள்; மேலும், உங்கள் செய்தி அறிக்கை அதை ஒரு திரில்லரை படிப்பது போல் உணர வைக்கிறது! உங்களுக்கும் உங்கள் குழுக்கும் மேலும் பலம் கிடைக்கட்டும். தொடர்ந்து சிறப்பாக செய்யுங்கள்!

PRIP *கல்யாண் பானர்ஜி*

நம் AED திட்டம் பற்றிய கட்டுரையைப் படித்தது மகிழ்ச்சி யளித்தது. இது நன்றாகக் கையாளப் பட்டிருந்தது மற்றும் மாரடைப்பு, அதைக் கண்டறிதல் மற்றும் அருகில் உள்ளவர்கள் வழங்க வேண்டிய சரியான உதவி குறித்து விழிப் புணர்வை அதிகரிக்கும்.

டாக்டர் அக்ஷய் மேத்தா,
RC பம்பாய் ஏர்போர்ட் — D 3141

ஜூலை 20 ஒரு பொன்னான நாள், இது நம் RID 3000-த்தின் வரலாற்றில் பொறிக்கப்படும். எங்கள் நண்பர் விஜயாலயன் மற்றும் அவரது குழுவின் முயற்சிகள் மற்றும் நுணுக்கமான திட்டமிடலுக்கு நன்றி, திருச்சி சக்ஸஸ் ரோட்டரி சங்கம் என்ற புதிய சங்கம் நிறுவப்பட்டது. அவரது அடுத்த இலக்கு 555 உறுப்பினர்களுடன் ஒரு புதிய ரோட்டராக்ட் சங்கத்தை உருவாக்குவதாகும். DG கார்த்திக்குக்கு, இந்தப் புதிய சங்கம் அவரது ரோட்டரி வாழ்க்கையில் கடந்த ஒரு மைல்கல்லாக இருக்கும்.

S மோகன்
RC மதுரை வெஸ்ட் — D 3000

நவம்பர் இதழில் வெளியான ‘அகோலாவில் குழந்தைகளின் வாழ்வியலை மாற்றியமைக்கும் RYLA’ என்ற கட்டுரை அழகாக எழுதப்பட்டுள்ளது; இது ரோட்டரி திட்டங்களில் RYLAவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. குழந்தைகள் சரியான பாடங்களை கற்றுக்கொண்டால், அது வாழ்நாள் முழுவதும் அவர்களுடன் நிலைத்திருக்கும்.

ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு என்ற பகுதியில், மாவட்ட ஆளுநர்கள் உறுப்பினர் தக்கவைப்பு, தோழமை, TRF பங்களிப்புகள் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் மாற்றம் தேவைப்படும் சேவைத் திட்டங்களைப் பற்றி அதிகம் பேசப்படுவதில்லை. நமது சமூகங்களில் பின்தங்கியவர்களுக்கு நீடித்த நன்மைகளை வழங்க ரோட்டரியின் சேவை முறையை நாம் ரோட்டேரியர்கள் மறுவடிவமைக்க வேண்டிய நேரம் இது.

ரோட்டேரியர்கள் ஏன் ரோட்டரியில் இருக்கிறார்கள் என்பதை சுயபரிசோதனை செய்ய வேண்டும்; உண்மையில், ரோட்டரியின் ஒரு பகுதியாக இருப்பதற்காக அவர்கள் அதிர்ஷ்டசாலியாக உணர வேண்டும், ஏனென்றால் ரோட்டரி மற்ற ரோட்டேரியர்களின் ஒரு பெரிய சக்தியுடன், மற்றவர்களுக்கு ஒரு பெரிய வழியில் நல்லது செய்ய அவர்களுக்கு உதவுகிறது. இதை உறுப்பினர்கள் உணர்ந்தால், அவர்கள் அமைப்பை விட்டு வெளியேறுவது என்ற கேள்விக்கே இடமில்லை, மேலும் தக்கவைப்பு பற்றிய பேச்சும் தேவைப்படாது.

ராதேஷ்யாம் மோடி
RC அகோலா — D 3030

நவம்பர் இதழில் கடைசிப் பக்கத்தில் விருந்தினர்களும் குறைபாடுகளும் என்ற தலைப்பில் வந்த LBW கட்டுரையைப் படிப்பது சுவாரஸ்யமாக இருந்தது.

பியூஷ் தோஷி, RC பேலூர் — D 3291

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நலத்திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.

பெட்டி கருணாகரன் மறைவு

அமைதியான வலிமையும், நீடித்த அருளும் கொண்ட பெண்ணும், PDG ரெவி கருணாகரனின் மனைவியுமான பெட்டி கருணாகரன் அக்டோபரில் காலமானார். ஆலப்புழையில் உள்ள அவர்களின் 100 ஆண்டுகள் பழமையான வீடு தனித்துவமானது. அதற்கு முன் கதவு கிடையாது - அஜாக்கிரதையால் அல்ல, அவர்களைச் சுற்றியுள்ள மக்களின் பாசம் மற்றும் பாதுகாப்பின் மீதான நம்பிக்கையால்.

2003-ல் ரெவி காலமானபோது, பெட்டி குடும்பத்தின் வணிகம் மற்றும் தர்ம பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார், மேலும் ரோட்டரியில் ஆழமாக ஈடுபட்டார். அவர் AKS உறுப்பினராக இருந்தார். இவர் காதலுக்கும் மரபுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட - ஆலப்புழையில் உள்ள ரெவி கருணாகரன் நினைவு அருங்காட்சி யகத்தை-உருவாக்கினார். 28,000 சதுர அடி பரப்பளவில், இது ஸ்வரோவ்ஸ்கி கிரிஸ்டல்கள், தந்தம் சிற்பங்கள், பீங்கான் மற்றும் பல்வேறு கலாச்சாரங்களின் மதக் கலைப்பொருட்களின் உலகின் மிகப்பெரிய தனியார் சேகரிப்புகளில் ஒன்றாகும். அவர் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தபோது, ஸ்வரோவ்ஸ்கி அவருக்கு ஸ்வரோவ்ஸ்கி கிரிஸ்டல் களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு சேலையை பரிசளித்தது!

அட்டைப்படத்தில்: ரோட்டரி மண்டல மாநாட்டில் ஒரு கலாச்சார நிகழ்ச்சி.

RI இயக்குனர் செய்தி



மறு உறுதிப்படுத்தல், மறு ஆற்றலளித்தல், மறு கற்பனை செய்தல்

டிசம்பர் மாதம் நம் ஓட்டத்தைச் சற்று நிறுத்தக் கூடியது. அந்த இடைவெளியில், ரோட்டரி எப்போதும் நன்கு புரிந்துகொண்டுள்ள ஒன்று நம் நினைவுக்கு வருகிறது: கண்ணியமும் வாழ்க்கையும் நிறைந்த வாழ்க்கையை நோக்கிய முதல் படி, நல்ல உடல்நலம். நம் பகுதிகளில் ஒவ்வொரு நாளும் நம் சங்கங்கள் இதை நடத்திக்கொண்டிருக்கின்றன: பரிசோதனை முகாம்கள், தொலைநல ஆதரவு, புற்றுநோய் கண்டறிதல் முன்னெடுப்புகள், மன நல முன்னெடுப்புகள், குடும்பங்களில் நம்பிக்கையை, நிலைத்தன்மையை அமைதியாக மீட்டெடுக்கிற இன்னும் பல முயற்சிகள்.

பல நேரங்களில், நாம் நம் சமூகங்களைக் கவனித்துக் கேட்கும்போது, முன்னோக்கிய பாதை எளிதாகிவிடுகிறது: விரைவில் செயல்படுங்கள், அறிவோடு செயல்படுங்கள், மக்களை மையத்தில் வைத்துச் செயல்படுங்கள். இப்போதும் தடுப்பு தான் நமக்கு மிக வலுவான நன்மையைக் கொடுக்கிறது: சரியான நேரத்தில் தகவல்கள், வழக்கமான பரிசோதனை, பாதுகாக்கும் தடுப்பு மருந்துகள், குடும்பங்கள் தகவலறிந்த தீர்மானங்களை எடுக்க உதவும் உரையாடல்கள். நலத்தை வலுவாக்குவது என்பது, உண்மையில் வருங்காலத்தை வலுவாக்குவது.

நம் பணி வளரும்போது, நம் கூட்டுகளும் அதோடு வளரவேண்டும். புதிய CSR-1 கட்டமைப்பு அந்த வளர்ச்சியின் முதன்மையான ஒரு பகுதி. இப்போதெல்லாம் நிறுவனங்கள் ஒவ்வோர் உரையாடலையும் ஓர் அடிப்படைக் கேள்வியில் தொடங்குகின்றன: நீங்கள் CSR-1க்கு இணக்க மானவர்களா? இணக்கம் என்பது செய்யவேண்டிய ஒரு வேலை இல்லை. அது ஒரு குறியீடு, ரோட்டரி ஆயத்தமாக, வெளிப்படையாக, நன்கு நிர்வகிக்கப்படுவதாக, நெடுங்காலத் தாக்கத்தை வழங்கும் திறனுடன் இருக்கிறது என்பதன் குறியீடு. நீங்கள் முதன்முறை விண்ணப்பம் செய்தாலும் சரி, புதுப்பித்தல்களைக் கையாண்டாலும் சரி, CSR-1ஐ ஓர் இன்றியமையாத படிநிலையாகக் கொள்ளுங்கள். அது நலப் பராமரிப்பு, கல்வி, சுற்றுச்சூழல், தொழில்நுட்பம், திறன்களில் கதவுகளைத் திறக்கிறது, நாம் அவற்றின் வழியாக நம்பிக்கையுடன் நடந்து செல்லலாம்.

புது தில்லியில் நடைபெற்ற தேஜஸ் (ரோட்டரி மண்டல மாநாடு) ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியை நாம் கண்டுகொண்டோம். இந்த மாநாடு பல கைகள் ஒரே நோக்கத்துடன் பணியாற்றுவதன் ஒரு பிரதிபலிப்பாகும். சிந்தனையுள்ள நிகழ்வுகள், ரோட்டராக்ட், இன்டராக்ட் மற்றும் இன்னர் வீலின் இருப்பு, ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் வழங்கப்பட்ட கதகதப்பு ஆகியவை, யோசனைகள் எளிதில் பயணம் செய்யக்கூடிய ஒரு சூழலை உருவாக்கின. ஏற்பாட்டுக் குழு, தன்னார்வலர்கள், விருந்தினர்கள், பங்கேற்பாளர்களுக்கு என் நன்றி. தேஜஸின் வெற்றி உங்கள் அனைவருக்கும் சொந்தமானது. ஆயத்தமாதலும் ஒட்டுமொத்த விருப்பமும் சேரும்போது ரோட்டரியால் என்னென்ன சாதிக்கமுடியும் என்று இது மீண்டும் காண்பித்தது.

இந்த ஆண்டு முடியப்போகிறது. நம் ரோட்டரிப் பயணத்தின் முதல் ஆறு மாதங்கள் முடியப்போகின்றன. நம் ஆற்றலை மீண்டும் குவிப்பதற்கும், நம் முன்னுரிமைகளை மீண்டும் பொருத்துவதற்கும் ஏற்ற நேரம் இது. பொருளுள்ள ஊடாடலின் வழியாக, உறுதிப்பாடுள்ள புதிய உறுப்பினர்களை வரவேற்போம், நிறையப் பங்களித்து ரோட்டரி அறக்கட்டளையை வலுவாக்குவோம், பங்கேற்பை ஆழமாக்குவோம், ஒவ்வொரு ரோட்டரியனும் மதிக்கப்படுவதாக, இணைந்திருப்பதாக, ஊக்கத்துடன் உணரச்செய்வோம். நம் சங்கங்கள், குழுக்களுக்கு மீண்டும் ஆற்றலளிப்போம், நம் சிறந்த யோசனைகள் தாக்கமுள்ள, நீண்ட காலத் திட்டங்களாக வளர்வதை, நம் நம்பிக்கை, நோக்கத்தைப் பகிர்ந்துகொள்ளும் கூட்டாளர்களால் ஆதரிக்கப்படுவதை உறுதி செய்வோம்.

டிசம்பர் நமக்கு வழங்கும் நினைவூட்டல்களில் முதன்மையானது இது: நாம் ஒவ்வொரு செயலாக ஒரு சமூகத்தை வலுவாக்கும்போதெல்லாம், மனித குலத்தை வலுவாக்குகிறோம்.

KP நாகேஷ்
RI இயக்குநர், 2025–27

2026 Convention

Why I attend

" Where else do you have this many countries working together? That's peace. It's like you're traveling the world but you are in one place."

Gathered tips to make her traditional noontime club more accessible



Robin Hollingsworth,
Rotary Club of Franklin, Kentucky

" I am looking for what projects others are doing, how they go about it, and how different that is from what we are doing."

Used her convention time to "cross-fertilize" ideas with global members



Levina Owusu,
Rotary Club of Accra, Ghana

" No matter what we do, we can't get this energy at our club or sitting in a district conference.
It has to happen here at the convention."

Impressed by a breakout session on using artificial intelligence to boost project results

Nitesh Joshi,
Rotary Club of St. Albans-Verulamium, England

Members can't help but smile when you ask why they attend the Rotary International Convention. They're uplifted by celebrated speakers, bubbling with ideas from learning sessions, and joyful when handshakes turn into friendships. These first-time attendees this year shared why you don't want to miss the convention June 13–17 in Taipei.

Register now at convention.rotary.org.

ஆளுநர் குழு

RID 2981	லியோன் J
RID 2982	சிவசுந்தரம் P
RID 3000	கார்த்திக் J
RID 3011	ரவீந்தர் குக்னானி
RID 3012	அமிதா அனில் மொஹிந்த்ரு
RID 3020	கல்யாண் சக்ரவர்த்தி Y
RID 3030	தியானேஷ்வர் P ஷேவாலே
RID 3040	சுஷில் மல்ஹோத்ரா
RID 3053	நிஷா ஷெகாவத்
RID 3055	நிகம்குமார் L சௌத்ரி
RID 3056	பிரக்யா மேத்தா
RID 3060	அமர்தீப் சிங் புனெட்
RID 3070	ரோஹித் ஓபராய்
RID 3080	ரவி பிரகாஷ்
RID 3090	பூபேஷ் மேத்தா
RID 3100	நிதின்குமார் அகர்வால்
RID 3110	ராஜன் வித்யார்த்தி
RID 3120	அசுதோஷ் அகர்வால்
RID 3131	சந்தோஷ் மதுகர் மராத்தே
RID 3132	சுதீர் V லத்தூர்
RID 3141	மணீஷ் மோத்வானி
RID 3142	ஹர்ஷ் வீரேந்திர மகோல்
RID 3150	ராம் பிரசாத் S V
RID 3160	ரவீந்திரா M K
RID 3170	அருண் டேனியல் பண்டாரே
RID 3181	ராமகிருஷ்ண P கண்ணன்
RID 3182	பலாக்ஷா K
RID 3191	ஸ்ரீதர் B R
RID 3192	எலிசபெத் செரியன் பரமேஷ்
RID 3203	தனசேகர் B
RID 3204	பிஜோஷ் மானுவல்
RID 3205	ரமேஷ் G N
RID 3206	செல்லா K ராகவேந்திரன்
RID 3211	டினா ஆண்டனி குன்னும்கல்
RID 3212	தினேஷ் பாபு J
RID 3231	சுரேஷ் V
RID 3233	தேவேந்திரன் D
RID 3234	வினோத்குமார் சரோகி
RID 3240	காமேஸ்வர் சிங் எலங்பம்
RID 3250	நம்ரதா
RID 3261	அமித் ஜெயஸ்வால்
RID 3262	மனோஜ்குமார் திரிபாதி
RID 3291	ரமேந்து ஹோம்சௌதுரி

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

அறங்காவலர் குழுவினர்

M முருகானந்தம் RID 3000
RI Director &
Chairman, Rotary News Trust

KP நாகேஷ் RID 3191
RI Director

Dr பரத் பாண்ட்யா RID 3141
TRF Trustee

ராஜேந்திர K சாபூ RID 3080

கல்யாண் பானர்ஜி RID 3060

சேகர் மேத்தா RID 3291

அசோக் மகாஜன் RID 3141

P T பிரபாகர் RID 3234

Dr மனோஜ் D தேசாய் RID 3060

C பாஸ்கர் RID 3000

கமல் சங்வி RID 3250

Dr மகேஷ் கோட்பாகி RID 3131

A S வெங்கடேஷ் RID 3234

ராஜு சுப்ரமணியன் RID 3141

அனிருதா ராய்சௌத்ரி RID 3291

குலாம் A வானதி RID 3141

செயற்குழு உறுப்பினர்கள் (2025–26)

ரோஹித் ஓபராய் RID 3070
தலைவர், ஆளுநர் குழு

தியானேஷ்வர் ஷேவாலே RID 3030
துணைத்தலைவர், ஆளுநர் குழு

M K ரவீந்திரா RID 3160
செயலாளர், ஆளுநர் குழு

செல்லா K ராகவேந்திரன் RID 3206
பொருளாளர், ஆளுநர் குழு

ஆசிரியர்
ரஷீதா பகத்

துணை ஆசிரியர்
ஜெய்ஶ்ரீ பத்மநாபன்

நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
rotarynews@rosaonline.org
www.rotarynewsonline.org

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

TRF
தலைவரிடமிருந்து...

மிகப் பெரிய அளவில்...

2020–21 ரோட்டரி தலைவராக இருந்தபோது, நான் ஒரு புதிய முன்னெடுப்புக்கான நம்பிக்கைகளைப் பகிர்ந்துகொண்டேன்: பெரிய அளவுத் திட்டங்கள்.

ரோட்டரியின் முதல் பெரிய அளவுத் திட்ட நல்கையைப் பெற்ற “மலேரியா இல்லாத ஜாம்பியா-வுக்கான கூட்டாளர்களின்” வெற்றியைத் தொடர்ந்து, கேட்ஸ் அறக்கட்டளையும் வேர்ல்ட் விஷனும் நம்மிடம் இன்னும் பெரிய திட்டங்களைச் செய்யக் கோரினார்கள். ரோட்டரியால் சிறந்தவற்றை நடத்தமுடியும் என்று அவர்களுக்குத் தெரியும். அந்தக் கூட்டுப்பணியிலிருந்து வளர்ந்த ரோட்டரி நலமான சமூகங்கள் சவால் இப்போது இளம்பிள்ளைவாதத்தை அகற்றுதலுக்கு அடுத்தபடியாக ரோட்டரியின் மிகவும் குறிப்பிடக்கூடிய நோய்த் தடுப்பு முன்னெடுப்பாகியுள்ளது.

நலமான சமூகங்கள் சவால், ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் இறப்புக்குக் காரணமாக உள்ள நிமோனியா, மலேரியா, வயிற்றுப்போக்கு நோய்களை எதிர்க்கும் இலக்கைக் கொண்டுள்ளது. இந்த முன்னேற்றத்துக்குப்பிறகும், இந்த நோய்கள் ஆண்டுக்கு 1 மில்லியன் இளம் உயிர்களைப் பறிக்கின்றன.

ரோட்டரி அறக்கட்டளை, கேட்ஸ் அறக்கட்டளை, வேர்ல்ட் விஷன், நலச் சமநிலைக்குப் பாடுபடும் பன்னாட்டு இலாப நோக்கில்லா அமைப்பான PATH ஆகியோருக்கிடையிலான இந்த வியூகக் கூட்டணி இப்போது காங்கோ மக்களாட்சிக் குடியரசு, மொசாம்பிக், நைஜீரியா, ஜாம்பியாவில் உயிர்களைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது.

நம் கூட்டணிகள் மாற்றத்தை உண்டாக்கப் பாடுபடும் மக்களால் ஆனவை. அவர்களில் ஒருவரான சிமொயோ-பிளானால்டோ, மொசாம்பிக், ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவரும், நலமான சமூகங்கள் சவாலின் தேசிய ஒருங்கிணைப்பாளரும் 9210 மாவட்டத்தின் உதவி ஆளுநருமான ஜிசெலா பெட்டென்கோர்ட் மிர்காவோ சொல்கிறார்:

மொசாம்பிக்கில் தடுக்கக்கூடிய நோய்கள்தான் குழந்தைகளின் இறப்புக்கு முன்னணிக் காரணங்களாக உள்ளன. சமூக நலப் பணியாளர்கள் உயிர் காக்கும் கல்வி, தடுத்தல் கருவிகள், எளிதில் எட்ட இயலாத பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்குத் தொடக்கச் சிகிச்சை அளிக்கப் பயிற்சி பெற்றுள்ளனர். இந்தத் திட்டம் பரிசோதித்தல், நோய் கண்டறிதல், சிகிச்சைக்கான அணுகலை விரிவாக்கி, குழந்தைகளுக்குச் சரியான நேரத்தில் பராமரிப்பு கிடைப்பதை உறுதி செய்கிறது. ரோட்டரி குரல் கொடுத்தலை ஒருங்கிணைக்கிறது. நலமான சமூகங்கள் சவால் முதல் ஆண்டில் நான்கு மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான வீடுகளை எட்டியது, 4,400க்கும் மேற்பட்ட சமூக நலப் பணியாளர்களை ஆதரித்துக் குழந்தைகளைப் பாதுகாத்தது.

நலமான சமூகங்கள் சவால், பெரிய அளவுத் திட்டங்கள், இளம்பிள்ளை வாதத்தை அகற்றலின் வழியாக, கூட்டுப்பணிகள், சமூக ஊடாடல், தொலைநோக்கினால் பன்னாட்டு நலத்தை மாற்றியமைத்து உயிர்களைக் காக்கலாம் என்று ரோட்டரி நிரூபிக்கிறது.

ரோட்டரி அறக்கட்டளைக்கு உங்கள் ஆதரவின் மூலம், வாழ்க்கையை மாற்றும் இந்தப் பணியில் நீங்கள் பங்கேற்கிறீர்கள்.

ஹோல்கர் நாக்
TRF அறங்காவலர் தலைவர்

Membership & TRF contribution summary





Rotary worldwide

Rotary clubs	: 36,625	Rotary members	: 1,167,882
Rotaract clubs	: 9,841	Rotaract members	: 143,470
Interact clubs	: 18,549	Interact members	: 426,788
RCCs	: 14,258		As on November 18, 2025

*Membership figures as on November 1, 2025.
*TRF contribution figures as on October 31, 2025.

TEJAS
WINGS OF CHANGE

ஒற்றுமையான மற்றும் அமைதியான சமூகங்களை உருவாக்க நாம் பாடுபடுவோம்

ரஷீதா பகத்

இன்று நாம் வாழும் உலகின் நிலையைப் பார்க்கும்போது, ரோட்டேரியர்கள் ஒன்றிணைந்து “ரோட்டரியை அமைதிக்கான கருவியாகப் பயன்படுத்த வேண்டும். பிளவுகளைக் கடந்து, நீங்கள் வேறு வழிகளில் சந்திக்க முடியாத நபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். நாம் செய்யும் சேவையின் மூலம் நமது சமூகங்களை மிகவும் ஒத்திசைவான, ஆரோக்கியமான மற்றும் அமைதியான சமூகங்களாக மாற்ற முயற்சிப்போம். அமைதி என்பது வறுமை, தீங்கு, நோய், சுற்றுச்சூழல் மாசுபாடு, சுத்தமற்ற நீர் மற்றும் மோசமான சுகாதாரம் ஆகியவற்றிலிருந்து மக்களை விடுவிப்பதாகும், அமைதி இன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது,” என்று டெல்லியில் நடைபெற்ற மண்டலங்கள் 4,5,6 மற்றும் 7 இன்ஸ்டிடியூட்டின் தேஜஸ் விங்ஸ் ஆஃப் சேஞ்ச் என்ற தலைப்பிலான தொடக்க அமர்வில் RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ கூறினார்.

கல்வி வாய்ப்புகள், மருத்துவ வசதி மற்றும் வறுமையின்மை ஆகியவற்றை நீங்கள் வழங்கும்போது அமைதியும் வருகிறது என்றார் அவர். இந்த ஆண்டுக்கான தலைமைச் செய்தியான ‘நன்மைக்காக ஒன்றிணைவோம்’ என்பதைப் பற்றி விரிவாகப் பேசுகையில், இது வெறும் கோஷம் அல்ல அதை விட பெரியது என்றார். கடந்த பத்தாண்டுகளில் “நாம் ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் பல்லாயிரக்கணக்கான புதிய உறுப்பினர்களை வரவேற்றிருக்கிறோம், ஆனால் கிட்டத்தட்ட அதே எண்ணிக்கையிலானவர்கள் ஆண்டுதோறும் வெளியேறுகிறார்கள். வளர்ச்சிக்கும் வெளியேற்றத்திற்கும் இடையிலான இந்தச் செயல்பாடு ரோட்டரியின் பிரச்சினை அல்ல... அது உலகின் பிரதிபலிப்பு. மக்கள் அர்த்தத்தைத் தேடுகிறார்கள், ஆனால் அவர்கள் அதை எப்போதும் கண்டுபிடிப்பதில்லை.”

ரோட்டரி எதற்காக நிற்கிறது என்று மக்கள் அறியும் போது அதில் இணைகிறார்கள், ஆனால் அது “வெறும் கட்டமைப்பாகவோ அல்லது நேரத்தை செலவிடும் வழியாகவோ” மாறும்போது, அவர்களின் எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் அல்லது ஆசைகளைப் பூர்த்தி செய்யாதபோது அவர்கள் வெளியேறுகிறார்கள் என்று அரெஸ்ஸோ கூறினார். “நாம் நன்மைக்காக ஒன்றிணைந்து, ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு அங்கீகார உணர்வை வழங்கினால், அவர்களை நமது அமைப்பின் அத்தியாவசியப் பகுதியாக

RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ

உணர வைத்தால், மேலும் செயல் வீரர்களாக மற்றும் மாற்றத்தை உருவாக்குபவர்களாக அவர்களுக்கு சிறந்த அனுபவங்களை வழங்க சங்கங்கள் உறுதிபூண்டால், அவர்கள் ரோட்டரியை விட்டு வெளியேற மாட்டார்கள்."

ரோட்டேரியர்கள் தாங்கள் வாழும் சமூகங்களுக்கு பங்களிப்பாளர்களாக இருந்து, நீடித்த மாற்றத்தை உருவாக்க ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொண்டு, நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டு அமைதிக்கான அடித்தளத்தை எப்படி உருவாக்குவது என்பதை செயல்முறையாகக் காட்டுவதன் மூலம் நல்லதிற்காக ஒன்றிணையலாம். அத்தியாவசிய மனித தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவி செய்வதும், பிளவுகளை கடந்து செல்வதும், வேறுபாடுகளைக் கடந்து நட்புகளை உருவாக்குவதும் இதற்கான வழிகளாகும்.

உறுப்பினர் நிலையில் இருந்து தாங்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று தங்கள் உறுப்பினர்களுடன் சரிபார்க்குமாறு ரோட்டரி தலைவர்களை RI தலைவர் வலியுறுத்தினார். "ரோட்டரியில் இருந்து தாங்கள் என்ன பெற விரும்புகிறார்கள் என்பது பற்றி வெளிப்படையான விவாதங்களை நடத்துங்கள், மேலும் உங்கள் உறுப்பினர்களின் அனுபவங்களை மேம்படுத்த உங்களால் முடிந்தவரை தனிப்பட்ட முறையில் தொடர்புகொள்ளுங்கள். உங்கள் சங்கம் நேர்மறையான மாற்றத்தை உருவாக்க என்ன செய்ய முடியும் என்பதை அறிய உங்கள் சமூகங்களில் உள்ளவர்களிடம் பேசுங்கள். பல சந்தர்ப்பங்களில், அது சேவைத் திட்டங்களுக்கான புதிய வாய்ப்புகளை வழங்கும். அர்த்தமுள்ள உரையாடல்கள் நடத்துவதும் அதே அளவிற்கு முக்கியமானது."

உலகை அனைவருக்கும் ஒரு சிறந்த இடமாக மாற்றுவதற்கான ரோட்டரியின் அடிப்படைக் கொள்கையை மீண்டும் வலியுறுத்திய அரெஸ்ஸோ, "ஒரு இளைஞரை அமைதி அறிஞராக அனுப்புவது அல்லது மற்றொரு இளைஞரை ஒரு இளைஞர் பரிமாற்றத் திட்டத்திற்காக வேறொரு நாட்டிற்கு அனுப்புவது அமைதிக்காகப் பணியாற்றுவதாகும். நோய்களைக் குணப் படுத்துவது, சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் இல்லாத இடங்களில் அதை வழங்குவது அமைதிக்காகப் பணியாற்றுவதாகும். பெண்கள் பாதுகாப்பாகப் பிரசவிப்பதை உறுதிசெய்வது, சுற்றுச்சூழலை மேம்படுத்துவது, பெண்களின் கல்விக்கு ஆதரவளிப்பது மற்றும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைத் தக்கவைப்பது ஆகியவை அமைதியை மேம்படுத்தும்" என்று கூறினார்.

"ரோட்டரி சேவை ஒவ்வொரு நாளும் உலகை இன்னும் கொஞ்சம் சுதந்திரமாக்குகிறது, அவ்வாறு செய்வதன் மூலம் நாம் அமைதிக்கான நிலைமைகளை உருவாக்குகிறோம். அகிம்சையே பலமானவர்களின் ஆயுதம் என்று ஒருமுறை காந்தி கூறியிருக்கிறார். அதனால்தான் இரக்கம், அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டப்பட்ட ஒரு உலகத்தின் நன்மைக்காக நாம் ஒன்றிணைகிறோம்."

RI தலைவர் பின்னர் இந்திய மரபுகள், வரலாறு மற்றும் வேதங்கள் வழங்கும் அனைத்து நேர்மறையான விஷயங்களைப் பற்றியும் பேசினார். "இங்கே இந்தியாவில் தாராள மனப்பான்மை என்பது ஒரு நிகழ்வு அல்ல, அது ஒரு வாழ்க்கை முறை; தேவைப்படும் யாருக்கும் உணவு வழங்கும் அன்னதானம் என்ற கருத்தில் இருந்து, குருத்வாராக்களின் பெரிய சமூக சமையலறைகள் வரை, அண்டை நாடுகளை ஒன்றாக இணைக்கும் அன்றாட கருணைகள் வரை, கொடுப்பது என்பது உங்கள் அன்றாட அனுபவத்தில் பின்னப்பட்டுள்ளது."

கிருஷ்ணர் பகவத்கீதையில் எந்த எதிர்பார்ப்பும் இன்றி தானம் வழங்கும்போது அது புனிதமாகிறது என்று கூறியிருக்கிறார். செய்தன்ய உபநிஷத் மனிதர்களை தாழ்மையுடன், மகிழ்ச்சியுடன் வழங்கும்படியும், கொடுப்பின் அளவை அல்ல இதயத்தின் விசாலத்தை மதிக்கும்படி அறிவுறுத்தியுள்ளது, இவை அனைத்தும் ரோட்டரியின் உயர்ந்த இலக்குகளோடு ஆழ்ந்த தொடர்புடையவையாகும். "ரோட்டரியின் 4-வழிச் சோதனை இந்தியாவில் தர்மம் மற்றும் சேவை என்ற உணர்வுடன் எதிரொலிக்கிறது எல்லாவற்றிற்கும் மேலாக அது 'வசுதைவ குடும்பகம்', உலகம் ஒரு குடும்பம் என்பதைப் பிரதிபலிக்கிறது."

ஆனால் ஒரு பெரிய சவால் நவீனத்துவத்தில் இருந்து வருகிறது... "அது ரோம், மிலன் அல்லது டெல்லி என எங்கிருந்தாலும் நாம் அதே அலையை உணர்கிறோம்; டிஜிட்டல்மயமாக்கல், வேகம் மற்றும் இணைப்பு துண்டிப்பு. உலகம் வேகமாக சுழல்கிறது... மதிப்புகள் உருவாவதற்கு முன்பே கரைந்து போகின்றன, நிறுவனங்கள் உயிரற்றதாக உணர்கின்றன, தேர்வுகள் பெருகினாலும் குறைவான முக்கியத்துவம் பெறுகின்றன, அதிகாரம் பொறுப்பை விஞ்சுகிறது." இத்தகைய உலகத்தில், ரோட்டரி மனிதர்களை சாதனைகளால் அளவிடும் இடமாக அல்ல, உரையாடலுக்குள் வரவேற்கப்படும் இடமாக இருக்க முடியும். "ஆனால் இதைச் செய்ய, நாம் செய்யும் வேலைகள் மற்றும் நாம் பின்பற்றும் அட்டவணைகள் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். பெரும்பாலும் ஆளுநரின் அல்லது சங்கத் தலைவரின் பதவிக்காலத்துடன்

திட்டங்கள் முடிவடைகின்றன. ஆனால் கல்வி மற்றும் அமைதி போன்ற உண்மையிலேயே முக்கியமான பணிகளுக்கு நேரமும் தொடர்ச்சியும் தேவை. ரோட்டரியை ஒரு சிறந்த தொடர் ஓட்டப் பந்தயமாக நான் நினைக்கிறேன். எங்களிடம் பல ரிலே கோள்கள் உள்ளன, சங்கத் தலைவர்கள், மாவட்ட ஆளுநர், RI தலைவர்; நாம் ஒவ்வொருவரும் நம் ஓட்டத்தை ஓடுகிறோம், நம்மால் முடிந்தவரை சிறப்பாகச் செய்கிறோம், நம்மால் முடிந்த அனைத்தையும் சாதிக்கிறோம், பின்னர் கோளைக் கடத்துகிறோம். ஆனால் நாம் கைமாற்றுவதை தவறவிட்டால் அல்லது அடுத்த ஓட்டப்பந்தய வீரரை இடறச் செய்தால், நாம் எவ்வளவு வேகமாகச் சென்றாலும் உபயோகம் இல்லை. ஒரு குழுவாக மட்டுமே நாம் வெற்றி பெறுகிறோம், தனியாகவோ அல்லது தனிநபர்களாகவோ அல்ல. எனவே நாம் விரைவாகச் செல்வதை விட அதிகமாகச் செய்ய வேண்டும், நாம் கவனத்துடனும் செயல்பட வேண்டும் மற்றும் அடுத்த தலைவர் வெற்றிபெற உதவ தயாராக இருக்க வேண்டும். நாம் எந்த திசையில் ஓட வேண்டும் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்."

இங்கே அரெஸ்ஸோ ஆலிஸ் இன் வொண்டர்லேண்டில் இருந்து மேற்கோள் காட்டினார்; ஆலிஸ் செஷயர் பூனையிடம் வழிக் கேட்கும்போது, அவள் எங்கு செல்ல விரும்புகிறாள் என்று கேட்கப்படுகிறது. எங்கே என்று எனக்கு கவலை இல்லை, என்று ஆலிஸ் கூறுகிறாள், அதற்கு பூனை பதிலளிக்கிறது: அப்படியானால் நீங்கள் எந்த வழியில் சென்றாலும் பரவாயில்லை! "இது ஒரு எச்சரிக்கை, இந்த ஆண்டு மட்டுமல்ல, அதற்கு அப்பாலும் நாம் எங்கு செல்ல விரும்புகிறோம் என்று நமக்குத் தெரியாவிட்டால் எந்த திசையும் முக்கியமில்லை. மூலோபாய சிந்தனை நமக்கு பின் வருபவர்களுக்கு களத்தைத் தயாரிக்க உதவுகிறது. தலைவர்கள் மற்றும் ஈகோக்களைக் கடந்து செல்லும் திட்டங்களுக்கு நாம் உறுதியளிப்போம், குறுகிய கைதட்டலுக்காக அல்லாமல் நீண்ட காலத்திற்கு நாம் கட்டியெழுப்புவோம்," என்று அரெஸ்ஸோ கூறினார்.

இந்தியாவில் இது நடைமுறையில் எப்படி இருக்கிறது என்பதை ரோட்டரி உலகிற்கு இந்தியா காட்டியது. இந்தியாவில் நீர் அணுகல் மற்றும் சிறந்த அறுவடைக்கான ரோட்டரி ப்ரோக்ராம் ஆப் ஸ்கேல்

தலைவர் அரேஸ்ஸோ மற்றும் இன்ஸ்டிடியூட் கன்வீனர் RI இயக்குனர் K P நாகேஷ் ஆகியோர் இந்திய துணை ஜனாதிபதி C P ராதாகிருஷ்ணனுக்கு நினைவு பரிசு வழங்கினர். இடமிருந்து: இன்ஸ்டிடியூட் தலைவர் PDG ஷரத் ஜெயின், RID 3160 DGN திரிவிக்ரம் ஜோஷி, ஸ்வீடனைச் சேர்ந்த TRF அறங்காவலர் ஆன்-பிரிட் அசெபோல், RI இயக்குநர் M முருகானந்தம், இன்ஸ்டிடியூட் செயலாளர் மஞ்சு பாட்கே மற்றும் RC பெங்களூர் ஆர்ச்சாட்ஸ் சேர்ந்த கிரண் குமார் ஆகியோரும் உடன் உள்ளனர்.

கூட்டாளர்களைக் கவனியுங்கள். “இந்திய ரோட்டேரியர்களால் வழிநடத்தப்படும் இந்த ஐந்து ஆண்டு முன்முயற்சி தடுப்பணைகள், குளங்கள் கட்டுதல், நிலையான விவசாயத்தைக் கற்பித்தல் மற்றும் நிலத்தடி நீர்த்தேக்கங்களை மீட்டமைத்தல் போன்ற செயல்களால் கிராமப்புற வாழ்க்கையை மாற்றியமைக்கிறது. இந்த எண்கள் ஈர்க்கக்கூடியவை: நிலத்தடி நீர் மட்டம் ஒவ்வொரு ஆண்டும் 10 முதல் 50 சதவீதம் வரை உயர்கிறது, ஆனால் எண்களுக்கு அப்பால் உண்மையிலேயே குறிப்பிடத்தக்க ஒன்று உள்ளது. ஒரு தாய் இனி தண்ணீர் எடுக்க நீண்ட தூரம் நடக்க வேண்டியதில்லை, ஒரு விவசாயி ஆண்டுக்கு இரண்டு அறுவடை செய்கிறார், ஒரு குழந்தை தண்ணீர் எடுப்பதற்குப் பதிலாக இப்போது பள்ளிக்குச் செல்கிறது. இதுவே இந்திய மரபில் உள்ள “தான்” என்ற கொடுப்பின் எண்ணம். அதே உணர்வே காந்தியின் அஹிம்சை மந்திரத்துக்கும் சக்தியளிக்கிறது, குருத்வாராவின் அன்னதான சமையலறைகளையும் இயக்குகிறது, ரோட்டரியின் சேவைகளையும் முன்னெடுக்கிறது.”

ஆசையற்ற மற்றும் இருண்ட காலத்தில் நாடுகடத்தப்பட்ட தீர்க்கதரிசி பாருக் ‘கிழக்கைப் பாருங்கள்’ என்று அழைப்பு விடுத்தது போல, இன்று ரோட்டரியும் உருவகமாக மட்டுமல்லாமல், நிஜ அர்த்தத்திலும் கிழக்கைப் பார்க்க இரண்டு காரணங்கள் உள்ளன. கிழக்கு, குறிப்பாக இந்தியா, “உறுப்பினர் நிலையில் மிகவும் வலிமையான மற்றும் துடிப்பான வளர்ச்சியைக் காண்கிறது. இந்தியாவில் நாம் ஒரு விசித்திரமான மாற்றத்தை காண்கிறோம் – உறுப்பினர் எண்ணிக்கை மட்டும் அதிகரிப்பதல்ல, அதன் அர்த்தமும் திசையும் மேலும் தெளிவாகிறது.

ரோட்டரி என்பது சங்கங்களோ திட்டங்களோ மட்டுமல்ல; அது மனிதர்களால் உருவானது. மக்கள் கடமையால் மட்டும் தங்குவதில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்புடைய உணர்வு ஏற்பட்டால் தான் தங்குகிறார்கள்.

“இங்கே ரோட்டரி குறியீடாக மட்டுமல்லாமல், உறுதியாகவும், மகிழ்ச்சியாகவும், ஆன்மீக ரீதியாகவும் உயர்ந்து வருவதைக் கண்டு அவர் மகிழ்ச்சியடைந்தார். “நாம் நமது சங்கங்களை எண்ணிக்கையில் மட்டுமல்ல, உணர்விலும் வளர்த்தால்,

நான்கு வழி சோதனையை வெறும் வார்த்தைகளாக அல்லாமல் உண்மையான வழிகாட்டியாகப் பயன்படுத்தினால், மற்றவர்களை ரோட்டரிக்குள் சேவை செய்ய மட்டுமல்ல, சேர்ந்திருக்கவும் அழைத்தால் - அப்போது நாம் உறுப்பினர்களை மட்டும் தக்கவைக்காமல், மற்றவர்களுக்கு ஒரு உண்மையான ஒளியாக மாறுவோம். வெறும் கோஷங்களின் இடமாக அல்ல, உண்மையான மாற்றத்தின் தளமாக மாறுவோம். இதனால் நாம் உலகத்தையே மாற்ற முடியும்.” என்கிறார் அரெஸ்ஸோ.

தொடர்பாளர் மற்றும் RI இயக்குநர் K P நாகேஷ் தொடக்க அமர்வில் பேசுகையில், நிறைய கேள்விகள் மற்றும் ஆலோசனைகளுக்குப் பிறகு, டெல்லி மாநாட்டு இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது என்றார். இந்த பிராந்தியத்தில் ரவீந்தர் குட்னானி (RID 3011) மற்றும் அமிதா மொகிந்துரு (RID 3012) ஆகிய இரண்டு மிகச் சிறந்த ஆளுநர்கள் இருந்தனர், “அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சிறப்பாக செயல்படுத்தினர், மேலும் “மிகவும் ஒழுக்கமான மற்றும் உறுதியான PDG ஷரத் ஜெயின் விரிவான திட்டமிடலைச் செய்தார். இதன் விளைவாக, நாங்கள் 1,456 பதிவுகளின் சாதனையைப் பார்த்தோம்.”

இன்ஸ்டிடியூட்டின் மூன்று நாட்களுக்கு அனைவருக்கும் ஒரு கார் வழங்குவதைத் தவிர, இந்தியாவில் இருந்து போலியோவை ஒழிக்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் போன்ற பல புதிய திட்டங்களைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது. “போலியோ முழுமையாக ஒழிக்கப்படும் வரை இந்த நபர்களை அங்கீகரிப்பதற்கு நம்மால் காத்திருக்க முடியாது என்று நாங்கள் நினைத்தோம், எனவே இந்த காரணத்திற்காக உண்மையிலேயே கடினமாக உழைத்தவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை வழங்குவதற்கு நாங்கள் முடிவு செய்தோம்.”

அறிமுகப்படுத்தப் பட்ட மற்ற புதிய யோசனை, ஆர்க் க்ளம்ஃப் பட்டியலில் ஒரு மில்லியன் டாலர் சங்கத்தை உருவாக்குவதாகும். அமெரிக்காவில் ஏற்கனவே 700க்கும் மேற்பட்ட AKS உறுப்பினர்கள் இருக்கின்றனர், இந்தியா அதன் எண்ணிக்கை 258ஐ அடைந்தது, மேலும் “இந்த எண்ணிக்கையை விரைவில் 500-ஆக உயர்த்த விரும்புகிறோம். பல AKS உறுப்பினர்கள் லெவல் 1 மற்றும் 2-ஐ அடைந்து அத்துடன் இருந்து விடுகிறார்கள் என்று நாங்கள் கண்டறிந்தோம். எனவே நாங்கள் மில்லியன் டாலர் சங்கத்தைத் தொடங்க முடிவு செய்தோம், மேலும் அந்தச் சங்கத்தில் $1 மில்லியன் உறுதிமொழி களுடன் ஏற்கனவே 7 பேர் உள்ளனர். நிச்சயமாக ராஜஸ்ரீ பிர்லா மற்றும் DGE ரவிசங்கர் டகொஜு ஆகியோர் ஏற்கனவே TRFக்கு பல மில்லியன் டாலர்களை வழங்கியுள்ளனர்.”

RI இயக்குனர்கள் நாகேஷ் மற்றும் முருகானந்தம்.

பல AKS உறுப்பினர்களை அணுகியபோது, மேலும் பலர் $1 மில்லியன் சங்கத்தில் சேர முன்வந்தனர், மொத்த எண்ணிக்கை 14 ஆக உயர்ந்தது என்று நாகேஷ் மேலும் கூறினார். ரோட்டரி உள்ளூர் சமூகங்களுக்கு, குறிப்பாக பாதுகாப்புப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு, ஒரு பெரிய உதவியை நீட்டும் பல முயற்சிகள் இன்ஸ்டிடியூட்டின் போது வெளிப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இன்ஸ்டிடியூட்டின் தலைவர் ஷரத் ஜெயின், இது ஒரு தீவிரமான பயிற்சித் திட்டமாக இருந்தாலும், “கற்றல் மற்றும் தலைமைத்துவ திறன்களை வேடிக்கை மற்றும் சிரிப்புடன் கலக்க” கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று பிரதிநிதிகளுக்கு உறுதி யளித்தார். “ரோட்டரி கூட்டுறவு ஏன் தனித்துவமானது என்பதை உங்களுக்கு நினைவூட்டும் ஒரு திட்டத்தை நாங்கள் உங்களுக்காகத் தயாரித்துள்ளோம்” என்றார்.■

TEJAS
WINGS OF CHANGE

இலங்கையில் 2026 ரோட்டரி மண்டல மாநாடு

V முத்துகுமரன்

மாநாட்டில் பாப் இசை நட்சத்திரம் யோஹானி

சமூக ஊடகங்களில் வைரலான "மணிகே மகே ஹிதே" பாடலைப் பாடிய பாப் இசை நட்சத்திரம் யோஹானி, 21 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கைக்கு ரோட்டரி மண்டல மாநாடு நடக்க போவது மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

ஆம். மண்டலங்கள் 4,5,6 மற்றும் 7-க்கான அடுத்த மாநாடு, 2026-ம் ஆண்டு டிசம்பரில் கொழும்பின் மையப் பகுதியில், சிட்டி ஆஃப் ட்ரீம்ஸ் தங்கும் விடுதியில் நடைபெற உள்ளது. தேஜஸ் மாநாட்டில் அற்புதமான நிகழ்ச்சியை வழங்கிய பிறகு, பாப் இசை நட்சத்திரம் கூறுகையில், "ஒரு நிறுவனச் செயலாளராக ரோட்ராக்டில் நான் இருந்த ஆண்டுகள் என்னை இன்று உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளது" என்றார்.

2026 ரோட்டரி மாநாட்டின் தலைவரான PDG கௌரி ராஜனுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்ட, யோஹானி, அவர் எனக்கு உத்வேகத்தை அளித்தார், என்றார். அவரது யூடியூப் சேனலுக்கு நான்கு மில்லியனுக்கும் அதிகமான சந்தாதாரர்கள் உள்ளனர். மாதம் 1.5 மில்லியன் பேர் பார்வையாளர்களாகவும் உள்ளனர். 2014–15-ம் ஆண்டில் கௌரி, மாவட்ட ஆளுநராக இருந்தார். "நான் யோஹானியை முதன் முதலாக சந்தித்தபோது, எனக்கு பாடத் தெரியாது, எனக்கு அந்த திறமை இல்லை என்று கூறினார். ஆனால், இப்போது உலக அரங்கில் பிரபலமான பாடகராக இருக்கிறார்" என்று கௌரி குறிப்பிட்டார்.

இலங்கை மாநாட்டின் தலைவராக இருக்கும் RI இயக்குநர் M முருகானந்தம், "Aim High என்பது வரவிருக்கும் நிகழ்வின் கருப்பொருளாக இருக்கும். இதில் குறைந்தபட்சம் 1,000 பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்" என்று கூறினார்.

"தீவுபோன்ற பகுதியான இலங்கையின் அழகு ஒப்பிட முடியாதது மற்றும் வனவிலங்குகள் நிறைந்தது. உலகில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்த இடமாகும். எனது குடும்பத்தினர் இங்குள்ள தங்கும் விடுதிகளில் அதிக நேரத்தை செலவிடுகின்றனர்" என்றும் PRIP K R ரவீந்திரன் குறிப்பிட்டார்.

இந்தியா முழுவதிலுமுள்ள மற்றும் நேபாளம், பூடான் நாட்டு பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்த PDG கௌரி, இயற்கை காட்சிகள் நிறைந்த இடத்தில் நடைபெற உள்ள கொழும்பு மாநாடு, டிஜிட்டல் யுக மாநாடாக இருக்கும் என்று தெரிவித்தார். இந்த மாநாட்டை சிறப்பாக வழிநடத்த ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. PRIP ரவீந்திரன் பிரதான ஆலோசகராக இருப்பார். மேலும் மதுரை மண்டலத்தைச் சேர்ந்த PDG Y குமணன் மற்றும் PRID ராஜு சுப்ரமணியன் ஆலோசகர்களாகவும், மாநாட்டுக் குழு தலைவராக PRID C பாஸ்கர் மற்றும் PRID A S வெங்கடேஷ் பொது பயிற்சி யாளராகவும் இருப்பார்கள் என்று கௌரி கூறினார்.■

மூத்த ரோட்டேரியன்களுடன் கொழும்பு நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் RID M முருகானந்தம்.

RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ (வலது) மற்றும் PRIP K R ரவீந்திரன்.

தலைமைத்துவத்தின் அறிவுரை

ஜெய்ஸ்ரீ

“உங்கள் மாவட்டத்தின் தலைவர் நீங்கள் அல்ல ரோட்டரி உலகில் மிக முக்கியமான நபர் எப்போதுமே, சங்கத்தலைவர் மட்டுமே,” என்று ரோட்டரி மண்டல இன்ஸ்டிடியூட்டின் வருடாந்திரப் பயிற்சித் திட்டத்தின் நிறைவு விழாவில், DGE-களிடம் RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ கூறினார்.

“சமூகத்தில் புதிய உறுப் பினர்களைக் கண்டறிவதும், நிதி திரட்டுவதும், தேவைகளை அறிந்து மாற்றத்துக்கான திட்டங்களை உருவாக்குவதும் சங்கத்தலைவரின் கடமையாகும். உங்கள் முதன்மை பணி சங்கத் தலைவர்களை ஆதரிப்பதே,” என்று கூறிய அவர், தலைவர்களைப் புரிந்துகொள்வதற்கும் சந்திப்பதற்கும் நட்பு உருவாக்குவதற்கும் நேரம் செலவிடுமாறு வலியுறுத்தினார். “நீங்கள் தலைவர்களுக்குச் சிறந்த ஆதரவை வழங்கினால், இது அனைவருக்கும் மிகச் சிறந்த ஆண்டாக அமையும். ரோட்டரியில் தலைமைத்துவம் அதிகாரத்தைப் பற்றியது அல்ல; அது நோக்கம், மக்கள் மற்றும் கொள்கை சார்ந்த செயல்பாட்டைப் பற்றியது.”

சேவை, பன்முகத்தன்மை, நேர்மை, தலைமைத்துவம் மற்றும் தோழமை ஆகிய ரோட்டரியின் ஐந்து அடிப்படை பண்புகளை ஒருபோதும் தனித்தனியாகப் பார்க்கக்கூடாது என்று அரேஸ்ஸோ பிரதிநிதிகளுக்கு நினைவூட்டினார்.

தனது பாகிஸ்தான் பயணத்தை நினைவுகூர்ந்த அவர், போலியோவை ஒழிப்பதற்கான ரோட்டரியின் 35 ஆண்டுகால போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு உணர்ச்சிப்பூர்வமான வேண்டுகோளை விடுத்தார். குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடும் போது கொல்லப்பட்ட 68 சுகாதாரப் பணியாளர்களின் புகைப்படச் சுவரைக் கண்டதையும், உலகளவில் 1,000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் இப்பணியில் தங்கள் உயிரை இழந்திருக்கலாம் என்பதையும் அவர் நினைவுகூர்ந்தார். “நம்மிடம் 1,000 தியாகிகள் உள்ளனர். அவர்களின் நினைவாக, இந்தப் பணியை முடிக்க வேண்டியது நமது கடமையாகும்.”

அமைதியைத் தனது ஆண்டின் மூன்றாவது குறிக்கோளாகக் குறிப்பிட்ட அரேஸ்ஸோ, “நாம் உலக அமைதிக்காக நமது அமைதி மையங்கள் அல்லது இளைஞர் பரிமாற்றத் திட்டங்கள் மூலம் மட்டுமல்லாமல், மற்ற திட்டங்கள் மூலமாகவும் பணியாற்ற வேண்டும். நமது திட்டங்கள் அமைதியை உருவாக்க வேண்டுமென்றால், நாம் ஏதாவது வித்தியாசமாகச் செய்ய வேண்டும்,” என்றார். இந்திய மாவட்டங்கள் தங்கள் எல்லைகளுக்கு அப்பால் ரோட்டரியைக் கொண்டு செல்லுமாறு வலியுறுத்தினார். “உங்கள் உலகளாவிய மானியங்களில் 99% இந்தியாவிற்குள்ளேயே உள்ளன. இந்தியா வளர்ந்துவிட்டது. இப்போது வெளிநாடுகளில், ஆப்பிரிக்காவில், பாகிஸ்தானிலும் கூட அமைதியை உருவாக்கப் பணியாற்ற வேண்டிய நேரம் இது,” என்றார்.

முன்னாள் RI தலைவர் K R ரவீந்திரன், ஒரு “சிறந்த தலைவரை” உருவாக்கும் நான்கு பண்புகளைப் பற்றிப் பேசினார்: நேர்மை, பணிவு, இரக்கம் மற்றும் தைரியம். நேர்மையைப் பற்றிப் பேசுகையில், மரப் பொம்மைகள் செய்வதில் நிபுணத்துவம் பெற்ற தச்சரான ஓலே கிர்க் கிறிஸ்டியன்சென் நிறுவிய லெகோ தொழிற்சாலைக்குச்

மாநாட்டுத் தலைவர் ஷரத் ஜெயின், PRID ராஜு சுப்பிரமணியன் மற்றும் வித்யா, தலைவர்கள் அரேஸ்ஸோ மற்றும் ஆனா, RID K P நாகேஷ் மற்றும் உமா, RID M முருகானந்தம் மற்றும் சுமதி, DGE-க்கள் அவர்களது துணைவர்களுடன் மற்றும் பயிற்சியாளர்கள் ஆகியோருடன்.

சென்றதை அவர் நினைவுகூர்ந்தார். வாடிக்கையாளர்கள் கவனிக்க மாட்டார்கள் என்றாலும், ஒவ்வொரு பொம்மைக்கும் மூன்று பூச்சு வார்னிஷ் பூசப்பட வேண்டும் என்று கிறிஸ்டியன்சென் வலியுறுத்தினார். “சிறந்தது மட்டுமே போதுமானது என்று அவர் நம்பினார். அதனால்தான் லெகோ உலகின் மிகவும் நம்பகமான பிராண்டுகளில் ஒன்றாகத் திகழ்கிறது; அதன் உண்மையான பாரம்பரியம் நேர்மையிலும், குறுக்குவழிகள் இல்லாத சிறப்பான செயல்பாட்டிலும் உள்ளது.”

உள்வரும் தலைவர்கள் அந்த உணர்வை நினைவில் கொள்ளுமாறு அவர் வலியுறுத்தினார்: “அந்த மூன்றாவது பூச்சை மறந்துவிடாதீர்கள் - அது உங்கள் அறிக்கைகளின் துல்லியத்திலோ, கணக்குகளின் வெளிப்படைத்தன்மையிலோ அல்லது நீங்கள் கொடுக்கும் வாக்குறுதிகளிலோ இருக்கலாம். நேர்மை என்பது நாம் சொல்வதல்ல; யாரும் பார்க்காதபோதும் நாம் செய்வதாகும்.”

பணிவு சமமான முக்கியத்துவம் வாய்ந்தது என்றார். அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி சாண்ட்ரா டே ஓகான்னர், அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்ட தனது கணவர் வேறொரு நோயாளியுடன் கொண்ட புதிய பந்தத்தை அன்புடன் ஏற்றுக்கொண்டதை அவர் விவரித்தார். “அதுவே உச்சமான தாழ்மை-அகங்காரம் இல்லாத மேன்மை.”

நோய் அல்லது குறைபாட்டைப் பொருட்படுத்தாமல் அண்டை வீட்டுக்காரரின் உடல்நலம் குன்றிய குழந்தையுடன் நட்பு பாராட்டிய தனது பேத்தி டெஸ்ஸாவைப் பற்றிக் குறிப்பிட்ட ரவீந்திரன், இரக்கம் பெரும் பாலும் எதிர்பாராத இடங்களிலிருந்து வருகிறது என்றார். “பெரியவர்கள் வரம்புகளைப் பார்க்கும் இடத்தில், குழந்தைகள் சாத்தியக்கூறுகளைப் பார்க்கிறார்கள்.”

இரக்கம் தைரியத்துடன் சமநிலைப்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் சுனாமிக்குப் பிந்தைய ரோட்டரியின் பள்ளிக்கட்டிடத் திட்டத்தின் போது, போராளிகள் 10 சதவீத கமிஷன் கேட்ட பதற்றமான தருணத்தை ரவீந்திரன் விவரித்தார். மிரட்டல்கள் வந்த போதிலும் அவர் அதனை மறுத்துவிட்டார். “நான் நடுங்கிக் கொண்டிருந்தேன்... ஆனால் தைரியம் என்பது பயம் இல்லாமல் இருப்பது அல்ல; பயம் இருந்தாலும் சரியானதைச் செய்வதாகும்.” சமரசம் செய்வது எளிதாகத் தோன்றும் போது தான் தலைமைத்துவ சோதனைகள் அமைதியாக வரும் என்று அவர் தேர்ந் தெடுக்கப்பட்ட ஆளுநர்களுக்கு நினைவூட்டினார்.

RI இயக்குனர் M முருகானந்தம் பொறுப்புக்கூறல், லட்சியம் மற்றும் ஒழுக்கமான செயல்பாடு ஆகியவற்றை வலியுறுத்தினார். “நீங்கள் உங்கள் மாவட்டங்களின் பிரதிநிதிகள். உங்கள் சங்கங்களிடமிருந்தும், பிராந்தியத் தலைவர்களிடமிருந்தும் எதிர்பார்ப்புகள் உள்ளன. நீங்கள் தான் வழிகாட்டிகள்.”

ஆளுநராக (2016–17) தான் இருந்த போது-TRFக்கு 1 மில்லியன் டாலர் நிதி, 10,000 உறுப்பு தானங்கள் மற்றும் 14 கின்னஸ் உலக சாதனைகள் என தான் எட்டிய லட்சிய மைல்கற்களை நினைவு கூர்ந்த அவர், DGE ஆளுநர்களை துணிச்சலான, அளவிடக்கூடிய இலக்கு களை நிர்ணயிக்குமாறு வலியுறுத்தினார். “உங்கள் பணியை தீவிரமாக எடுத்துக் கொள்ளுங்கள். 2026–27 என்பது உங்களுக்கான ஆண்டு. அந்த ஆண்டிற்காக உங்கள் நேரம், ஆற்றல் மற்றும் வளங்களைச் செலவிடுங்கள்.”

தலைமைத்துவம் என்பது மற்றவர்களுடன் ஒப்பிடுவதைப் பற்றியது அல்ல என்று அவர்களுக்கு கூறினார். “நேற்றைய உங்களையும் இன்றைய உங்களையும் மட்டுமே ஒப்பிடுங்கள்.” தகவல் தொடர்புதான் ஆளுநரின் சக்திவாய்ந்த கருவி என்று கூறிய அவர், ஆளுநர்கள் குழுவைக் கலந்தாலோசிக்கவும் வலுவான குழு உணர்வை உருவாக்கவும் அறிவுறுத்தினார். “உயர்ந்த இலக்கைக் கொள்ளுங்கள். பல மில்லியன் டாலர் மாவட்டமாக இருங்கள். அதிக AKS உறுப்பினர்களைக் கொண்டு வாருங்கள். 2030-க்குள் 300,000 உறுப்பினர்களை எட்டுவோம், அதுவே மிஷன் 2030,” என்றார்.

உள்வரும் தலைவர்களுக்கான பொதுப் பயிற்சியாளரான PRID ராஜு சுப்பிரமணியம், கவனம் ஒருபோதும் தனிப்பட்ட பிரபலத்தின் மீது இருக்கக் கூடாது என்றார். “ரோட்டரி சக்கரம், அதன் பயனாளிகள் மற்றும் அது வழங்கும் சேவை ஆகியவையே மிகவும் முக்கியமானவை.”

RID 3192-ன் DGE ரவிஷங்கர் டகோஜு, மூன்று அகில இந்தியத் திட்டங்களுக்காக இணையுமாறு தனது சக ஆளுநர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்: நாடு முழுவதும் ஒரு கோடி மரக்கன்றுகளை நடுவது, குடியிருப்பு சங்கங்கள் பறவைகள் மற்றும் விலங்குகளுக்குத் தண்ணீர் வசதி செய்வதைக் கட்டாயமாக்க அரசாங்கத்தின் ஆதரவைப் பெறுவது, மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ரோட்டரி சங்கங்கள் பழங்குடியினப் பள்ளிகளைத் தத்தெடுத்து அவற்றை மாற்றியமைக்க வலியுறுத்துவது.■

இயக்குநர்களுக்கு 3 ஆண்டு பதவிக்காலம் இருக்க வேண்டுமா?

ரஷீதா பகத்

நம் மண்டல இன்ஸ்டிட்யூட்களில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அமர்வுகளில் ஒன்று, முன்னாள் RI தலைவர் K R ரவீந்திரன் மூத்த RI தலைவர்களிடம் சில கடினமான கேள்விகளை கேட்பதுதான். இந்த முறையும் டெல்லியில் நடைபெற்ற தேஜஸ் இன்ஸ்டிட்யூட்டிலும் அது ஏமாற்றவில்லை.

இன் த க்ராஸ்ஹேர் எனப் பெயரிடப்பட்ட இந்த அமர்வில், ரோட்டரி தலைமையகத்தை அமெரிக்கா விலிருந்து மாற்ற வேண்டாமா, ரோட்டரியை உண்மையில் யார் நடத்து கிறார்கள் - RI வாரியமா? அல்லது பணியாளர்களா? போன்ற கடினமான கேள்விகள் எழுப்பப்பட்டன. முதல் கேள்வி RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோவிடம் கேட்கப்பட்டது. தற்போதைய அமெரிக்க அரசு DEI, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஊழல் சட்டங்கள், USAID நிதி நிறுத்தம், WHO விலகல் போன்றவற்றில் ரோட்டரியின் அடிப்படை கோட்பாடு களுக்கு முரணான முடிவுகளை எடுத்து வருவதால், “நாம் இன்னும் ஏன் அமெரிக்காவில் இருக்கிறோம்? ஏன் வெளியே வரக்கூடாது?” என்று ரவீந்திரன் கேள்வி எழுப்பினர்.

“மிகச் சுலபமான கேள்விக்கு நன்றி,” என்று நகைச்சுவையாக தொடங்கிய அரெஸ்ஸோ, “RI 120 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் தொடங்கப்பட்டது. இந்த காலம் முழுவதும் நாம் எவன்ஸ்டனில் இருந்து, கருத்துச் சுதந்திரம், தகவல் பரிமாற்ற சுதந்திரம் மற்றும் நிதி முதலீடுகள் போன்ற நன்மைகளை அனுபவித்து வருகிறோம். இப்போது சில முடிவுகள் அமைப்புக்கு சிக்கல்கள் தரலாம், ஆனால் ரோட்டரிக்கு 120 ஆண்டுகள் வரலாறு உள்ளது. உடனடி பிரச்சினைகளை வைத்து முடிவெடுக்க மாட்டோம், நீண்ட காலத்தை நோக்கிப் பார்த்து தீர்மானிப்போம். அதனால் மாற்றத்தைப் பற்றி சிந்திக்க இது முதற்கட்டமே” என பதிலளித்தார்.

அடுத்ததாக, அமெரிக்க விசா பெறுவது மிகவும் கடினமாக இருக்கும் நிலையில், சர்வதேச அசெம்ப்ளியை ஏன் அமெரிக்காவில் தொடர வேண்டும் என்று RI துணைத்தலைவர் அலேன் வான் டி போலை ரவீந்திரன் கேட்டார். “இந்த ஆண்டு 64 கவர்னர்களுக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது. தலைமையக மாற்றம் பற்றி தலைவர் கூறியதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் பயிற்சிக்காக ஏன் அமெரிக்கா போக வேண்டும்? இந்தியா வந்தால், எங்கள் இரு இயக்குநர்களும் (K P நாகேஷ் மற்றும் M முருகானந்தம்) ஒவ்வொரு வருக்கும் விசா கிடைக்க உறுதி செய்வார்கள்” என்றார் ரவீந்திரன்.

பெல்ஜியத்தைச் சேர்ந்த டி போல் பதிலளிக்கையில், விசா சிக்கல்கள் அமெரிக்காவில் மட்டுமல்ல என்று கூறினார். கடந்த மாதம் ப்ரஸ்ஸல்ஸில் நடந்த ஒரு உச்சி மாநாட்டில், ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவிலிருந்து 1,500 ரோட்டேரியர்கள் பங்கேற்க திட்டமிடப்பட்டிருந்தது. “அதே பிரச்சினையை நாங்களும் சந்தித்தோம்; நைஜீரியா, உகாண்டா போன்ற நாடுகளில் இருந்து வர இருந்த 200 நண்பர்களுக்கு விசா மறுக்கப்பட்டது. வருகிற ஆண்டுகளில் உலகளவில் ரோட்டரிக்கு விசா ஒரு பெரிய சவாலாக இருக்கும் என்றார்.”

வலமிருந்து: PRIP K R ரவீந்திரன், RI துணைத் தலைவர் அலைன் வான் டி போயல், RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ, RI இயக்குநர்கள் K P நாகேஷ் மற்றும் M முருகானந்தம் மற்றும் TRF அறங்காவலர் ஆன்-பிரிட் அசெபோல்.

பின்னர் ரவீந்திரன் அவர்கள், பெரியம்மைக்கான தடுப்பூசி கண்டு பிடிக்கப்பட்ட பிறகு அதன் கடைசி வழக்கு கண்டறியப்படுவதற்கு 200 ஆண்டுகள் எடுத்ததைக் கருத்தில் கொண்டு, போலியோவை முழுமையாக ஒழிக்க 200 ஆண்டுகள் ஆகுமா என்று TRF அறங்காவலர் ஆன் ப்ரிட் ஆஸெபோல் அவர்களிடம் கேட்டார்.

அவர் பதிலளிக்கையில், "இந்தியாவில் போலியோ திடீரென மறைந்தது போலவே, இது ஒருநாளில் முடிந்தே தீரும், அதற்கு 200 ஆண்டுகள் ஆகாது" என்றார். "ஆனால் அது நிகழும் வரை, ஒவ்வொரு குழந்தையும் தடுப்பூசி பெற வேண்டும்; எல்லா குழந்தைகளும் மருத்துவமனையில் பிறக்கவில்லை; கிராமங்களிலும் பிறக்கின்றனர். எனவே உலகின் அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி செலுத்துவோம் நமது வாக்குறுதியை நிறைவேற்றுவோம்."

முருகானந்தமும் இதையே ஒப்புக் கொண்டு, "நம் அடுத்த தலைமுறையை பாதுகாக்க வேண்டும் என்பது தெளிவாக புரிகிறது; நாம் 99.99 சதவீதம் சாதித்துவிட்டோம். இந்தியாவில் போலியோவை 14 ஆண்டுகளுக்கு முன்பே ஒழித்து விட்டோம்; இந்த திட்டம் முழுமையாக நிறைவேறும் வரை ஆதரிப்போம்" என்றார்.

அரெஸ்ஸோவிடம் அடுத்த கேட்கப்பட்ட கேள்வி தேர்தல் குறைகளின் மீதானது. "சில நாடுகளில், DG தேர்தலிலும், சில சமயம் இயக்குநர் தேர்தலிலும் அரசியல் அதிகமாக உள்ளது. அப்படியிருக்க, ஏன் நேரடி பிரச்சாரத்தை அனுமதிக்கக்கூடாது? ஏன் அனைவரையும் சமமாக போட்டியிட விடக்கூடாது?" என்று கேட்டார் ரவீந்திரன்.

அது சாத்தியமில்லை என RI தலைவர் கூறினார். "ரோட்டரி நல்லெண்ணத்தையும், நட்பையும், நேர்மையையும் வலியுறுத்தும் அமைப்பு. அரசியலில் போல பிரசாரத்தை அனுமதிப்பது நமது அமைப்பின் அடிப்படை மதிப்புகளுக்கு மாறானது. நம் தலைவர்கள் – அதுவும் நேர்மை, நட்பு மற்றும் நியாயமான போட்டியிலும் தலைவர்களாக இருக்க வேண்டும்."

இதையே இந்தியாவைச் சேர்ந்த இரு இயக்குநர்களிடம் கேட்டபோது, "எலக்ட்ரானிக் வாக்குப்பதிவு வந்தபோது நான் இயக்குநராக இருந்தேன். 'இப்போது பிரச்சினை தீர்ந்துவிட்டது, இதை யாரும் ஏமாற்ற முடியாது' என்று நினைத்தேன். ஆனால் ஒரு சுழற்சியில் – எலக்ட்ரானிக் முறையையும் அவர்கள் ஏமாற்ற கற்றுக்கொண்டார்கள்," என்றார்.

நாகேஷ் பதிலளிக்கையில், "இந்தியாவில் அதிக தேர்தல் புகார்கள் வருவது உண்மை. காரணங்கள் பல: தலைமை பணிகளில் ஏராளமானோர் வர விரும்புகிறார்கள்; சிலர் அதை நம் கலாசாரமே என்கிறார்கள். லயன்ஸில் பிரச்சாரம் எல்லாம் சாதாரணம். ஆனால் நாம் அதை அனுமதிக்க மாட்டோம். சில குழப்பங்கள் இருக்கும். நமக்கு கிரிக்கெட் ஆடப் பிடித்தாலும், சதுரங்கமும் நன்றாக விளையாடுவோம். இறுதியில் ரோட்டரி எதை வேண்டுமானாலும் செக்-மேட் செய்து வெற்றி பெறும். புகார்கள் குறைந்து; விரைவில் பூஜ்யமாகும்," என்றார்.

RI இயக்குநர் முருகானந்தம் இரண்டு விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கூறினார். ரோட்டரியின் 34 மண்டலங்களில், நம் பிராந்தியத்தில் நான்கு மட்டுமே உள்ளன, இது நம் மண்டலங்களில் உள்ள ரோட்டேரியர்களின் அதிக எண்ணிக்கைக்கு விகிதாச்சாரமற்றது. எண்ணிக்கையைக் குறிப்பிட்டு அவர் கூறியதாவது: 1.12 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட ரோட்டரிக்கு மொத்தம் 34 மண்டலங்கள் உள்ளன, அதில் நம் மண்டலங்களான 4, 5, 6 மற்றும் 7-ல் 1,70,000 அல்லது 0.17 மில்லியன் உறுப்பினர்கள் உள்ளனர். மாவட்ட வாரியாகப் பார்த்தால், ரோட்டரியில் 550-க்கும் மேற்பட்ட மாவட்டங்கள் உள்ளன, எனவே ஒரு மாவட்டத்திற்குச் சராசரியாக உள்ள ரோட்டேரியகளின் எண்ணிக்கை 1,900 ஆகும்.

ஆனால் நமது நான்கு மண்டலங் களில் ஒரு மாவட்டத்துக்கு சராசரியாக 3,900 உறுப்பினர்கள் – அதாவது இரட்டிப்பு அளவு. "இதன் பொருள், நாம் 45 ஆளுநர்கள், நான்கு மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் (RCs), நான்கு ரோட்டரி அறக்கட்டளை மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் (RRFCs) ஆகியோரை இழந்துள்ளோம். தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள், நாம் 1.4 பில்லியன் மக்களைப் பற்றிப் பேசுகிறோம். எல்லா இடங்களிலும் உறுப்பினர் எண்ணிக்கையில் சரிவு இருக்கும்போது, இங்கு வளர்ச்சி உள்ளது. நாம் உலகின் பிற பகுதிகளுக்குச் சமநிலைப்படுத்துகிறோம், ஆனால் 45 தலைமைப் பதவிகளைத் தவற விடுகிறோம்."

"தலைமைப் பதவிகளில் உள்ள இந்தக் குறைபாடு தேர்தல் புகார் களுக்குக் காரணமாக இருக்கலாம் என்றாலும், புகார்கள் குறைந்து வருகின்றன; கடந்த ஆண்டு நான்கு, இந்த ஆண்டு இதுவரை பூஜ்ஜியம். நம் மண்டலங்கள் உறுப்பினர் எண்ணிக்கையில் 2-வது இடத்திலும், உறுப்பினர்களைச் சேர்ப்பதில் முதலிடத்திலும், (TRF-க்கு) வழங்குவதில் 2-வது இடத்திலும் உள்ளன. இருப்பினும், இந்த பிராந்தியம் குறிப்பிடப்படும் போது, தேர்தல் புகார்கள் மட்டுமே

பேசப்படுகின்றன. 'ஆனால், நாங்கள் முன்னேறி வருகிறோம்; எங்கள் கொள்கையான விஷன் 2030-ன் கீழ், மொத்தமாக 2,50,000 ரோட்டேரியர்கள் மற்றும் 1,25,000 ரோட்டராக்டர்களை சேர்க்க விரும்புகிறோம்'." மேலும், "ரோட்டேரியர்களிடம் சென்று அவர்களுடன் பேசுவதையே தேர்தல் பிரசாரமாகக் கருத முடியாது" என்றும் அவர் கூறினார்.

இதற்குப் பதிலளித்த ரவீந்திரன், "இந்தியாவில்தான் புகார்கள் உள்ளன என்று இல்லை. தென் அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களிலும் புகார்கள் உள்ளன. என் கேள்வி - இதற்காக வாரியம் என்ன செய்கிறது? நீங்கள் இருவரும் வாரியத்தில் இருக்கிறீர்களே?" என்றார்.

அடுத்த கேள்வி, கோவிட்-க்குப் பின் வீட்டிலிருந்து பணிபுரியும் கொள்கை பற்றி டி போலிடம் கேட்கப்பட்டது. "எனக்குத் தெரிந்த பெரும்பாலான நிறுவனங்கள் மீண்டும் வழக்கமான பணிக்குத் திரும்பிவிட்டன. ஆனால் நம் கட்டிடத்தில் (எவன்ஸ்டனில்) இன்னும் நிறைய காலியான இடங்கள் இருப்பதை நாங்கள் காண்கிறோம்."

பல நாடுகளில் மாறிவரும் கலாசாரத்துடன் இது தொடர்புடையது என்று துணைத் தலைவர் பதிலளித்தார், அங்கு மக்கள் வீட்டிலிருந்து வேலை செய்வதற்குப் பழக்கப்பட்டுவிட்டனர், மேலும் புதியதாக பணியமர்த்தப்பட்ட வர்கள் எத்தனை நாட்கள் வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் இது அமெரிக்க நிறுவனங்களின் கலாசாரமாக மாறியிருந்தாலும், "நாம் ஒரு சாதாரண நிறுவனம் அல்ல என்று நான் நினைக்கிறேன். வாரியம் சந்திக்கும் போது மட்டும், சந்திப்பைப் பற்றி அறிந்த 10 பேர் அலுவலகங்களில் இருப்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது." RI பணியாளர்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதிலும் தாமதங்கள் ஏற்பட்டன, "மேலும் நீங்கள் எவன்ஸ்டனில் உள்ள ஒருவருக்கு ஃபோன் செய்ய முயற்சித்தால், உங்களுக்கு என் வாழ்த்துகள். இதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது."

ரவீந்திரன் பின்னர் RI தலைவரிடம் கேட்டார்: "ரோட்டரியை உண்மையில் யார் நடத்துவது, வாரியமா அல்லது ஊழியர்களா?"

RI தலைவரும் இயக்குநர்களும் முறையே ஒன்று மற்றும் இரண்டு ஆண்டுகள் பதவியில் இருக்கும் தன்னார்வலர்கள், ஆனால் ஊழியர்கள் நீண்ட காலம் அங்கே பணிபுரிவர்கள், சில சமயங்களில் 10 முதல் 20 ஆண்டுகள் வரை இருப்பார்கள் என்று அரெஸ்ஸோ பதிலளித்தார். "இதனால் அவர்கள் எல்லாவற்றையும் மிக விரிவாக அறிவார்கள். ஊழியர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் இடையிலான உறவு முக்கியமானது." தன்னார்வலர்கள் கொள்கையை வகுக்கிறார்கள், ஊழியர்கள் அதைச் செயல்படுத்துகிறார்கள். "மேலும் ஊழியர்களின் தரம் உண்மையிலேயே மிக அதிகமாக உள்ளது, மேலும் அவர்கள் அனைவரும் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள் என்று நான் சொல்ல வேண்டும்." இது சூரிச் மற்றும் டெல்லியிலும் உண்மை. பிரச்சனை என்னவென்றால், பெரும்பாலும் "தன்னார்வலர்களுக்கு மிக அதிக எதிர்பார்ப்புகள் இருப்பதாக ஊழியர்கள் புகார் கூறுகின்றனர். அவர்கள் RI விதிகளை அதிகமாகவும் மிக விரைவாகவும் மாற்ற விரும்புகிறார்கள். எங்கள் ஆண்டில் முடிவுகளைப் பார்க்க மிக விரைவாக, மிக வேகமாகக் கொண்டு வர வேண்டும் என்ற எங்கள் நோக்கம், ஊழியர்களால் பெரும்பாலும் ஏமாற்றமடைகிறது, அவர்கள்: 'இல்லை, நாம் யோசிக்க வேண்டும், மெதுவாக முடிவு செய்ய வேண்டும், அநேகமாக இது சாத்தியமில்லை என்பார்கள். எனவே ஊழியர்களிடமிருந்து இன்னும் கொஞ்சம் உற்சாகத்தையும்

மாற்றத்திற்கான தயார்நிலையையும் நான் விரும்புகிறேன்." என்றார்.

அரெஸ்ஸோ மேலும் கூறியதாவது, "ஆனால் அதே நேரத்தில், ரோட்டரி ஒரு மிகப் பழமையான அமைப்பு மற்றும் மாற்றம் எப்போதும் கடினமானது, மேலும் நல்ல தயாரிப்பு, ஆய்வு மற்றும் திட்டமிடல் இல்லாமல் நம்மால் மாற முடியாது. இந்த இரண்டு அணுகுமுறைகளுக்கும் இடையில் உள்ள சமநிலை, ஒன்று மிகவும் பழமைவாதமானது, மற்றொன்று மிகவும் சுறுசுறுப்பானது, வெற்றிக்கு முக்கியமாகும். சில தலைவர்கள், உங்களுக்குத் தெரியும், ஆண்டு முழுவதும் ஊழியர்களுடன் சண்டையிட்டிருக்கிறார்கள். ஆனால் மற்ற ஆண்டுகளில் அறிக்கை மிகச் சிறப்பாக இருந்தது. இந்த ஆண்டில், ஊழியர்களுடன் எனக்கு மிகச் சிறந்த உறவு உள்ளது, மேலும் எனது கோரிக்கைகளுக்கு மேலும் உற்சாகமான பதிலைப் பெற நான் முயற்சிக்கிறேன்."

இதுபோன்ற பல சிக்கல்களைத் தீர்க்க, "ஒரு புதிய வணிகத் திட்டம் மற்றும் மாதிரி தேவைப்படுகிறது. நாம் சில தைரியமான முடிவுகளை எடுக்க வேண்டும், அதற்காகத் தயாராக 3 முதல் 5 ஆண்டுகள் வரை தேவைப்படலாம்! ஆனால் ஒவ்வொரு ரோட்டேரியரும் இதற்காகக் காத்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்." அவர் குறிப்பிட்ட முரண்பாடு என்னவென்றால், "நாம் மாற்றத்தைப் பற்றி பேசுகிறோம், ஆனால் நாமே மாற விரும்பவில்லை. இந்த வணிக மாதிரி மற்றும் ஐந்து ஆண்டுகளில் என்ன தேவைப்படும் என்பதைப் பற்றி முழுமையான பகுப்பாய்வு செய்ய வெளி நபர் களிடமிருந்து நமக்கு ஆதரவு தேவை என்பது எனது தனிப்பட்ட கருத்து."

ரவீந்திரன் பின்னர், இந்திய அரசாங்கத்திடம் இருந்து GST தொகைக்கான பெரும் கோரிக்கை குறித்து முருகானந்தத்திடம் கேள்வி எழுப்பினார். "இந்த அளவு விகிதாச்சாரத்துக்கு எப்படி ? இதில் யார் குழப்பம் விளைவித்தது?" வாரியம் மற்றும் அறங்காவலர்கள் கூட்டத்தில் நீங்கள் மிகவும் தைரியமாக ஒரு வலுவான கேள்வியைக் கேட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். திடீரென்று நாம் எப்படி இப்படி ஒரு சூழ்நிலைக்கு வந்தோம்?"

இந்தியாவில் GST 2017-ல் தான் அறிமுகப்படுத்தப்பட்டது என்றும், GST சரியாகச் செலுத்தப்படாதது மற்றும் CSR நிதிகள் தொடர்பான வரிகள் உட்பட இந்த பிரச்சினைக்கு பல பரிமாணங்கள் உள்ளன என்றும் RI இயக்குநர் பதிலளித்தார். ஒரு பட்டயப் பொறியாளர் என்ற வகையில், அவர் மறைமுக வரிவிதிப்பின் நுணுக்கங்களைப் புரிந்துகொண்டதாக கூறினார். "இந்தச் சிக்கலைச் சரியாகக் கையாள வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம், மேலும் நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். நாங்கள் இப்போது செயல்பாட்டில் இருக்கிறோம், மேலும் சட்ட நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளோம், இதிலிருந்து வெளியே வருவோம்."

இயக்குநர்களைப் போலவே, அறங்காவலர்களும் மண்டல வாரியாகப் பரிந்துரைக்கப்பட வேண்டுமா என்ற கேள்விக்கு, அறங்காவலர் அன், ஒரு "புவியியல் கண்ணோட்டத்தை" வைத்திருப்பதை விட, சிறந்த நபர்களை அறங்காவலர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும், இதனால் அறக்கட்டளையின் பணம் விவேகமாக முதலீடு செய்ய முடியும் என்று கருத்து தெரிவித்தார்.

முன்னாள் RI தலைவரை மட்டுமே அறங்காவலர் தலைவராக ஏன் அனுமதிக்க வேண்டும் என்பதற்கு, அவர் அது ஒரு நல்ல நடைமுறை என்று கூறினார், "ஏனென்றால் நீங்கள் தலைவராக இருக்கும்போது, உங்கள் ஆண்டில் நிறையப் பயணம் செய்ததன் மூலம் முழு ரோட்டரி உலகத்தைப் பற்றியும் நிறைய அறிவைப் பெறுகிறீர்கள்." என்றார்

தலைவருக்கும் இயக்குநர்களுக்கும் ஏன் ஒன்று மற்றும் இரண்டு ஆண்டு காலங்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்பதற்கான காரணத்தை ரவீந்திரன் பின்னர் அரெஸ்ஸோவிடம் கேட்டார். "நம் நிர்வாக அமைப்பில், ஒவ்வொரு ஆண்டும், இரண்டு ஆண்டுகளிலும் எல்லாம் மாறுகிறது. இப்போது, மெர்சிடிஸ்-பென்ஸ் அல்லது BMW தங்கள் மேலாளரை ஒவ்வொரு ஆண்டும் மாற்றுவதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? நாம் செய்வது சரியானதா? இயக்குநர்களின் பதவிக் காலத்தை மூன்று ஆண்டுகளாக நீட்டித்து, அறங்காவலர்களின் பதவிக் காலத்தை நான்கிலிருந்து மூன்று ஆண்டுகளாகக் குறைக்கக் கூடாதா, அதனால் அது சமநிலை அடையுமா?"

இந்தக் கண்ணோட்டத்தை ஏற்றுக்கொண்ட அரெஸ்ஸோ, இயக்குநராக அவர் முதல் ஆண்டை "இயந்திரம் என்ன செய்கிறது, அது எவ்வாறு செயல்படுகிறது மற்றும் மக்களை அறிந்துகொள்வதற்கு மட்டுமே செலவிட்டார். இரண்டாவது ஆண்டு மிகவும் சுறுசுறுப்பாக இருந்தது; உண்மையில் நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதை வெளிப்படுத்தலாம்" என்று பதிலளித்தார். "இயக்குநர்களுக்கு இரண்டு வருட கால அவகாசம் மிகக் குறைவு, அது ஊழியர்களின் திசையில் சமநிலையை நகர்த்துகிறது" என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார். "எனவே மூன்று ஆண்டுகள் தங்கும் ஒரு இயக்குநர் இருக்கும்போது, இயந்திரத்தைப் பற்றி நன்கு அறிந்தவர்களுடன் வாரியம் அதிக சக்தி வாய்ந்ததாக மாறும்." மூன்று ஆண்டுகள் "தங்கள் தொழிலில் இன்னும் சுறுசுறுப்பாக இருப்பவர்களால் மிகவும் நீண்டதாகக் கருதப்படலாம்" என்பதுதான் சிக்கல். அதனால் சிறந்த ரோட்டேரியர்களில் சிலரை இழக்கும் அபாயம் உள்ளது. ஆனால் இயக்குநர்களுக்கு, அநேகமாக மூன்று ஆண்டுகள் ஒரு சிறந்த காலம் என்று நான் நினைக்கிறேன்" என்றார்.■

ரோட்டரி முன்னேற்றத்தின் வழிகாட்டி

V முத்துக்குமரன்

"சமூகத்தின் கிரியா ஊக்கியாகவும், முன்னேற்றத்தின் வழிகாட்டியாகவும், சேவை மனப்பான்மையுடனும், தேசத்தை கட்டியெழுப்பும் கலங்கரை விளக்கமாகவும் ரோட்டரி திகழ்கிறது" என்று இந்தியாவின் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், தில்லியில் நடைபெற்ற தேஜஸ்–மாற்றத்தின் சிறகுகள் மண்டல மாநாட்டில் பேசுகையில் கூறினார். அவர் ஒரு காலத்தில் ரோட்டராக்டராக இருந்ததாகக் கூறினார்.

இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த ரோட்டரி தலைவர்கள், மண்டலங்கள் 4,5,6 மற்றும் 7 சேர்ந்த பிரதிநிதிகள், RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ, துணைத் தலைவர் அலைன் வான் டீ போயல் மற்றும் ஸ்வீடன், பெல்ஜியம் மற்றும் மால்டாவைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்ற இந்த மாநாட்டில், மாநிலங்களவைத் தலைவரான சி.பி.ராதாகிருஷ்ணன் ரோட்டரி குடும்பத்தினர், "தேசத்தின் சமூக கட்டமைப்பையும், ஒட்டுமொத்த மனிதகுலத்தையும் வலுப்படுத்தும் முயற்சியை அயராது, அர்ப்பணிப்புடன் தொடர வேண்டும்" என்று வலியுறுத்தினார். "இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருவது மட்டும் அல்ல, உலகில் ரோட்டரி அமைப்பும் வேகமாக வளர்ந்து வருகிறது. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாதான் அதிக அளவில் ரோட்டரி சேவைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாட்டு திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் ரோட்டரி செயல்படுத்தி வருவது பாராட்டுக்குரியது" என்று அவர் குறிப்பிட்டார்.

இந்திய ரோட்டரி குடும்பம் சமூகத்திற்கு மகத்தான சேவை செய்துவருவதாகக்கூறி, "தூய்மை இந்தியா திட்டமாகட்டும், பெண் குழந்தைகள் நலனுக்கான திட்டமாகட்டும் அல்லது ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் வசதி செய்து தரும் திட்டமாக இருக்கட்டும் இந்திய அரசின் முயற்சிகளுக்கு வலுசேர்ப்பது அடிமட்ட தொண்டர்களும் ரோட்டரியின் அர்ப்பணிப்புடனான ஈடுபாடும் தான்" என்று அவர் குறிப்பிட்டார். "இந்த கூட்டாண்மை மற்றும் இதர ஒத்த முயற்சிகள் அரசாங்கங்கள், ரோட்டரி மற்றும் சமூகத் தலைவர்களுக்கிடையிலான ஒத்துழைப்பின் சக்தியைப் பிரதிபலிக்கின்றன."

அரசாங்கத்துடனான கூட்டு முயற்சிகள் மூலம் மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ரோட்டரி முக்கிய பங்குவகிப்பதாக கூறிய ராதாகிருஷ்ணன், "போலியோ ஒழிப்பு உள்ளிட்ட உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டம் மற்றும் சுகாதாரம், எழுத்தறிவு, குடிநீர்வசதி, சுகாதார வசதி என இதுவரை 350 மில்லியன் டாலருக்கும் மேலான மதிப்புடைய திட்டங்களை ரோட்டரி செயல்படுத்தியுள்ளது" என்று அரெஸ்ஸோ தம்மிடம் கூறியதாக அவர் தெரிவித்தார். ஒரு ரோட்ராக்டராக மாவட்ட மாநாட்டில் பங்கேற்றதை நினைவுகூர்ந்த அவர், "பிறப்பு முதல் இறப்பு வரை ரோட்டரி எப்போதும் நம்முடன் இருக்கிறது என்பது பற்றி அப்போது தாம் பேசியதாக அவர் குறிப்பிட்டார். குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுப்பது முதல், பள்ளிகளை நிர்மாணித்து நடத்துதல், ஆம்புலன்ஸ்

வசதி மற்றும் தகனக்கூடங்கள் அமைத்தல் என எப்போதும் ரோட்டரி செயல்பாட்டில் உள்ளது" என்றார்.

உலகளாவிய போலியோ ஒழிப்பு முயற்சிகளுக்காக ரோட்டரி இதுவரை 2 பில்லியன் டாலர்களை முதலீடு செய்துள்ளது. இதன் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க வேண்டும் என்கிற அதன் உறுதிப்பாடு நிரூபிக்கப்பட்டுள்ளது. "ஒரு குழந்தையை மருத்துவரிடம் அழைத்துச் செல்வதற்கு முன்பே தனது காலை இழந்த நாட்கள் போய்விட்டன. இது ரோட்டரியின் மிகப்பெரிய சாதனை. இந்த தேஜஸ் நிகழ்வு திறன் மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, டிஜிட்டல் கல்வி அறிவு மற்றும் சுகாதார பராமரிப்பு ஆகியவற்றில் புதிய யோசனைகளின் தொடக்கமாக இருக்கட்டும் என்று குடியரசு துணைத்தலைவர் கூறினார். மேலும் ரோட்டரியின் அனைத்து முயற்சிகளுக்கும் அரசாங்கம் பக்கபலமாக இருக்கும். உங்களின் முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துகிறேன்" என்றார்.

மாநாட்டின் தலைவர் PDG சரத் ஜெய்ன், "தேஜஸ் என்றால் பிரகாசத்தை குறிக்கிறது. இது வெறும் ரோட்டரி சந்திப்பு கூட்டம் அல்ல. இது நாம் யார் என்பதற்கான ஒரு கொண்டாட்டம். நமது பகிரப்பட்ட உணர்வு, அன்பு, கருணை, எல்லைகடந்த நட்புறவை உறுதிப்படுத்துகிறது. நமக்காக செயல்படுவது நம்முடன் அழிந்துவிடும். ஆனால், நாம் பிறருக்காக செயல்பட்டால் அது அழியாமல் நிலைத்து நிற்கும். சமூகத்தின் உந்துசக்தியாக ரோட்டரி இருக்கிறது. அது பலரது வாழ்க்கையை மேம்படுத்துகிறது. நம்பிக்கையை உருவாக்குகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

"கடவுள் சிலரை நல்லெண்ண தூதர்களாக செயல்பட அனுப்பிவைக்கிறார், அவர்களை ரோட்டேரியன்கள் என்றும் சொல்லலாம்," என்று மாநிலங்களவை உறுப்பினரும், பெங்களூருவில் உள்ள ஸ்ரீ ஜெயதேவா இதய அறிவியல் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவத்தின் இயக்குநருமான டாக்டர் சி.என்.மஞ்சுநாத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியின் ஒரு அமர்வில் பேசிய அவர், கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக ரோட்டரியுடன் தாம் தொடர்புகொண்டிருப்பதாகவும், இந்த காலத்தில், ஜெயதேவா மருத்துவமனையில் 10,000 குழந்தை களுக்கு இதய அறுவைச்சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார். "கடந்த 18 ஆண்டுகளில் இந்த மருத்துவமனையில் 75 லட்சம் வெளிநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. சுமார் 8 லட்சம் நோயாளிகள் அறுவைச்சிகிச்சை செய்துகொண்டுள்ளனர். "முதலில் சிகிச்சை, பின்னர்தான் கட்டணம். எந்த நோயாளியையும் பணம் இல்லாத காரணத்தால் திருப்பி அனுப்பக்கூடாது" என்பதுதான் எங்களின் முக்கிய குறிக்கோளாகும் என்றார் மஞ்சுநாத்.

இந்தியாவில் 60% பேர் தொற்று அல்லாத நோய்களான மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரக பாதிப்பு, இரத்த அழுத்தம், நீரிழிவு, புற்றுநோய் உள்ளிட்ட காரணங்களினால் உயிரிழப்பது சோகமான விஷயமாகும். இதில் இப்போது செல்லிடைப் பேசிக்கு அடிமையாகி தொடர்ந்து படங்களையும் செய்திகளையும் பார்ப்பது மற்றும் தனிமையால் ஏற்படும் மனச்சோர்வு ஆகியவையும் இடம்பெற்றது. இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 30 லட்சம் பேர் மாரடைப்பு மற்றும் மூளை பக்கவாதத்தால் உயிரிழக்கிறார்கள். இவர்களில் 34 வயதுக்கு குறைவானர்கள்தான் அதிகம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். "மருந்து, மாத்திரை சாப்பிடுவதால் மகிழ்ச்சி ஏற்படாது. ஆனால், மகிழ்ச்சியைவிட வேறு சிறந்த மருந்து

RI இயக்குநர் K P நாகேஷ் மற்றும் அவரது மனைவி உமா ஆகியோர் விளக்கேற்றுகின்றனர். RID M முருகானந்தம், இந்திய துணைத் தலைவர் C P ராதாகிருஷ்ணன், ரோட்டரி தலைவர் ஃபிரான்செஸ்கோ அரெஸ்ஸோ, இன்ஸ்டிடியூட் செயலாளர் PDG மஞ்சு பாட்கே, TRF அறங்காவலர் தலைவர் ஆன்-பிரிட் அசெபோல் மற்றும் PDG ஷரத் ஜெயின் ஆகியோரும் உள்ளனர்.

இல்லை” என்று குறிப்பிட்ட மஞ்சுநாத், நமது தினசரி பழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டால் நோயில்லாமல் வாழலாம். சூரிய ஒளி, அளவான உணவு, உடற்பயிற்சி, புன்னகை, உண்ணாவிரதம், நல்ல தூக்கம், நல்ல எண்ணங்கள், மற்றவர்களுடன் பேசுதல், பழங்கள், காய்கறிகளை உணவில் சேர்த்தல், குடும்ப உறவு, யோகா, தியானம் மற்றும் ரோட்டரியில் இருப்பது நன்மை தரும் என்றும் கூறினார்.

தேசிய நோய்த் தடுப்புத் திட்டத்தில் கர்ப்பப்பை வாய் புற்றுநோயை தடுப்பதற்கான ஹெச்.பி.வி. தடுப்பூசியையும் சேர்க்க வேண்டும் என்று நான் உறுப்பினராக இருக்கும் நாடாளுமன்ற குழு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. கர்ப்பப்பை வாய் புற்றுநோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 12 முதல் 15 வயது வரையிலான பெண்களுக்கு தடுப்பூசி போட்டு வரும் ரோட்டரி சங்கங்களின் பணி பாராட்டுக்குரியது. இதன் மூலம் 90 சதவீதம் உயிர்களைப் பாதுகாக்க முடியும், என்று கூறினார்.

புதிய சகாப்தத்தின் தொடக்கத்தில்

பழைய பரிணாம வளர்ச்சி மற்றும் கலாசார நெறிமுறைகள் அடிப்படையிலான மாதிரியைப் பின்பற்றி இந்தியா ஒரு புதிய சகாப்தத்தில் நுழைந்துள்ளது என்று மாநிலங்களவை உறுப்பினர் சுதான்ஷு திரிவேதி கூறினார்.

“வரும் ஆண்டுகளில் இந்தியா, உலக செல்வத்தில் 15 சதவீதத்தை உற்பத்தி செய்யப்போகிறது. இதன் மூலம் இந்தியா உலகின் வளர்ச்சி இயந்திரமாக மாறும்” என்று IMF (சர்வதேச செலாவணி நிதியம்) தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜிவா கூறிய வார்த்தைகளை அவர் மேற்கோள் காட்டினார். மதிப்பீட்டு நிறுவனமான மோடீஸ், 2027-ம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 7% இருக்கும் என்று கணித்துள்ளது. மேலும் “டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் நாம் முதலிடத்தில் இருக்கிறோம். இது உலகளாவிய அளவில் 48 சதவீதமாகும். இது அமெரிக்கா மற்றும் சீனாவைவிட அதிகம்” என்று அவர் கூறினார்.

பொருளாதாரத்தில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. நான்காவது பெரிய பங்குச் சந்தையைக் கொண்டுள்ளது. ஆட்டோமொபைல் பொருள்கள் உற்பத்தித் துறையிலும், விமானத்துறையிலும் மூன்றாவது இடத்திலும் உள்ளது. செல்லிடைப்பேசிகள் தயாரிப்பில் இரண்டாவது இடத்தில் உள்ளது. அக்டோபர் 2025-ல், நாட்டின் மிகப்பெரிய டிஜிட்டல் செயல்பாடுகளை வழங்குபவர்களான UPI விசாவை முந்தி உலகின் மிகப்பெரிய டிஜிட்டல் நுழைவாயிலாக மாறியுள்ளதாக அவர் கூறினார். தென் துருவத்தில் முதன் முதலாக தரையிறங்கியது நமது சந்திரயான் விண்கலம்தான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகில் போரிடும் இரண்டு பிரிவினருக்கு இடையே இந்தியா ஒரு புவிசார் சமநிலையைக் கொண்டுள்ளது. “Quad மற்றும் BRICS அமைப்பின் நிறுவன உறுப்பினராக இந்தியா உள்ளது. பிரம்மோஸ் ஏவுகணை தயாரிப்பில் நாம் ரஷியாவுடன் கூட்டு சேர்ந்துள்ளோம். அதேநேரத்தில் அமெரிக்கா நமக்கு வேவுபார்க்கும் ஆளில்லா ட்ரோன்களை வழங்கி வருகிறது”. சர்வதேச அளவில் பெரும் உற்பத்தியாளர்களான பிரான்சின் டஸ்ஸால்ட், தைவானின் ஃபாக்ஸ்கான், அமெரிக்காவின் ஐஃபோன் உற்பத்தியாளர்களை இந்தியா ஈர்க்கத் தொடங்கியுள்ளது. செயற்கை நுண்ணறிவு மற்றும் குவாண்டம் கம்ப்யூட்டிங் போன்ற புதிய யுக தொழில்நுட்பத்தில் இந்தியா வளர்ந்து வருவதால் உலகளாவிய தலைவராக இந்தியா எழுச்சி பெற்றுள்ளது.

மோதல்கள் நிறைந்த உலகில், “பழமையான நாகரிகத்தை கடைப் பிடித்து வந்தாலும், மக்கள் தொகையில் இளைஞர்களை அதிகமாகக் கொண்ட இந்தியா பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்ற முடியும்” என்று அவர் மேலும் கூறினார்.■

இடமிருந்து: RI தலைவர் அரேஸ்ஸோ, ஸ்ரீ ஜெயதேவா இருதய அறிவியல் நிறுவனத்தின் இயக்குநர் Dr C N மஞ்சுநாத் மற்றும் RI இயக்குநர் நாகேஷ்.

ராஜ்யசபா MP சுதன்ஷு திரிவேதி.

காந்தி வழியில் உலக அமைதியைக் கட்டமைத்தல்

ரோட்டரி செய்திக்குழு

செப்டம்பர் 5, 6 அன்று தென் கொரியாவில் இன்ச்சியான் பன்னாட்டு அமைதிக் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் பங்கேற்ற இந்தியக் குழுவுக்குக் காந்திய அமைதிச் செயற்பாட்டாளரும் RC ஹௌரா, RID 3291, தலைவருமான சங்கர் குமார் சன்யால் தலைமை வகித்தார்.

இந்தக் குழுவில் மும்பை மகாத்மா காந்தி அறக்கட்டளையின் தலைவரும் காந்தியின் கொள்ளுப் பேரனுமான துஷார் காந்தி, தில்லி காந்தி அமைதி அறக்கட்டளைத் தலைவர் குமார் பிரசாந்த், சென்னை TBV சமித்தியின் செயலாளர் P மாருதி, பொருளாதார வல்லுனர் பிரேர்ணா தேசாய், மகாராஷ்டிரத்திலிருந்து சோனல் காந்தி, மேற்கு வங்காளத்திலிருந்து ஷிகா சன்யால், UP-யிலிருந்து சஞ்சய் ராய் ஆகியோர் இடம் பெற்றிருந்தார்கள், கொரிய அமைதிக் கருத்தரங்கில் பேசினார்கள்.

இந்தக் கருத்தரங்கல் இன்ச்சியான் செய்தித்தாள்கள், அமைதி மற்றும் மக்கள் குரல் (VOP), இன்ச்சியான் பண்பாட்டு அறக்கட்டளை போன்ற கொரிய அமைப்புகள் மற்றும் இந்தியத் தூதரகம் (கொரியா), இந்திய ஆய்வுகள் கல்விக் கழகம், வன்முறையற்ற அமைதி அலை மற்றும் சன்யால் தலைவராக உள்ள ஹரிஜன் சேவா சங்கம் ஆகியவற்றின் இணைந்த முயற்சியாகும்.

அமைதிக் கருத்தரங்கைத் தொடங்கியபின், சன்யால் இன்ச்சியானில் உள்ள ஒரு பொதுச் சதுக்கத்தில் காந்தி சிலை ஒன்றைத் திறந்துவைத்தார். தொடக்க நிகழ்வுக்குத் தலைமை வகித்த இன்ச்சியான் இல்போ என்ற புகழ் பெற்ற கொரிய நாளிதழின் CEO பார்க் ஹையுன்சு கிம் "போர், காலநிலை நெருக்கடிகளில் தொடங்கி அனைத்து வடிவப் பாகுபாடுகள் வரையிலானவற்றால் உலகெங்கும் எழுந்துள்ள சவால்கள் வன்முறை வடிங்கள்தான் என்றும், முதலில் நம் மனங்களிலிருந்து வெறுப்பை நீக்குவதன்மூலம் அவற்றைக் கையாளவேண்டும்," என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

க்யெயான்கின் தேசியக் கல்விப் பல்கலைக்கழகம் (GNUE), சன்ஷைன் மிர்யாங் யோகாசனப் பண்பாட்டு மையம், உள்ளூர் நிர்வாகத்துக்கான கொரிய ஆய்வுக் கல்விக் கழகம் ஆகியவற்றுடன் இணைந்து பணி புரிவதற்கான மூன்று MoU-க்களில் சன்யால் ஹரிஜன் சேவக் சங்க் சார்பாகக் கையொப்பமிட்டார்.

பின்னர், ஜப்பானில் அவர்களுடைய பயணம் கம்பீரமான ஃபுஜி மலைக்கு அருகில் தொடங்கியது. அங்கு ஜப்பானிய PM சையோன்ஜி கின்மோச்சியின் கொள்ளுப் பேத்தி யுகா சையோன்ஜி அவர்களை வரவேற்றார்.

கோய் அமைதி அறக்கட்டளையின் பிரதிநிதியாக அவர் அவர்களை GPF அமைதிப் பூங்கா என்ற, 194 நாடுகளின் கொடிகளைக் கொண்ட பன்னாட்டு ஒற்றுமைச் சின்னத்துக்கு அழைத்துச்சென்றார். சன்யால் மற்றும் ஹிரோஷிமா அணுகுண்டுத் தாக்குதலில் பிழைத்த வரும் GPF-ன் தலைவருமான 89 வயது டோஷிகா டனகா இருவரும் ஓர் இணை அமைதி முறையீட்டை எழுதினார்கள். அதன் மையச் செய்தி, பூமியிலுள்ள அனைத்து உயிர்களுக்காக "அணு ஆயுதங்களை நிரந்தரமாக அழிப்பதற்கான" உணர்ச்சிமயமான கோரிக்கையாகும்.

சன்யாலும் அவருடைய குழுவினரும் டோக்கியோவுக்கு அருகிலுள்ள ஹிபியா என்ற நகரத்தில் ஜப்பானிய அமைதிச் செயற்பாட்டாளர்கள் குழு ஒன்றை சந்தித்தார்கள். "நாங்கள் அமைதியைக் கட்டமைப்பதற்கும், இந்தியா, ஜப்பான் இடையிலான புரிந்துகொள்ளலை வலுவாக்குவதற்கும் குறிப்பிட்ட திட்டங்கள், உத்திகளை வளர்ப் பதற்கான வழிகளைப் பேசினோம்" என்றார் சன்யால்.■

கொரியாவின் இஞ்சியோனில் மகாத்மா காந்தியின் மார்பளவு சிலையை திறந்து வைத்த பிறகு, இந்தியா மற்றும் கொரியாவின் பிரதிநிதிகளுடன் RC ஹவுரா தலைவர் சங்கர் குமார் சன்யால் (நீல நிற அங்கி அணிந்தவர்).

போலியோ போராளிகளுக்கு கௌரவம்

ஜெய்ஸ்ரீ

தேஜஸ் ரோட்டரி மண்டல மாநாட்டில், இந்தியாவில் போலியோவை முற்றிலும் ஒழிக்க அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்ட மூன்று பிரபலங்கள்- PRID அசோக் மகாஜன், PDG தீபக் கபூர் மற்றும் முன்னாள் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷவர்தன்-ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இந்த அமர்வுக்கு PRID A S வெங்கடேஷ் தலைவராகவும், மாநாட்டின் செயலர் PDG மஞ்சு பாட்கே தொகுப்பாளராகவும் செயல்பட்டனர்.

இந்தியாவில் ரோட்டரியின் போலியோ ஒழிப்பு வரலாற்றில் தலைமைத்துவத்தையும் ஆதரவையும் வழங்கி முக்கிய பங்காற்றியவர் PRID மகாஜன். 1996-ம் ஆண்டு ரோட்டரியின் போலியோ பிளஸ் திட்டத்துடன் இணைந்ததிலிருந்து அதை அவர் ஒரு அழைப்பாகவே கருதி செயல்பட்டார். புதுதில்லியில் அவர் 100 உலேமாக்களை (முஸ்லிம் மதத் தலைவர்கள்) சந்தித்தார். 2006-ம் ஆண்டு ஏப்ரலில் அவர்களை சந்தித்த நாளை (அப்போதுதான் அவர் RI இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார்.) மகாஜன் நினைவு கூர்ந்தார். “நான் அறைக்குள் நுழைந்த போது என் கையில் எந்த உரையும் இல்லை. ஆனால், சரஸ்வதி தேவி என் நாவில் இருந்தாள். “பிஸ்மில்லா-உர்-ரஹ்மான்-உர்-ரஹீம், லா இலாஹா இல்-இல்லாஹ்-உல்-அஸிம்-உல்-ஹலீம், லா இலாஹா இல்-இல்லாஹ்-உர்-ரஹ்மான்-உர்-ரஹீம், லா இலாஹா இல்-இல்லாஹ்-உர்-ரஹ்மான்-உர்-ரஹீம்” என்னும் வசனத்தை ஓதிக்கொண்டே பேச்சைத் தொடங்கினேன். புனித குரானை நான் முதன் முதலில் ஓதியதால் மதகுருமார்களின் நம்பிக்கையைப் பெற்றேன். அதைத் தொடர்ந்து போலியோ பணிகள் மாநிலம் முழுவதும் மறுவடிவமைக்கப்பட்டன. எங்கள் ஆதரவை நீங்கள் விரும்பினால், மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு குழுவை அமைக்க வேண்டும்” என்று அவர்களில் ஒருவர் முன்மொழிந்தார். மகாஜனும் அவரது குழுவினரும் உடனடியாக செயல்பட்டனர். திட்டத்தின் வரலாற்றில் சமூகம் சார்ந்த கூட்டுறவு செயல்பாட்டுக்கு வந்தது.

வலமிருந்து இடம் அமர்ந்திருப்பவர்கள்: PRID *அசோக் மகாஜன், முன்னாள் மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் மற்றும்* INPPC *தலைவர்* PDG *தீபக் கபூர். நிற்பவர்கள், இடமிருந்து:* PDG *ஷரத் ஜெயின்,* TRF *அறங்காவலர் ஆன்-பிரிட் அசெபோல்,* RI *துணைத் தலைவர் அலைன் வான் டி போயல்,* PRIP *ராஜேந்திர சாபூ,* RI *தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ,* RI *இயக்குநர்கள்* K P *நாகேஷ் மற்றும்* M *முருகானந்தம்,* PRIP *கல்யாண் பானர்ஜி மற்றும்* PRID A S *வெங்கடேஷ்.*

இதைத் தொடர்ந்து நாங்கள் லக்னௌ மற்றும் உ.பி.யின் இதர பகுதிகளில் மையக் குழுவை அமைக்க முடிந்தது. "அனைத்து உலேமா உறுப்பினர்களும் தங்கள் குழந்தைகள் அல்லது பேரக் குழந்தைகள் அல்லது தங்களது உறவினர்களுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குவதை உறுதிசெய்தோம். அது மாநிலம் முழுவதும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. இதையடுத்து அந்த சமூகத்தினரின் ஆதரவு எங்களுக்கு தொடர்ந்து கிடைத்துவந்தது" என்று அவர் நினைவுகூர்ந்தார்.

ஆனால், மகிழ்ச்சி கொஞ்சநாள்தான் நீடித்தது. அடுத்த பத்து நாட்களுக்குள் மாலேகான், மகாராஷ்டிரத்தில் நான்கு போலியோ பாதிப்பு கண்டறியப்பட்டது. மாநில அரசால் எந்த உதவியும் செய்ய முடியாது என்று சுகாதாரத்துறை செயலர் கூறினார். ஆனால், PRIP ராஜேந்திர சாபூ, கையை உயர்த்தி, "மகாராஷ்டிர மாநில அரசால் செய்ய முடியாவிட்டால், அதை ரோட்டரி செய்யும்" என்று கூறி மகாஜனை அதிகாரிகளுக்கு அறிமுகப்படுத்தினார்.

"மாலேகானில், போலியோ நடவடிக்கைகளை மேற்கொள்வது உ.பி.யைவிட கடினமாக இருந்தது. சமூக மக்கள் தவிர, இங்கு மருத்துவத் துறையினரும், ஊடகத்துறையினரும் போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்" என்று அவர் குறிப்பிட்டார். சந்தேகம், தவறான தகவல் மற்றும் விரோத மனப்பான்மையினால், நானும், PDG ராஜீவ் பிரதானும் (RID 3132) அந்த நகரில் ஐந்து நாட்கள் தங்கியிருந்து குடும்பங்களைச் சந்தித்து, பொது கூட்டத்திலும் பேசினோம். "நாங்கள் சுடுகாட்டில் ஒரு கூட்டத்தை நடத்தினோம். அங்கு எங்களை மக்கள் தரையில் அமரவைத்து எங்கள் பேச்சை கேட்டனர்" என்று அவர் நினைவுகூர்ந்தார். இறுதியில் படிப்படியாக சமூக மக்களின் மனதை வென்றோம். எங்களுக்கு ஆதரவாக இருந்த இந்திய தேசிய போலியோ பிளஸ் கமிட்டிக்கும் அதன் தலைவராக இருந்த PDG தீபக்கு கபூருக்கும் நன்றி தெரிவித்தோம்.

முஸ்லிம் மதத் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு உடன்பட வைத்ததற்காக உலேமா மௌலானா ரஷீத் மற்றும் RID 3120-ன் முன்னாள் தலைவர் அஜய் சக்சேனையையும் மகாஜன் பாராட்டினார். நாங்கள் செய்த பணி இன்று அங்கீகரிக்கப்படுவதில் எனக்கு மகிழ்ச்சிதான் என்று கூறினார்.

அவர், தனது விருதை, 1996 ஆம் ஆண்டு போலியோ பிளஸ் குழுவில் பணியாற்ற தமக்கு அழைப்பு விடுத்த PRID O P வைஷ், ஆதித்யா பிர்லா சமூக சேவை மற்றும் ஊரக வளர்ச்சி மையத்தின் தலைவர் ராஜஸ்ரீ பிர்லாவுக்கும் அர்ப்பணித்தார். ரோட்டரியின் போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக அவர் $19 மில்லியன் பங்களிப்புச் செய்துள்ளார். தனியார் துறையிலிருந்து நிதி திரட்டும் முயற்சியின் ஒருங்கிணைப்பாளராக இருக்க PRIP கல்யாண் பானர்ஜி எனக்கு அழைப்பு விடுத்தார். ரூ.1 கோடி நிதி திரட்ட அவர் இலக்கு வைத்திருந்தார். நான் ஸ்ரீமதி பிர்லாவை சந்தித்தபோது அவர் எனது வேண்டுகோளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். ஒரு தேநீர் விருந்தில் எல்லாம் முடிந்துவிட்டது. நான் எதிர்பார்த்ததைவிட அவர் அதிகமாக கொடுத்தார். போலியோ ஒழிப்பு திட்டத்துக்காக நான் அவரிடம் பணம் கேட்டபோதெல்லாம் அவர் கொடுக்கிறார் என்றார்.

INPPC தலைவர் கபூர், சிறப்பான திட்டமிடல் மற்றும் தனிப்பட்ட களப்பணிக்காக அங்கீகரிக்கப்பட்டார். கபூரும், தமக்கு கிடைத்த விருதை PRIP-க்கள் சாபூ மற்றும் பானர்ஜி, PRIDs சுஷில் குப்தா, சுதர்சன் அகர்வால் மற்றும் வைஷ் ஆகியோருக்கு அர்ப்பணிப்பதாக கூறினார். அவர்கள் வலுவாக நின்றதால் தான் இந்திய அரசு மற்றும் எங்கள் கூட்டாளர்களான WHO, UNICEF மற்றும் CDC-யுடனும் இணைந்து போலியோ வைரஸை ஒழிக்க பணியாற்ற முடிந்தது. கடைசி மைல் கல்லை எட்டும் வரை நாம் கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் போலியோ தடுப்பூசி போடப்பட வேண்டும். அந்த பணியை பூர்த்தி செய்ய நமக்கு இன்னும் அதிக பணம் தேவைப்படுகிறது என்றார்.

டாக்டர் ஹர்ஷ் வர்தன் பேசுகையில், 1993-ம் ஆண்டு டிசம்பரில் குழந்தை மருத்துவர்களுடன் நடந்த தற்செயலான உரையாடலில் போலியோவை கட்டுப்படுத்துவதை விட நாம் ஏன் அதை முற்றிலுமாக ஒழிக்க முடியாது என்று கலந்து ஆலோசித்ததை நினைவுகூர்ந்தார். அதைத் தொடர்ந்து சர்வதேச அளவிலான அவரது ஆய்வு முடிவில், பிரேசிலும், கியூபாவும் போலியோவை ஒழிக்க முடிந்தால், இந்தியாவால் ஏன் முடியாது என்ற முடிவுக்கு வந்ததாக அவர் கூறினார்.

ரோட்டரியின் முக்கிய கூட்டாண்மையை அவர் வலியுறுத்தினார். அது எனது பொது வாழ்க்கையின் பொக்கிஷங்களில் ஒன்றாகும் என்று குறிப்பிட்டார். உலகளாவிய ஆதாயத்தில் உள்ள பலவீனத்தையும் அவர் ஒப்புக்கொண்டார். சமீபத்தில் எடுக்கப்பட்ட ஆய்வில் போலியோவால் பாதிக்கப்பட்ட 39 பேரில் பாகிஸ்தானில் 30 பேரும், ஆப்கானிஸ்தானில் 9 பேரும் இருப்பது தெரியவந்துள்ளது. மேலும் 13 நாடுகளில் தடுப்பூசி போட்டுக்கொண்ட 169 பேருக்கு போலியோ அறிகுறி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் மற்றும் சில நாடுகளில் போலியோவை முற்றிலும் ஒழிக்க தவறினால், அடுத்த பத்தாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 2 லட்சம் பேர் போலியோவால் பாதிக்கப்படும் சூழலை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இது நிச்சயமாக 1988 இருந்த எண்ணிக்கையைவிட அதிகமானதாக இருக்கும் என்று அவர் எச்சரித்தார். "உலகம் போலியோ இல்லாததாக அறிவிக்கப்படும் நாளில், உங்கள் அனைவருடன் நிற்பதே எனது கடைசி ஆசையாகும்" என்றும் அவர் கூறினார்.

ஷிமோகாவைச் சேர்ந்த RID 3182 PDG டாக்டர் P நாராயணா இந்த நிகழ்வில் பங்குபெறாத நிலையில் அவரும் கௌரவிக்கப்பட்டார். முன்னதாக மாநாட்டின் ஒருபகுதியாக ரோட்டரி கோஃல்ப் விளையாட்டுப் போட்டி நடத்தப் பட்டது. அதன் மூலம் TRF- ன் போலியோ நிதிக்கு $ 250,000 திரட்டப்பட்டது.

மேலும் இன்ஸ்டிடிட்யுட் கட்டுரைகள் அடுத்த இதழில்.

தேஜஸ் துளிகள்

இடமிருந்து: TRF *அறங்காவலர் ஆன்-பிரிட் அசெபோல், ஆனா,* RI *தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ, இன்ஸ்டிடியூட் கன்வீனர் மற்றும்* RI *இயக்குனர்* KP *நாகேஷ்,* RI *இயக்குனர்* M *முருகானந்தம் மற்றும் சுமதி.*

PRIP *கல்யாண் பானர்ஜி,* PRIP *ராஜேந்திர சாபூ மற்றும்* PRID *அசோக் மகாஜன்.*

RI *தலைவர் அரேஸ்ஸோவும் ஆனாவும்.*

RI *இயக்குனர் முருகானந்தம் மற்றும் சுமதி.*

ஆனா ஒரு பிரதிநிதியுடன் உரையாடும்போது, ஒரு "இடமாற்றம் செய்யப்பட்ட" RI *தலைவர் அரேஸ்ஸோ சோபாவின் ஆர்ம்ரெஸ்டில் விளையாட்டுத்தனமாக அமர்ந்திருக்கிறார்.*

மேலே: பிரபல இந்தி திரைப்படமான ஓம் சாந்தி ஓமின் பாடலைப் பிரதிபலிக்கும் ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியை டெல்லி குழு நடத்தியது.



இயக்குனர் நாகேஷ் ஒரு பிரதிநிதியுடன்.

PRIP *சாபூ மற்றும் உஷாவுடன்* RI *தலைவர் அரேஸ்ஸோவும், ஆனாவும்.*

RI *இயக்குனர் நாகேஷ் தனது மனைவி உமா மற்றும் மாநாட்டுத்தலைவர் ஷரத் ஜெயின் ஆகியோருடன் உரையாடுகிறார்.*

PRID AS *வெங்கடேஷ் மற்றும் வினிதா.*

RI இயக்குநர் நாகேஷ் மற்றும் உமா, மற்றும் PDG ஷரத் ஜெயின் மற்றும் ருச்சிகா, தங்கள் மகள்களுடன்.

மேலிருந்து: PRIP சேகர் மேத்தா மற்றும் ராஷி; இன்ஸ்டிடியூட் தலைவர் PDG ஷரத் ஜெயின் மற்றும் ருச்சிகா.

இடது: PRID ராஜு சுப்பிரமணியன் PDG சுரேஷ் ஹரியுடன்.

PRID வெங்கடேஷ், RID 3011 DGE அஜீத் ஜலான், RID 3192 DGE ரவிசங்கர் டகோஜு மற்றும் பாவ்லா.

PRIP பானர்ஜியுடன் PRID மனோஜ் தேசாய் மற்றும் ஷர்மிஷ்தா.

PRIDகள் P T பிரபாகர் மற்றும் C பாஸ்கர்.

வலது: PRIP *சாபூ மற்றும் உஷாவுடன்* PRIP KR *ரவீந்திரன் மற்றும் வானதி.*

கீழே: PRID *அனிருதா ராய்சௌத்ரி மற்றும் ஷிப்ரா.*

மேலே: PDG *ஜான் டேனியல் மற்றும்* DGN *மீரா ஜான்,* RI *தலைவர் அரேஸ்ஸோ, ஆனா,* RI *தலைவர் உதவியாளர் ஜான் டி ஜியோர்ஜியோ மற்றும் அவரது துணைவியார் மோனிக் சேம்பர்ஸ் ஆகியோருடன்.*

இடது: PRID*-கள் கமல் சங்வி, மகேஷ் கோட்பாகி மற்றும்* C *பாஸ்கர்.*

PRID *ராஜு சுப்ரமணியன் மற்றும் வித்யா.*

இன்ஸ்டிடியூட் கன்வீனர் RID *நாகேஷ், இன்ஸ்டிடியூட் தலைவர் ஷரத் ஜெயின் மற்றும் ருச்சிகா* RI *தலைவர் அரேஸ்ஸோ மற்றும் ஆனாவுடன்.*

மேலே: மாவட்டத்தலைவர்கள் மற்றும் அவர்களது துணைவர்களுடன் தலைவர் அரேஸ்ஸோ மற்றும் ஆனா.

இடது: RI இயக்குநர் முருகானந்தம், RI துணைத் தலைவர் அலைன் வான் டி போயல் மற்றும் PRID சுப்பிரமணியன்.

மேலே: PRIP ரவீந்திரன் மற்றும் வானதி PDG பவன் அகர்வால் மற்றும் இன்ஸ்டிடியூட் செயலர் மஞ்சு பாட்கே ஆகியோருடன் உரையாடுகிறார்கள்.

RI துணைத் தலைவர் டி போயல் மற்றும் ஃபிராங்கோயிஸ்.

PRIP சேகர் மேத்தா மற்றும் ராஷி PDG ரமேஷ் சந்தர் மற்றும் அவரது மனைவி ராஜ் ஸ்ரீ உடன்.

மேலே: RI தலைவர் அரேஸ்ஸோ மற்றும் ஆனா, RI இயக்குனர் நாகேஷ் மற்றும் ஷரத் ஜெயின் ஆகியோர் சார்ஜென்ட்களுடன்.

படங்கள்: ரஷீதா பகத் மற்றும் மாநாட்டு புகைப்படக் கலைஞர்கள்
வடிவமைத்தவர்: கிருஷ்ணா பிரதீஷ் S

Rotary PEOPLE OF ACTION

பிகானெரில் பெண்கள் நலத் திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

பிகானெர் அப்ரைஸ் ரோட்டரி சங்கம், RID 3053, உள்ளூர்ப் பெண்கள் தங்கள் திறன்கள், தன்னம்பிக்கை, பொருளாதாரச் சுதந்தரத்தை மேம்படுத்திக்கொள்ள உதவுவதற்காக மூன்று நாள் தொழில் பயிற்சிப் பயிலகம் ஒன்றை நடத்தியது. "எங்கள் ஊரில் பெரும்பாலான குடும்பங்கள் பெண்கள் தங்கள் வீடுகளுக்கு வெளியில் பணியாற்றுவதை ஊக்குவிப்பதில்லை. அதனால், பெண்கள் அழகுக் கலை, தையல், பூத்தையலில் ஈடுபட விரும்புகிறார்கள்" என்று விளக்குகிறார் மூன்று ஆண்டுகளாக இயங்கிவரும் இந்த அனைத்து மகளிர் சங்கத்தின் அமைப்பு உறுப்பினர், தலைவர் ருசி தஸ்தாரி.

மன நலம், நகக் கலை, கூந்தலை அழகுபடுத்தல், மணப்பெண் ஒப்பனை, ஆளுமை மேம்பாட்டு நிகழ்வுகளில் கிட்டத்தட்ட 80 பேர் பங்கேற்றனர். "நாங்கள் இணையப் பாதுகாப்பு, டிஜிட்டல் விழிப்புணர்வு பற்றிய அடிப்படை நிகழ்வையும் நடத்தினோம். இணைய நிதிப் பரிமாற்றம், சமூக ஊடகப் பயன்பாட்டுக்கான பாதுகாப்பான வழிமுறைகளை ஒரு வல்லுனர் கற்பித்தார். டிஜிட்டல் மோசடியில் சிக்கக்கூடிய இளம் பெண்களுக்கு இது மிகவும் பயன்படும்" என்கிறார் இவர்.

DG நிஷா ஷெகாவத் (இடமிருந்து நான்காவது), RC பிகானீர் அப்ரைஸ் தலைவர் ருச்சி தஸ்தாரி (இடமிருந்து இரண்டாவது) மற்றும் பெசுபான் நலச் சங்கத்தின் கிளப் உறுப்பினர்கள்.

இதற்குக் கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து, கூடுதல் தொகுதிகளுடன் இன்னொரு நீண்ட காலத் திட்டத்தை இந்தச் சங்கம் திட்டமிடுகிறது.

சமீபத்தில் இந்தச் சங்கம் பெஜூபான் நலச் சமூக வளாகத்தில் ஊனமுற்ற நாய்கள், பூனைகளுக்கான தாற்காலிகக் கட்டமைப்புகளுக்குப் பதிலாக, இரண்டு உறுதியான கான்கிரீட் விலங்குத் தங்குமிடங்களை நிறுவியது.

இன்னொரு பசுமை முன்னெடுப்பின்கீழ் உறுப்பினர்கள் ராதாநகர் குடியிருப்பில் 1,000 மருத்துவச் செடிகளை நட்டார்கள்.■

தொழிற்பயிற்சி பட்டறையில் பங்கேற்பாளர்களுடன் சங்க உறுப்பினர்கள்.

Rotary PEOPLE OF ACTION

200 பெண்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவிய RID 3233

ரஷீதா பகத்

அக்டோபர் மாதம், RID 3233-ஐ சேர்ந்த பல சங்கங்கள், சென்னையில் உள்ள 200 ஏழைப் பெண்களுக்கு சொந்தமாக தொழில்தொடங்கி வருமானம் ஈட்டி, குடும்பத்துக்கு நிதிப் பங்களிப்புச் செய்யும் வகையில் அவர்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்கியதுடன் நில்லாமல், அவர்களுக்கு தையல் பயிற்சியையும் அளிக்கும் திட்டத்தில் ஒன்றிணைந்தன.

RC சென்னை சன்ரைஸின் உறுப்பினரும் RI மாவட்டம் 3233-ன் பெண்கள் அதிகாரமளிப்புக் குழுவின் தலைவருமான அனீஸ் பேகமின் சிந்தனையில் உருவான இத்திட்டம், சமீபத்தில் புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. 200 பெண்கள் புத்தம் புதிய தையல் இயந்திரங்களுடன் வீடு திரும்பும் காட்சி உள்ளூர் ஊடகங்களில் வெளியானது.

இந்த திட்டம் குறித்து விவரங் களைத் தெரிவித்த அதன் தலைவரான அனீஸ், “ மாவட்ட ஆளுநர் தேவேந்திரன், என்னை அழைத்து திட்டக்குழு தலைவராக நியமிப்பதாக கூறினார். நான் ஏற்கெனவே பெண் தொழில்முனைவோராக உணவு தயாரிப்பு நிறுவனத்தை நடத்தி வருவதால் (ஹைகூ ஃபுட்ஸ்- ரொட்டி, சப்பாத்தி தயாரிக்கும் நிறுவனம்) பெண் தொழில்முனைவோரை உருவாக்க என்னிடம் ஏதாவது ஒரு திட்டம் இருக்கும் என்ற எண்ணத்தில் என்னை அணுகியிருக்கலாம். எங்கள் சங்கம் மூலம் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கி அவர்கள் சுயமாக தொழில் செய்ய வழிசெய்யும் திட்டம் என் மனதில் இருந்ததால், அதையே மாவட்டத் திட்டமாக மாற்றியமைக்க முடிவு செய்தேன்.

இதையடுத்து ஒரு சிறிய திட்டமாக இருந்தது மிகப்பெரிய திட்டமாக உருவானது. ஏழைப் பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கி, பயிற்சி அளிக்க ரூ.15 லட்சம் செலவிடப்பட்டது. சாதாரணமாக நாங்கள் தேர்வு செய்த உஷா தையல் மிஷின் விலை ரூ.7,500 என தெரிவிக்கப்பட்டது. ஆனால், நாங்கள் நிறுவனத்தாரிடம் பேசி, இது ஒரு சமூகசேவைத் திட்டம் என்று எடுத்துக்

திட்டத்தலைவர் அனீஸ் பேகம் (இடமிருந்து மூன்றாவது இடத்தில் அமர்ந்துள்ளார்), ராஜ்யசபா எம்.பி. கனிமொழி, DG D தேவேந்திரன், PDGக்கள் I S A K நாசர் மற்றும் G சந்திரமோகன் ஆகியோர் தையல் நாயகி திட்டத்தின் பயனாளிகளுடன். சவேரா ஹோட்டல்ஸ் MD நீனா ரெட்டி இடமிருந்து இரண்டாவது இடத்தில் அமர்ந்துள்ளார்.

DG D தேவேந்திரன் மற்றும் PDG I S A K நாசர் ஆகியோர் ராஜ்யசபா எம்பி கனிமொழிக்கு நினைவுப் பரிசு வழங்குகிறார்கள்.

கூறியபின் அவற்றை தலா ரூ.5000 என்ற விலையில் வாங்க முடிந்தது.

ஒரு நல்ல செயலைச் செய்யும்போது அது ஆதரவாளர்களை ஈர்க்கிறது. RID 3233-க்கு உட்பட்ட மெட்ராஸ் ஆர்ச் சிட்டி ரோட்டரி சங்கம், 33 தையல் இயந்திரங்களை வாங்கித் தர முன்வந்தது. இதேபோல மெட்ராஸ் நார்த் வெஸ்ட் ரோட்டரி சங்கம் 20 இயந்திரங்களை வாங்கித்தர உறுதியளித்தது. அனீஸ் மற்றும் அவரது இரண்டு நண்பர்கள் தலா 25 இயந்திரங்களை வாங்கிக் கொடுத்தனர். இப்படி 200 பெண்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்கும் "தையல் நாயகி" திட்டத்துக்கு பலரும் உதவினர்.

200 பயனாளிகள் அடையாளம் காணப்பட்டது எப்படி என்று அனீஸ் விளக்கினார். வடசென்னையில் வறுமையில் வாடும் மக்கள் அதிகம் இருப்பதால் அதில் கவனம் செலுத்தினோம். 12-ம் வகுப்புவரை படித்த, வேலைக்குச் செல்லாத, வருமானம் ஈட்ட வழியில்லாத, ஆனால் திறமையும், ஆர்வமும் உள்ள பெண்கள் பற்றிய விவரங்களை சேகரித்தோம். குறிப்பாக வடசென்னையில் சேரிப்பகுதியில் வசிக்கும் அதாவது வண்ணாரப்பேட்டையில் 100 பெண்கள் மற்றும் வியாசர்பாடி பகுதியைச் சேர்ந்த 100 பெண்களைத் தேர்ந்தெடுத்தோம். அவர்களுக்கு தையல் பயிற்சி பெறுவதில் ஆர்வமும் இருந்தது.

அடுத்த நடவடிக்கை அவர்களுக்கு தையல் திறன் பயிற்சி அளிப்பது. எனது நண்பர் ஒருவர் அழகுக்கலை மற்றும் தையல் கலை பயிற்சி அளித்து வருகிறார். எனவே அவரின் உதவியை நாடினேன். "200 பெண்களுக்கு தையல் பயிற்சி அளித்தால் மட்டும் போதாது. வெறும் பிளவுஸ் தைப்பதால் மட்டும் அவர்களால் வருமானம் ஈட்டமுடியாது. எனவே அவர்களுக்கு 'ஆரி' வேலைப்பாடு நுணுக்கங்களையும் கற்றுத்தர வேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் அதிக வருமானம் பெறமுடியும்" என்றேன். அதற்கு அவள்

கனிமொழி ஒரு பெண்ணுக்கு தையல் இயந்திரத்தை வழங்குகிறார். DG தேவேந்திரன் மற்றும் அனீஸ் பேகம் ஆகியோரும் உள்ளனர்.

ஒப்புக்கொண்டாள்” என்று திட்டத் தலைவர் அனீஸ் கூறினார்.

பெண்களின் வாழ்க்கையை எப்படி மேம்படுத்துவது என்பது பற்றி அனீஸ் அடிக்கடி சிந்திப்பார். உதாரணமாக முன்பு, பெண்களுக்கு ஆட்டோ ஓட்டும் பயிற்சி அளித்து அவர்களுக்கு ஆட்டோ வழங்கும் ஒரு திட்டத்தை செயல்படுத்தினார். இந்த திட்டத்தின் கீழ் 115 ஆட்டோக்கள் வழங்கப்பட்டன. அதுதான் பின்னர் பிங்க் ஆட்டோ திட்டமாக பிரபலமானது. சென்னையில் நடைபெற்ற தலைமைத்துவ மாநாடு-2025-ல், ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ மற்றும் தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்று 100 பெண்களுக்கு ஆட்டோக்களுக்கான சாவியை வழங்கினர். இந்த ஆர்வமுள்ள ரோட்டேரியன், 2019-ம் ஆண்டு பயனாளிகளின் ஓட்டுநர் பயிற்சிக்கு செலுத்த வேண்டிய ரூ.9,000 தொகையையும் செலுத்தியுள்ளார். அப்போது ஒரு ஆட்டோவின் விலை ரூ.2.75 லட்சம். இதில் ரூ.1.25 லட்சத்தை அவர், தன் கையிலிருந்து செலவழித்துள்ளார்.

சரியான கூட்டாளர்களுடன்- இரண்டு மாநகராட்சிப் பள்ளிகளில், பள்ளி செயல்படாத நேரத்தில் ஓட்டுநர் பயிற்சி அளிக்க தமிழக அரசு அனுமதி வழங்கியது. RID 3233-ன் DGN ஆன ரோட்டேரியன் கணபதி சுரேஷுக்குச் சொந்தமான டிரினிட்டி டிரெய்னிங் அகாதெமி மற்றும் அதன் இணை நிறுவனரும் தலைமைச் செயல் இயக்குநருமான கவிதா ராம்மோகன் ஆகியோர் பெண்களுக்கு பயிற்சி அளிக்க முன்வந்தனர். 75 நாள் பாட பயிற்சி வகுப்புக்கான கட்டணம் ஒரு நபருக்கு ரூ.3,000. இதை கட்டத்தேவையில்லை. ஏனெனில் இந்த தொகை அரசின் நலத்திட்டத்தின் கீழ் எங்களுக்கு கிடைத்துவிடும் என்று அவர், அனீஸிடம் கூறிவிட்டார்.

பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 200 தையல் இயந்திரங்களும் வாங்கப்பட்டன. மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு திட்டத்தை தொடங்கிவைத்தார். 200 ஏழைப் பெண்கள் மேம்பாட்டுக்கு பொருளாதார சுதந்திரத்துக்கு வழிவகுக்கும் இந்த திட்டத்தை நிறைவேற்றிய ரோட்டரியை அவர் பாராட்டினார். “பெண்கள் தயாரிக்கும் பொருட்களை சந்தைப்படுத்தவும் விற்கவும் ஆதரவு கிடைப்பதை உறுதிசெய்யுமாறு திட்டக்குழுவினரை அவர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். இந்த திட்டத்தின் அவசரத் தேவையை நான்புரிந்துகொண்டேன். உங்களது முயற்சிக்கு தமிழக அரசு ஆதரவு அளிக்கும்” என்றும் அவர் உறுதி கூறினார்.

கனிமொழி எம்.பி.யின் ஆலோசனையை நாங்கள் கவனத்தில் கொண்டோம். “அம்பத்தூர் கிளாத்திங் மற்றும் காட்டன் குர்திக்களை அதிக அளவில் தயாரித்து ஏற்றுமதி செய்யும் நண்பர் ஒருவரிடமும் நான் பேசினேன். இந்த பெண்களுக்கு தையல் வேலைகளை கொடுக்குமாறு கூறினேன். சில மொத்த வியாபாரிகளுடனும் அவர்களுக்கு தொடர்பு ஏற்படுத்திக்

கொடுத்துள்ளேன். அவர்களிடமிருந்து துணியை வாங்கி வீட்டிலிருந்தபடியே ஆடையாக தைத்துக் கொடுக்க அறிவுறுத்தியுள்ளேன். சமூக ஊடகங்கள் மூலம் சந்தைப்படுத்துதல் பணியும் மேற்கொள்ளப்படும் என்றார் அனீஸ்.

RID 3233, DG தேவேந்திரன் உரையாற்றுகையில், எல்லாவற்றுக்கு அடித்தளம் முக்கியமானது. பெண்கள் கல்வி கற்பதன் அவசியத்தை உணரவேண்டும். ஓரளவு கல்வி அறிவு இருந்தால் முன்னேறலாம் என்றார். அவரது செய்தி தெளிவாக இருந்தது. இன்று தையல் தொழில் ஈடுபட்டுள்ளவர்கள், நாளையே சிறிய வியாபாரியாக மாறலாம். ஆனால், அதற்கான அறிவும், திறமையும் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

முதலில் திட்டம் உருவானபோது இலக்கு துணிச்சலாக இருந்தது. 200 ஏழைப் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்குவது மட்டுமல்ல, அவர்களுக்கு பயிற்சி அளித்து, சுயசார்புடன் வருமான தேட வழிவகுப்பது என்பது சாதாரணமா காரியம் அல்ல. ஆனால், இதை வெற்றிகரமாக செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. மேலும் உலகம் முழுவதும் உள்ள ரோட்டேரியன்கள் இந்த நோக்கத்தை செயல்படுத்த ஒன்றாக அணி திரண்டனர். RID 3233-ல் உள்ள அனைத்து சங்கங்களும் கைகோர்த்தன. நண்பர்களும் கூட்டாளர்களாயினர். ஒரு தனிநபரின் கனவு, கூட்டு இயக்கமாக மாறியது. மன உறுதியால் இணைக்கப்பட்டது. தோல்வியை விரும்பாத சமூகத்தால் ஆதரிக்கப்பட்டது என்று DG மேலும் கூறினார். சிறந்த தொழிலதிபரும், நன்கொடையாளருமான நீனா ரெட்டியும் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

இந்த கூட்டத்தில் உரையாற்றிய PDG I S A K ஐசக் நாசர், பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்தை ரோட்டரி அர்ப்பணிப்புடன் செயல்படுத்தி வருவதாக கூறினார். “இதை நாங்கள் வெறும் சேவையாக பார்க்கவில்லை. இது மனித ஆற்றலை மேம்படுத்தும் முதலீடாக பார்க்கிறோம்” என்று அவர் மேலும் கூறினார். PDG சந்திரமோகன், பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்தை தையல் நாயகியுடன் தொடர்புபடுத்தி பேசினார். பிங்க் ஆட்டோ திட்டம் எவ்வாறு பெண்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது, அவர்களுக்கு பொருளாதார சுதந்திரத்தை கொடுத்தது என்று விரிவாக எடுத்துக் கூறினார்.

நிகழ்வில் கூடியிருந்த ரோட்டேரியன்களுக்கு 200 பெண்கள் தையல் இயந்திரங்களை நேரில் பெற்றது மகிழ்ச்சியான தருணமாக அமைந்திருந்தது. “ஒவ்வொரு பெண்ணின் பின்னால் ஒரு குடும்பம் இருக்கிறது, ஒவ்வொரு குடும்பத்தின் பின்னாலும் இப்போது சாத்தியக்கூறுகளுடன்கூடிய மறுகற்பனை செய்யப்பட்ட எதிர்காலம் உள்ளது. இந்த பெண்கள் மகிழ்ச்சியுடன் தையல் இயந்திரங்களை பெற்றபோது ஒவ்வொருவரும் குடும்பத்தை ஸ்திரத்தன்மையுடன், மகிழ்ச்சியுடன் நடத்திச் செல்லவும், கண்ணியமாக வாழவும் தயாராகிவிட்டனர் என்பதையே குறிக்கிறது. மேலும் அவர்களின் குழந்தைகளுக்கு நல்ல கல்வி

கிடைக்கவும் வழியேற்பட்டுள்ளது. இதன் மூலம் குடும்பத்தினர் முழுவதும் சிறப்பான வாழ்க்கையை பெறமுடியும்" என்கிறார் அனீஸ் பேகம்.

அரங்கம் முழுவதுமே மகிழ்ச்சியிலும் சிரிப்பிலும் மூழ்கியிருந்தது. பெண் தொழில்முனைவோர் தங்கள் பொருள்களை ஸ்டால்களில் காட்சிப்படுத்தியிருந்தனர். பெண்கள் மேம்பாட்டுக்கு அவர்களே சரியான எடுத்துக்காட்டாக இருந்தனர். இது 200 பெண்களுக்கும் உற்சாகம் அளிப்பதுபோல் இருந்தது. "நாளை இது நீங்களாக இருக்கலாம்" என்று RID 3233-ன் பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்தலைவர் பெருமையுடன் கூறினார்.

மாற்றத்தை கொண்டுவர நிகழ்ச்சிகளும், திட்டங்களும் பெரிதாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை இந்த நிகழ்வு காட்டுகிறது. "இந்த பெண்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் தையல் இயந்திரங்கள் பலவிதமான சாத்தியக்கூறுகளை முணு முணுப்பதாக நாங்கள் உணர்ந்தோம். சிலர் பக்கத்து வீட்டுக்காரர்களின் கிழிந்த துணியை தைத்துக் கொடுக்கலாம். பலர் புதிய ஆடைகளை விற்பனைக்காக தயாரிக்கலாம். ஒரு சிலர் தாங்கள் பெற்ற பயிற்சி மற்றும் அனுபவத்தைக் கொண்டு பிறருக்கு பயிற்சி அளிக்கலாம். பாதைகள் மாறினாலும் இறுதியில் செல்லும் இடம் ஒன்றுதான். அதாவது தன்கையே தனக்கு உதவி என்று சுயசார்புடன் தொழில் செய்து, வருமானம் ஈட்டி, கண்ணியத்துடன் வாழலாம். நல்ல எதிர்காலத்தை அமைத்துக்கொள்ளலாம்."

தற்போது ஒரு மாவட்டத் திட்டமாக மாறியுள்ள இந்த திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுத்தப்பட்டதை அடுத்து (PDG A P கன்னா ஆலோசனையின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு) இதை அதிக பெண்கள் பலன்பெறும் விரிவான திட்டமாகச் செயல்படுத்த அனீஸ் உறுதிபூண்டுள்ளார். "அடுத்த ஆண்டு 500 ஏழைப் பெண்களுக்கு பயிற்சி அளித்து தையல் இயந்திரம் வழங்கவும், விழாவுக்கு முதல்வர் எம்.கே.ஸ்டாலினை அழைக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார். அதற்கும் அடுத்த ஆண்டு 1,000 பெண்களுக்கு வாழ்வளிக்கும் திட்டமாக இதை மேலும் விரிவுபடுத்தவும் முடிவு செய்துள்ளார். கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்ட நிதி (CSR) மூலமும் இந்த திட்டத்தை செயல்படுத்தவும் திட்டமிட்டுள்ளதாக அனீஸ் பேகம் கூறினார்.■

ஒளியைப் பரப்பிய உண்டியல்

ரோட்டரி செய்திக்குழு

ஆறு வயது வீரஜ் அகர்வால் தன்னுடைய உண்டியலைத் திறந்து, அதிலிருந்த காசுகளையெல்லாம் தன் தாத்தா விமல் அகர்வாலிடம் கொடுத்தார். RC லஷ்மிபூர் கேரி, RID 3120, உறுப்பினரான விமல் அகர்வால் இது ஒரு சேவைத் திட்டமாக மாறும் என்று அப்போது எதிர்பார்த்திருக்கவில்லை. குஷியோன் பரி தீபாவளி (மகிழ்ச்சியான தீபாவளி) என்ற பெயரில் இந்தச் சங்கம் தந்தேராஸ் அன்று நடத்திய நிகழ்ச்சி அருகிலுள்ள சேரிப் பகுதிக் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவந்தது. வீரஜின் சேமிப்புதான் முதல் நிதி. அதைப் பயன்படுத்தி, இந்தப் பண்டிகையைக் கொண்டாடும் வாய்ப்பு அவ்வளவாகக் கிடைக்காத குழந்தைகளுக்கு இனிப்புகள், மத்தாப்புகள் வாங்கப்பட்டன என்று சிரிக்கிறார் தாத்தா அகர்வால்.

இந்தச் சங்கம் சுமார் 100 குழந்தைகளை உத்தரப் பிரதேச மாநிலம் லஷ்மிபூர் கேரியில் உள்ள சகம் விடுதி, ஷ்ரத்தா உணவகத்துக்கு அழைத்தது. அவர்களில் பலர் இப்போதுதான் முதன்முறையாகக் குளிரூட்டப்பட்ட உணவகத்தில், பல உணவுப்பொருட்களிலிருந்து தேர்ந்தெடுத்துச் சாப்பிடுகிறார்கள்.

சாப்பிட்டபிறகு, பல போட்டிகள், விளையாட்டுகள், மகிழ்ச்சியான செயல்பாடுகள் நடைபெற்றன. குழந்தைகள் பரிசுப் பொதிகள், பொம்மைகள், இனிப்புகள், பட்டாசுகளுடன் வீட்டுக்குத் திரும்பினார்கள். இந்தத் திருவிழாவை அவர்கள் பல ஆண்டுகளுக்கு நினைவில் வைத்திருப்பார்கள்.

சங்கத் தலைவர் பிரீத்தி சிங், செயலாளர் அருணா அகர்வால் இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். "விளக்குகளால் மட்டுமின்றி, இதயங்களை ஒளிரச்செய்கிற அன்புச் செயல்பாடுகளின் வழியாகவும் ஒளியைப் பரப்பும்" முயற்சி என்று இவர்கள் அதை விளக்கினார்கள். PDG டாக்டர் அஜய் குமார் அரோரா உள்ளிட்ட மூத்த உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.■

செயற்கைக் கைகளைக் கொண்டு வாழ்க்கைகளை மாற்றியமைத்தல்

ரோட்டரி செய்திக்குழு

சிலர் ஒரு தண்ணீர்க் கோப்பையைக் கையால் பிடிப்பது, ஒரு பொருளை எடுப்பது ஆகியவற்றைச் செய்து விட்டு, தங்கள் திறனை மீண்டும் கண்டறிந்ததாக எண்ணி மகிழ்ந் தார்கள். சிலர் காய்கறிகளை எளிதாக வெட்டினார்கள், வண்டிகளைத் தன்னம்பிக்கையுடன் ஓட்டினார்கள். பல ஆண்டுகளாக அவர்களால் இதைச் செய்யமுடியவில்லை. கண்ணீர், புன்னகை, நம்பமுடியாத உணர்வு... இவை எங்கும் நிறைந்திருந்தன. மக்கள் மீண்டும் சுதந்தரத்தின் மகிழ்ச்சியை அனுபவித்தார்கள்.

மேற்கண்ட அனைத்தும், நவம்பரில், மகாராஷ்டிரத்தின் பீட் பகுதியில் ஜீவன்ஜ்யோத் மருத்துவ மனையில் நடத்தப்பட்ட இரண்டு நாள் செயற்கை கைவழங்கல் முகாமில் கண்ட காட்சிகள். இந்த முன்னெடுப்பை ஆரிய வைசிய மகாசபா (பீட்), இனாலி அறக்கட்டளை (புணே), RC புணே டவுன்-டௌன், RID 3131, ஆகியோருடன் இணைந்து நடத்தியது RC பீட் மிட்-டவுன், RID 3132.

இந்த முகாமில் மொத்தம் 103 மின்கலத்தால் இயக்கப்படுகிற எலக்ட்ரானிக் செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டன. “இந்தக் கருவிகள் எலும்பியல் குறைபாடுள்ள மக்கள் நடமாட்டம், கண்ணியம், தன்னம்பிக்கையைத் திரும்பப் பெற உதவின, அவர்களுடைய வாழ்க்கைகளில் புதிய நம்பிக்கை அத்தியாயத்தைக் கொண்டு வந்தன” என்றார் சங்கத் தலைவர் ராகுல் போரா.

PDG ஓம் பிரகாஷ் மோடிபாவாலெ, கூட்டாளர் நிறுவனங்களின் பிற ஆளுமைகள் தொடங்கி வைத்தார்கள். நிறைவு நிகழ்ச்சியில் DGE ஜயேஷ் படேல், PDG ஹரீஷ் மோட்வானி கலந்து கொண்டார்கள். RC-கள் பீட் மிட்-டவுன், புணே டவுன்-டௌன் இடையிலான கொடிப்பரிமாற்ற நிகழ்வும் நடைபெற்றது.

போரா, சங்க செயலாளர் பிரகாஷ் கொன்கா இந்த முன்னெடுப்பை வழி நடத்தினார்கள். திட்டத் தலைவர் நிலேஷ் ஜக்டாலெ, சங்க உறுப்பினர் வைபவ் ஜர்கர் இதைச் சிறப்பாகச் செயல்படுத்தினார்கள். “ஜீவன்ஜ்யோத் மருத்துவ மனையின் மருத்துவர்கள், ஃபிசியோதெரபிஸ்ட்கள், பல ரோட்டரி உறுப்பினர்கள் ஓய்வின்றி உழைத்து, ஒவ்வொருவருக்கும் பொருத்தல், பயிற்சிச் செயல்முறையை ஆதரித்தார்கள்” என்கிறார் போரா.■

புனேவைச் சேர்ந்த ரோட்டேரியன் ஷேக் ஹசன், பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கிறார்.

என்னை விட்டுப் பிரியாதே

ரஷீதா பகத்

ஹிருஷிகேஷ் முகர்ஜியின் சிறந்த படங்களில் ஒன்றான அனுபமா (1966) திரைப்படத்தில், ஹேமந்த் குமாரின் “யா தில் கி சுனோ துனியா வாலோ, யா முஜ் கோ அபி சுப் ரஹனே தோ” என்ற உணர்ச்சிப்பூர்வமான மெல்லிசையை, திகைப்பூட்டும் தர்மேந்திரா பாடி, ஷர்மிளா தாகூரை மென்மையாக மயக்கியதை யாரால் மறக்க முடியும்? பிரசவத்தின் போது தனது தாயின் மரணத்துக்கு ஷர்மிளாவைக் காரணம் சொல்லும் தந்தையால் நிராகரிக்கப்பட்டு, தன் உலகிற்குள்ளேயே சுருங்கிப் போய் பேசுவதை நிறுத்திவிடும் ஷர்மிளா தாகூர் அழகாக நடித்த உமாவின் கதையை மையமாகக் கொண்ட திரைப்படம் இது என்றாலும், தர்மேந்திரா தனது ஆரம்பகால வாழ்க்கையின் மிகவும் ஈர்க்கக்கூடிய நடிப்புகளில் ஒன்றை இதில் வழங்கினார், அவர் அமைதியாக, அக்கறையுடனும் அன்பாகவும் உமாவுக்குத் துணையாக நின்றார்.

89 வயதில் மூத்த நடிகர் தனது குடும்பத்தினர் மற்றும் ரசிகர்களிடமிருந்து விடைபெற்றபோது, அவரது நினைவாக அதிகம் குறிப்பிடப்பட்டவை, அவரது செல்லப்பெயரான கரம் தரம், அவர் நடித்த பெரும்பாலான கதாபாத்திரங்களில் வெளிப்பட்ட அவரது கம்பீரமான தோற்றம், மற்றும் தர்மேந்திராவிற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த பாலிவுட்டிற்கும் மிகவும் உன்னதமான படமான ரமேஷ் சிப்பியின் ஷோலே (1975) ஆகும், இதில் அவர் அமிதாப் பச்சனின் அமைதியான மற்றும் உறுதியான ஜெய்யுக்கு இணையாக, பகட்டான மற்றும் கலகலப்பான வீருவாக நடித்தார். இருவரும் முன்னாள் கைதிகள். ராம்கர் கிராமத்தை அச்சுறுத்தும் கொடூரமான கொள்ளைக்காரன் கப்பர் சிங்கைப் பிடிக்க, தாகூர் பால்தேவ் சிங் (சஞ்சீவ் குமார்) அவர்களால் வேலைக்கு எடுக்கப்படுகிறார்கள்.

சலீம்-ஜாவித்தின் மின்னல் போன்ற வசனங்கள், மூன்று முக்கிய ஆண் நட்சத்திரங்களின் நடிப்பு, அதே போல் ஹேமா மாலினி நடித்த துடிப்பான, தொடர்ந்து பேசிக்கொண்டே

இருக்கும் பசந்தி, எல்லாவற்றிற்கும் மேலாக அம்ஜத் கான் கப்பர் சிங் கதாபாத்திரத்தை மிகச் சிறப்பாக வழங்கியது, ஆகியவை இந்தப் படத்திற்கு ஒரு காலத்தால் அழியாத கிளாசிக் என்ற அந்தஸ்தையும் பட்டத்தையும் அளித்தது, இது 50 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்திய பார்வையாளர்களிடையே தொடர்ந்து எதிரொலிக்கிறது. நகைச்சுவைத் துறையில் தர்மேந்திரா தனது நிபுணத்துவத்தை உறுதியாக நிலைநிறுத்தியது இங்கேதான்.... குடிகாரனான வீரு, மௌசி தனது மருமகள் பசந்தியைத் திருமணம் செய்ய அனுமதி வழங்காவிட்டால் தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டும், மறக்க முடியாத காட்சி நினைவிருக்கிறதா?

இங்கு தர்மேந்திராவின் வசன உச்சரிப்பு மற்றும் கோவிலில் ஒரு தூணுக்குப் பின்னால் மறைந்து, பசந்தியை தனது காதலை ஏற்கும்படி வற்புறுத்தும் சிவபெருமானாக அவர் நடிக்கும் காட்சி, பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்து, சிரிப்பில் ஆழ்த்தியது. ஹிருஷிகேஷின் சுப்கே சுப்கே படத்திலும், அவர் ஒரு டிரைவராக வேடமிட்டு தனது கதாநாயகியின் (ஷர்மிளா தாகூர்) பாதுகாவலரான ஓம் பிரகாஷை முட்டாளாக்கி அதனால் ஏற்படும் வேடிக்கையான விளைவுகள், ஒரு கம்பீரமான நடிகரிடமிருந்து எதிர்பார்க்கப்படாத நகைச்சுவையை வெளிப்படுத்தி தர்மேந்திராவின் திறனை நிரூபித்தது.

அமிதாப் பச்சனுடன் தர்மேந்திரா ஷோலேயில் (1975).

"ஹி மேன்" என்று பரவலாக அறியப்பட்ட, உயரமான மற்றும் அகலமான தோள்களைக் கொண்ட இந்த நடிகரின் கம்பீரமான ஆளுமை ஃபூல் அவுர், பத்தர் போன்ற படங்களிலும் அதைத் தொடர்ந்த பிற படங்களிலும் சிரமமின்றி வெளிப்பட்டது. லூதியானாவில் இருந்து எந்த ஒரு காட்ஃபாதரும் இல்லாமல் பம்பாய்க்கு வந்து, தனது சொந்தத் திறமையால் பாலிவுட்டில் பெரிய இடத்தைப் பிடித்தவர், ஆரம்ப காலங்களில் தான் யாரென்றும் தெரியாதபோது, பம்பாய் முழுவதும் ஒட்டப்பட்டிருந்த திலீப் குமாரின் சுவரொட்டிகளைப் பார்த்து பொறாமைப்பட்டு, நான் எப்போதாவது அவரைப் போல ஆக முடியுமா? என்று ஆச்சரியப்பட்டதாக ஒரு பேட்டியில் ஒப்புக்கொண்டார், பின்னர் அவரது தோற்றத்திற்காக அவரது பெண் ரசிகர்களால் ஆராதிக்கப்பட்டார். அவரது செல்லப்பெயரான கரம் தரம் எல்லாவற்றையும் சொல்லவில்லையா? ஏழு தசாப்தங்கள் நீடித்த அவரது திரை வாழ்க்கையில், அவர் சுமார் 300 படங்களில் நடித்தார், மேலும் ஆரம்ப ஆண்டுகளில், அவரது கிரேக்க-கடவுள் போன்ற தோற்றத்தால், அவர் பெரும்பாலும் பெண் பார்வையாளர்களை இலக்காகக் கொண்ட காதல் பாத்திரங்களில் இடம்பெற்றார்.

கரடுமுரடான இந்த ஹீரோவுக்கு மிக கச்சிதமான முக அம்சங்களும் இருந்தது ஒரு ஆச்சரியம் இல்லையா, மேலும் இந்தக் கலவை பெண் ரசிகர்களை பைத்தியமாக்கியது. இத்துடன் அவரது மர்மமான புன்னகை, மென்மையான ஆளுமை மற்றும் ஒரு பழமையான வசீகரம் ஆகியவை சேர, பெண்களால் அவரை மறக்க முடியவில்லை. அப்படியிருக்க, அவர் ஏற்கனவே நான்கு குழந்தைகளுடன் திருமணமானவர் என்பதையும், தனது குடும்பத்தை ஒருபோதும் கைவிட மாட்டார் என்பதையும் அறிந்திருந்தும் ஹேமா மாலினி அவரைக் காதலித்தது எப்படி? ஒரு திரைப்படத்தின் பிரீமியரில் ஹேமா மாலினியை பார்த்த பிறகு அவர் மீது காதல் கொண்டார் மற்றும் சளைக்காமல் அவரைப் பின்தொடர்ந்தார்,

மேலும் பலமுறை அவரை மறுத்த பிறகு, தான் ஒப்புக்கொண்டதாக ஹேமா மாலினி தனது சுயசரிதையில் எழுதியுள்ளார். குழப்பமான ஒரு ஏற்பாட்டில், அவர்கள் திருமணம் செய்து, இரண்டு மகள்களுக்குப் பெற்றோரானார்கள், அதே சமயம் அவர் தனது முதல் குடும்பத்துடன் தொடர்ந்து வாழ்ந்தார். ஆனால் அவர் கூறியது போல: “அவர் எப்போதும் இருந்தார்; ஒவ்வொரு முறையும், எல்லா இடங்களிலும்.”

அவர் மறைந்தபோது பாலிவுட்டின் பல நடிகைகள் மனம் உடைந்ததில் ஆச்சரியமில்லை. ப்ரீத்தி ஜிந்தா தனது அஞ்சலியில், “இரக்கம் கொண்டவர் மற்றும் இந்திய சினிமாவின் மிகப் பெரிய ஜாம்பவான், இத்தனைக்கும் மேலாக எல்லாமே இதயத்தின்படி செய்த ஒரு மனிதரைப் பற்றி என்ன சொல்வது? அவரை எனக்குத் தெரியாத போது நான் அவரை நேசித்தேன், அவரைச் சந்தித்தபோது இன்னும் அதிகமாக நேசித்தேன். என் இதயத்தில் துக்கம் பரவுவதால் வார்த்தைகள் வரவில்லை” என்று எழுதினார். ஏழு படங்களில் அவருடன் நடித்த ஷர்மிளா, அவரை “பாசம் நிறைந்த, எளிமையான மற்றும் அக்கறையுள்ள நபர், முற்றிலும் கபடமற்றவர்” என்று விவரித்தார்.

ஷபானா ஆஸ்மி மற்றும் ஜெயா பச்சன் ஆகியோருடன் சேர்ந்து, இவரும் அவரை மிகவும் அழகான ஹீரோவாகக் கருதினார், மேலும் கவுன் பனேகா குரோர்பதி நிகழ்ச்சியின் ஒரு பகுதியில் அமீர் கான், தனது மனைவி ஜெயா மற்ற ஹீரோக்களுடன் படப்பிடிப்பில் இருக்கும்போது தான் எப்போதாவது பாதுகாப்பற்றதாக உணர்ந்தாரா என்று அமிதாப் பச்சனிடம் கேட்டபோது, அவர்

தர்மேந்திரா தனது மகன் சன்னி தியோலுடன்.

மீனா குமாரியுடன், ஏழு படங்களில் அவரது பெண் கதாநாயகி.
இடது: ஹேமா மாலினியுடன் (தும் ஹசீன் மைன் ஜவான், 1970).

1988-ம் ஆண்டு வெளியான சல்சாலா திரைப்படத்திலிருந்து ஒரு காட்சி.



ஜெயா பச்சனுடன் (*ஆனந்தி*, 1975).

தர்மேந்திராவின் மீது மோகம் கொண்டதாகத் தன்னிடமே ஜெயா கூறியதாக அமிதாப் ஒப்புக்கொண்டார். புகழ்பெற்ற பாடலாசிரியரான ஜாவித் அக்தர் ஒருமுறை நடிகரைப் பற்றி தனது பாராட்டுகளைத் தெரிவிக்கையில், "நான் கிரேக்கக் கடவுளை பார்த்ததில்லை. அதற்காக நான் வருத்தப்படவில்லை. ஏனென்றால் நான் தர்மேந்திராவைப் பார்த்திருக்கிறேன். ஒரு மனிதன் இவரைப் பார்த்தால், பார்த்துக்கொண்டே இருப்பான், நாங்கள் தர்மேந்திராவை முதன்முதலில் பார்த்தபோது, எங்கள் நிலையும் அப்படியே இருந்தது" என்றார்.

ஃபூல் அவுர், பத்தர், காஜல், மஜ்லி தீதி போன்ற படங்களில் இவருக்கு கதாநாயகியாக நடித்த புகழ்பெற்ற மீனா குமாரி, இவர் மீது ஆழமாக காதல் கொண்டதில் ஆச்சரியமில்லை!

திலீப் குமார் மீது தர்மேந்திரா வைத்திருந்த அன்பு மற்றும் மரியாதை குறித்து மீண்டும் பேசுகையில், திலீப் குமாரின் சுயசரிதை தி சப்ஸ்டன்ஸ் அண்ட் தி ஷேடோவில், 1952-ம் ஆண்டு ஒருமுறை கல்லூரி மாணவராக பம்பாய்க்குச் சென்றபோது, அவர் எப்படித் தடையின்றி திலீப்பின் வீட்டிற்குள் நுழைந்து அவரது படுக்கை அறைக்குள் சென்று விட்டார் என்பதை அவர் நினைவுகூறுகிறார். திடீரென்று மூத்த நடிகர் விழித்தெழுந்து, அங்கு ஒரு அந்நியன் நிற்பதைக் கண்டு மற்றவர்களை உதவிக்கு அழைத்தார், உடனே அந்த இளைஞன் ஓடிவிட்டான். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் மீண்டும் பிலிம்பேர் திறமை வேட்டையில் பங்கேற்பதற்காக பம்பாய்க்கு வந்தார், மேலும் அவரது ஒப்பனைக் கலைஞர் தான் திலீப்பின் சகோதரி என்று கூறி, இருவருக்கும் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தார். "திலீப் என்னை வரவேற்று, மூத்த சகோதரரைப் போல

ஷர்மிளா தாகூருடன் (*அனுபமா*, 1966).

மிகவும் பிரமாண்டமானவை, அமிதாப் பச்சன் போன்ற திறமையுள்ள ஒரு நடிகரால் மட்டுமே அவருக்கு ஈடாக நிலைத்திருக்க முடிந்தது. ஆனால் என் தனிப்பட்ட நம்பிக்கையில், இந்த இரண்டு படங்களிலும் அவர் நடித்த கதாபாத்திரங்களின் உயிர்ப்பும் உற்சாகமும் காரணமாக, கௌரவங்களை தம்மோடு எடுத்துச் சென்றவர் தர்மேந்திராவே.

எக்ஸ் தளத்தில் தனது அஞ்சலியில் அமிதாப் எழுதியது: "மற்றொரு வீரமான மாபெரும் மனிதர் நம்மை விட்டுச் சென்றிருக்கிறார்; சகிக்க முடியாத ஓசையுடன் ஒரு அமைதியைப் விட்டுச் சென்றிருக்கிறார். அவர் பஞ்சாபின் கிராமத்து மண்வாசனையைத் தம்முடன் கொண்டு வந்து, அதே இயல்பில் வாழ்ந்தவர் அவரின் சிரிப்பு, கவர்ச்சி, அன்பு – அவரைச் சுற்றி வந்த அனைவருக்கும் சமமாக பகிரப்பட்டது நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்றே இப்போது வெறுமையாக தோன்றுகிறது."

தர்மேந்திரா இறுதி வரை சுறு சுறுப்பாக இருந்தார், மேலும் 2023-ம் ஆண்டு கூட ராக்கி அவுர் ராணி கி பிரேம் கஹானி என்ற திரைப்படத்தில் ஒரு குறுகிய ஆனால் மறக்க முடியாத பாத்திரத்தில் நடித்தார். இந்தச் சராசரிப் படத்தின் வெற்றி பெற்ற ஒரு காட்சியில், சக்கர நாற்காலியில் இருக்கும் தர்மேந்திரா எழுந்து, நடக்க ஆரம்பித்து, முகமது ரஃபி–ஆஷா போஸ்லேவின் அழியாத பாடலான: 'அபி ந ஜாவோ சோட்கர் கி தில் அபி பரா நஹி' என்று பாடிக்கொண்டே, ஷபானா ஆஸ்மி அறையை விட்டு வெளியேறும் போது, அவரது நரைத்த முடியுடன் வசீகரிப்பார். நான் அந்த காட்சியை யூடியூபில் எத்தனை முறை வேண்டுமானாலும் பார்க்கலாம்! 87 வயதிலும் தர்மேந்திராவின் மாயாஜாலம் அப்படியேத்தான் இருந்தது.

இந்த மூத்த நடிகர், கோடிக் கணக்கான ரசிகர்களைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு, வாழ்க்கையின் மேடையில் தனது கடைசி வணக்கத்தை செலுத்தியபோது, எதிரொலித்த வார்த்தைகள் அபி ந ஜாவோ சோட்கர்...■

என்னிடம் பேசினார், அன்புடனும் அக்கறையுடனும், தான் எப்படி ஒரு நடிகரானார் என்பதையும், ஆரம்பத்தில் இந்தத் தொழிலின் தேவைகளைப் புரிந்துகொள்வது அவருக்கு எவ்வளவு கடினமாக இருந்தது என்பதையும் விவரித்தார்."

அவர் புறப்படுவதற்கு முன், மெல்லிய சட்டையில் அந்த இளைஞன் நடுங்குவதைக் திலீப் கவனித்தார். அவர் தர்மேந்திராவை மேலே அழைத்துச் சென்று தனது அலமாரியில் இருந்து ஒரு ஸ்வெட்டரை எடுத்துக் கொடுத்து, அவரை அணைத்து, "வாயில் வரை வந்து வழியனுப்பி வைத்தார். அந்த அணைப்பு உண்மையானது என்பதால் அந்த அணைப்பை என்னால் இன்னும் உணர முடிகிறது.

வெவ்வேறு கதாபாத்திரங்களை தர்மேந்திரா கையாண்ட பன்முகத்தன்மையும், எளிமையும்தான் அவரை ஒரு சிறந்த நடிகராகத் தனித்து திகழச் செய்தது. பின்னர் அவருக்கு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது, மேலும் அவர் லோக்சபா எம்.பி.யாகவும் ஆனார்.

திரையில் அமிதாப் பச்சனுடனான அவரது கூட்டணி மாயாஜாலமானது; அது ஷோலே ஆக இருந்தாலும் சரி அல்லது சுப்கே சுப்கே ஆக இருந்தாலும் சரி, தர்மேந்திராவின் திரையுலக பிரவேசம், இயல்பான கவர்ச்சி மற்றும் வசீகரம் ஆகியவை

Rotary PEOPLE OF ACTION

சுரேந்திரநகரில் திறமை பெறும் பெண்கள்

ரோட்டரி செய்திக்குழு

தொழிற்பயிற்சி மையத்தில் தையல் வகுப்பு நடந்து கொண்டிருக்கிறது.

RC சுரேந்திரநகர், RID 3060, ஆறு தொழில் சார்ந்த பயிற்சிகளின் மூலம் 155 பெண்களுக்குத் திறன் கற்பித்தலின் வழியாக ஆற்றல் அளிக்கிறது.

ஜூலை மாதத்தில், பெண்களுக்குத் தொடர் வருவாய் வழங்கும் நோக்கத்துடன் DG அமர்தீப் சிங் புனெட் ஒரு தொழில் சார்ந்த பயிற்சி மையத்தைத் தொடங்கிவைத்தார். தையல், அழகுக் கலை, மருதாணி, ரெசின் கலை, கையால் பூத்தையல், அப்ஹோல்ஸ்ட்ரி வடிவமைப்பு போன்ற பயிற்சி அளிக்கப் படுகிறது. இவற்றுக்கான கட்டணம் ரூ.500 முதல் ரூ.900 என்கிறார் சங்கத் தலைவர் ஹிரென் ஷா.

28 வயது ஷேத் ஜிக்னா, "தையல் பயிற்சி எனக்குத் தைக்கும் திறனைக் கொடுத்துள்ளது. இதனால் பொது மக்களிடமிருந்து வடிவமைப்பு ஆர்டர்களைப் பெற்று நான் தொடர் வருவாய் பெறுவேன்" என்கிறார். அவருடைய நண்பர் நிஷா கேளா (35) ரெசின் கலையின்மூலம் தட்டுகள், கிண்ணங்கள், நகைகளை அழகுபடுத்தவும், சமூக, குடும்ப நிகழ்வுகளுக்குப் பரிசுப் பொருட்களைச் செய்யவும் தன்னால் இயலும் என்று நம்புகிறார். உர்மி படேல் (25) மருதாணி/ரெசின் திறன்களின்மூலம் "நான் திருமணங்கள், திருவிழாக்கள், குடும்பக் கொண்டாட்டங்களில் மக்களுக்கும் அழகுப் பொருட்களுக்கும் படைப்புணர்வுள்ள வடிவமைப்புகளை வரைவேன்" என்று மகிழ்கிறார்.

தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள பயிற்சிகளை நிறைவுசெய்துள்ள இந்தப் பெண்களுக்குத் தொடர் வருவாய் கிடைக்கச்செய்வதற்காக, இந்தத் திட்டக் குழு இவர்களுக்கு மானிய வட்டியில் கடன் வழங்குவது தொடர்பாக வங்கிகளுடன் பேசிவருகிறது.■

RI தெற்காசிய அலுவலகத்திலிருந்து செய்தி

ரோட்டரி அறக்கட்டளை வளங்குன்றா உறுப்பினர் சமூகங்களில் நீடித்த தாக்கத்தை உருவாக்கும் பன்னாட்டு நல்கைத் திட்டங்களுக்கு ஆற்றலளிக்கிற ஆண்டு நிதிக்கு ஆண்டுதோறும் குறைந்தது $100 பங்களிப்பவர் Rotary Foundation Sustaining Member எனப்படுகிறார். சங்கங்கள் சங்கத்தின் அறக்கட்டளைப் பதாகை அறிக்கையின் வழியாக இந்த உறுப்பினர்களைக் காணலாம். TRFக்கு உங்கள் பங்களிப்புகள் உலகெங்கும் ரோட்டரித் திட்டங்களை வலுவாக்கவும் வளர்க்கவும் உதவுகின்றன. விவரங்களுக்கு: *rotary.org/en/donate/recognition.*

பால் ஹாரிஸ் சமூகம்

TRFக்கு, குறிப்பாக, ஆண்டு நிதி, போலியோப்ளஸ் நிதி அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு நல்கைக்கு ஆண்டுதோறும் குறைந்தது $1,000 பங்களிக்கிற விருப்பத்தை எங்களுக்குத் தெரிவிக்கிற தனி நபர்களைப் பால் ஹாரிஸ் சமூகம் பெருமைப்படுத்துகிறது. இந்த அங்கீகாரத்தில் செவ்ரான் பாணி ஊசியும் சான்றிதழும் உண்டு. இவற்றை மாவட்டப் பால் ஹாரிஸ் சமூக ஒருங்கிணைப்பாளர் வழங்குவார்.

பால் ஹாரிஸ் சமூக உறுப்பினர்கள், அவர்கள் தகுதிநிலை பற்றிய தகவல்களைப் பால் ஹாரிஸ் சமூக அறிக்கையில் காணலாம். விவரங்களுக்கு: *rotary.org/en/about-rotary/history/paul-harris-society* அல்லது *my.rotary.org/en/document/paul-harris-society-brochure.*

சமூக மற்றும் ஆதரிக்கும் உறுப்பினர்கள் ஆண்டுதோறும் தங்கள் உறுதிப்பாடுகளை நிறைவேற்றுவதை விரிவாக்குவதற்கான உத்திகளை விவாதிக்க, நீங்கள் RI தெற்கு ஆசிய அலுவலகத்தின் ஆண்டு வழங்கல் குழுவையும் தொடர்புகொள்ளலாம்.■

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு படகுகளில் உதவி செய்யும் RC கங்காகாட் உறுப்பினர்கள்.

Rotary PEOPLE OF ACTION

வெள்ளத்தின்போது ரோட்டரியன்களின் உதவி

ஜெய்ஸ்ரீ

இந்த மழைக்காலத்தில் பஞ்சாப், இமாச்சலப் பிரதேசம், ஜம்மு, காஷ்மீர் உள்ளிட்ட பல இந்திய மாநிலங்கள் கனமழை, வெள்ளம், நிலச்சரிவுகளை எதிர்கொண்டன. ஆற்றின் நீர்மட்டங்கள் உயர்ந்து, தொடர்ந்து மழையும் பெய்ததால் பரவலான அச்சமும் மிகுந்த சேதமும் தூண்டப்பட்டன. நாடு முழுவதுமுள்ள ரோட்டரி சங்கங்கள் உடனடியாகக் களத்தில் இறங்கி, பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நெருக்கடி நேர உதவி வழங்கின.

ஆகஸ்ட் மாத நடுவில், உத்தராகண்டில் உள்ள தராலி, ஆறு திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது, வீடுகள், தங்குமிடங்கள், விடுதிகள் அழிந்தன, மக்கள் இடிபாடுகளுக்கிடையில் சிக்கினார்கள், தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. உடனடி உதவிக்காக ஹெலிகாப்டர் சேவைகள், மீட்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

ஹரித்வார் ரோட்டரி சங்கம், RID 3080, அடிப்படை மளிகைப் பொருட்கள், சோப், பல்துலக்கும் தூரிகைகள், பற்பசை, சானிட்டரி பேட்கள், கை தூய்மைப்படுத்திகள், நெருக்கடி நேர மருந்துகளை வழங்கி உதவியது. கிராமத்து மக்களுக்கு வழங்குவதற்கான உதவிப் பொருட்களை உத்தராகண்ட் சமூக நல

RC கங்காகாட் தலைவர் அவனிஷ் சுக்லா ஒரு பசுவிற்கு உணவளிக்கிறார்.

அலுவலகத்துக்குக் கொண்டுசெல்லும் வண்டியை DG ரவி பிரகாஷ் அனுப்பிவைத்தார்.

செப்டம்பர் தொடங்கியபோது, தொடர் மழையால் கங்கை ஆற்றின் நீர்மட்டம் திடீரென்று உயர்ந்தது, கான்பூரில் பல குடியிருப்புப் பகுதிகளை மூழ்கடித்தது. கங்காகட் ரோட்டரி சங்கம், RID 3110, உறுப்பினர்கள் படகில் பயணம் செய்து வெள்ளத்தில் மூழ்கிய 136 வீடுகளை அணுகி உணவுப் பொட்டலங்களை வழங்கினார்கள். “அவர்களை அணுக ஒரே வழி, படகுதான்” என்றார் சங்கத் தலைவர் அவினாஷ் சுக்லா.

இமாச்சலப் பிரதேசத்தின் காங்க்ரா மாவட்டத்தின் பகுதிகளை வெள்ளம் தாக்கியபோது, துர்காபூர் சென்ட்ரல், தரம்சாலா சென்ட்ரல் ரோட்டரி சங்கங்கள், RID 3240, களத்தில் இறங்கின. தலைவர் நிகிதா வர்மா, செயலாளர் சைலேந்திரா மேத்தா வழிகாட்டுதலில் உறுப்பினர்கள் புதிய உடைகள், செருப்புகள், மளிகைப் பொருட்களைத் திரட்டி, தரம்சாலா அருகில் உள்ள சித்பாரி பாக்னி கிராமத்தில் சுமார் 500 குடும்பங்களுக்கு வழங்கினார்கள்.

பஞ்சாபில், RC துர்காபூர் சென்ட்ரல் வழங்கிய நிதி ஆதரவுடன் RC ஜலந்தர் கிரேட்டர், RID 3070, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்குக் குளிர் ஆடைகளை வழங்கியது.

இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப் மாநிலங்களின் வழியாக ஓடுகிற பீஸ் ஆற்றில் ஆகஸ்ட் மாதக் கனமழையால் வெள்ளம் வந்து கரைகள் உடைபட்டன. சுல்தான்பூர் லோதி, கபுர்தலா மாவட்டங்களில் பல கிராமங்கள் மூழ்கின. “5,000 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலம், குடியிருப்புப் பகுதிகள் மூழ்கின. விவசாயிகள் பயிர்களை இழந்தார்கள், குடும்பங்கள் பெரிய சேதத்தால் துன்பப்பட்டன” என்றார் RC கபுர்தலா டௌன்-டவுன், RID 3070, தலைவர் யோகேஷ் தல்வார்.

தல்வாரும் செயலாளர் ககன்தீப் மெஹ்ராவும் சங்க உறுப்பினர்களும் பகுவால் கிராமத்துக்குச் சென்று உடனடித் தேவைகளை மதிப்பிட்டார்கள். “மளிகைப் பொருட்களும் உடைகளும்தான் பெரிய தேவைகளாக இருந்தன. பலர் வீட்டுப் பொருட்களை இழந்திருந்தார்கள், கூரைகள், சுவர்கள்

RC பச்சோரா பட்காவ்ன் தலைவர் முகேஷ் டெலி (நடுவில்),
மற்றும் பள்ளி மாணவர்களுடன் சங்க உறுப்பினர்கள்.

சேதமடைந்திருந்ததால் பெரும் நிதி அழுத்தத்தில் இருந்தார்கள்” என்றார் அவர். பின்னர் இந்தச் சங்கம் மளிகைப் பொருட்கள், தூய்மைப் பொருட்கள், செருப்பு, தார்ப்பாலின் தாள்கள், படுக்கை விரிப்புகள், கொசு விரட்டி, ORS பொட்டலங்களை வழங்கியது. DG ரோகித் ஓபெராய், அந்தப் பகுதி ரோட்டரியன்கள் உதவி முயற்சிகளில் இணைந்தார்கள்.

மகாராஷ்டிரத்தில், பசோரா மாவட்டத்தில் உள்ள ககுலெ, வனெகாவ்ன் ஆகிய கிராமங்கள் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப் பட்டன. பசோரா பட்காவ்ன் ரோட்டரி சங்கம், RID 3030, அதன் தலைவர் முகேஷ் டெலி தலைமையில், பாதிக்கப்பட்ட பள்ளிக் குழந்தை களுக்கு 100 கல்விப் பொருள் பொதிகளை (குறிப்பேடுகள், புத்தகங்கள், பைகள், எழுதுபலகைகள், பென்சில்கள்) வழங்கினார்கள்.

RC கபுர்தலா டௌன்-டவுன் தலைவர் யோகேஷ் தல்வார், சங்க உறுப்பினர்கள் ஓம்கார் கலியா, விகாஸ் சவுகான், தினேஷ் சிங் மற்றும் ஜமீல் முகமது ஆகியோர் பகுவால் கிராமத்தில் வசிப்பவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கின்றனர்.

பஞ்சாபின் ஃபிரோஜ்பூர் மாவட்டத்தில் சட்லெஜ் ஆற்றின் கரையில் உள்ள ஹூசைன்வாலா என்ற கிராமத்தில், RID 3090, RID 3060 மற்றும் பம்பாய் ரோட்டரி சங்கம், RID 3141, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை முகாமை நடத்தின.

“மிகவும் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதியின் மூன்று பள்ளிகளைச் சேர்ந்த 342 மாணவர்களுக்கு முதன்மையான நிதி ஆதரவை இந்த முகாம் வழங்கியது” என்றார் RID 3090 DG பூபேஷ் மேத்தா. மாணவர்கள் குளிர்காலத்தைச் சமாளிக்க உதவுவதற்காகப் போர்வைகளும் வழங்கப்பட்டன.

மொத்தம் ₹3.3 லட்சம் கல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பள்ளிகள் 35% கட்டணச் சலுகை வழங்கின. இந்த முன்னெடுப்புக்கு மிகவும் உதவிய RID 3060 DG அமர்தீப் சிங், IPDG துஷார் ஷா, RC பாம்பே தலைவர் பிமல் மேத்தா, PDG சந்தீப் அகர்வாலா, RID 3090 PDGகள் அம்ஜத் அலி, V B தீட்சித், ராஜீவ் கர்க், B M திர், K C காஜல் ஆகியோருக்கு திட்டத் தலைவர் PDG விஜய் அரோரா நன்றி தெரிவித்தார்.■

ஒரு தனித்துவமான தாய்–மகள் காவியம்

ரஷீதா பகத்

உங்களுக்கு படிப்பதில் ஆர்வம் குறைவாக இருந்தாலும், சில மாதங்களுக்கு ஒரு புத்தகம் அல்லது ஆண்டுக்கு ஒரு புத்தகம் மட்டுமே படிப்பவராக இருந்தாலும், அருந்ததி ராயின் 'மதர் மேரி கம்ஸ் டு மீ' என்ற நினைவுக் குறிப்பை தவறாமல் படிக்க வேண்டும். இது திரில்லர் போல் நகரும் – நிகழ்வுகள், நாடக தருணங்கள், உணர்வுகள், குறிப்பாக தாய்-மகள் இடையேயான தீவிரமும் வெறுப்பும் கலந்த உரையாடல்கள் உண்மையாகப் பதிவு செய்யப்படுகின்றன. இங்கு 'மதர் மேரி' என்பது அருந்ததி ராயின் தாய் மேரி ராய், கேரள கிறிஸ்தவ பெண்களுக்கு சம சொத்துரிமை கிடைக்க நீண்ட காலம் போராடி வெற்றி பெற்றவர். அவர் தனது சகோதரர் மற்றும் தாயால் மூதாதையர் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டார்.

அவரது சக்திவாய்ந்த, அழுத்தமான எழுத்து... அவரது அழகான உரைநடை, அவரது புத்தகமான தி காட் ஆஃப் ஸ்மால் திங்ஸ்க்கு புக்கர் பரிசு கிடைத்தபோது அவருக்குக் கிடைத்த சர்வதேசப் புகழ், மற்றும் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான அவரது கட்டுரைகள், நர்மதா பச்சாவ் ஆந்தோலனுக்கு ஆதரவாக அவர் எழுதியது, மற்றும் நக்சல் பாதிக்கப்பட்ட பகுதிக்குள் அவர் மேற்கொண்ட புகழ்பெற்ற பயணம் – இவை அனைத்தும் நமக்குத் தெரிந்தவையே.

இந்தப் புத்தகம் வாழ்க்கை, உறவுகள், எழுத்து பற்றி பேசினாலும், அதன் மையக் கருப்பொருள் அருந்ததி ராய் தன் தாயுடன் கொண்ட அன்பும் வெறுப்பும் கலந்த உறவுதான். கேரளாவின் கோட்டயத்தில் உள்ள அவரது தாயின் புகழ்பெற்ற பள்ளியில் படித்த மாணவர்கள் போலவே, அருந்ததி ராயும் அவரது சகோதரரும் அவரை "திருமதி ராய்" என்று மட்டுமே அழைக்க வேண்டியிருந்தது. அதை அவர் சிறப்பாக ஒரு வரியில் சுருக்குகிறார்: "இந்த பக்கங்களில், என் தாய்-என் கேங்க்ஸ்டர்-வாழ்கிறார். அவர் என் அடைக்கலமும் என் புயலும்."

முற்றிலும் பெண்ணியவாதியாக இருக்கும் அருந்ததி, பொழுதுபோக்கு குறைவான கோட்டயம் போன்ற சிறிய நகரத்தில் மலையாளம், தமிழ் திரைப்படங்களைப் பார்த்து வளர்ந்த அனுபவத்தை பகிர்கிறார். பெண்கள் மையமாக இருந்தாலும், அந்தக் கதைகள் பாரம்பரியத்துக்கு முழுமையாக சரணாகதி அடையும் பெண்களையே மகிமைப்படுத்தி, அதனை மீறுபவர்களுக்கு தண்டனையையும் அவமானத்தையும் விதித்தன என்று எழுதுகிறார். பல மலையாளப் படங்களில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாகும் காட்சிகள் நிரம்பியிருந்ததால், "எல்லா பெண்களும் ஒருநாள் பலாத்காரம் செய்யப்படுவார்கள்; அது எப்போது, எங்கே என்பதுதான் கேள்வி" என்ற நம்பிக்கையுடன் தான் வளர்ந்ததாக கூறுகிறார். அதனால் தான், 16 வயதில் டெல்லி நிஜாமுதீன் ரயில் நிலையம் வந்தபோது பையில் ஒரு கத்தி வைத்திருந்தேன் என்றும் எழுதுகிறார்.

இந்த பின்னணியில், மேரி ராயால் கோட்டயத்தில் அமைக்கப்பட்ட பள்ளி பிரபலமடைந்தபோது, அவரது பெண் மாணவர்களுக்கு, "திருமதி ராய் தப்பிப்பதற்கான நம்பிக்கையாகவும், தைரியம் மற்றும் எதிர்ப்பின் எரியும் சுடராகவும் இருந்தார். அவர் அவர்களின் பாதையை ஒளிரச் செய்தார், வழிக்காட்டினார். எனக்கு அப்படி இல்லை. என் விஷயத்தில், திருமதி ராய் எனக்கு எப்படி சிந்திக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார், பின்னர் என் எண்ணங்களுக்கு எதிராகக் கோபப்பட்டார். எனக்கு சுதந்திரமாக இருக்கக் கற்றுக் கொடுத்தார் பின்னர் என் சுதந்திரத்திற்கு எதிராகக் கோபப்பட்டார். எனக்கு எழுதக் கற்றுக் கொடுத்தார் பின்னர் நான் ஆன எழுத்தாளரைக் கண்டு கோபப்பட்டார்."

ஆனாலும், அவர் புக்கர் பரிசை வென்றபோது, அவர் அழைத்த ஒரே நபர் அவரது தாய்தான். அவர் அதிகாலை 2 மணிக்கு விழித்திருந்து செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது பதில்: "நல்லது, என் செல்லப் பெண்ணே." இது, அருந்ததியின் கூற்றுப்படி,



“நம்ப முடியாத அன்பின் வெளிப்பாடு. நான் அவரை ஒரு நல்ல நாளில் பிடித்தேன்.”

மேரி ராய் வாழ்க்கையை விடப் பெரிய நபராகவும், பெண்களின் உரிமைகளுக்காகப் போராடும் ஒரு கோபமான வீராங்கனையாகவும் இந்தப் பக்கங்களில் உயிர் பெறுகிறார். ஒரு கிறிஸ்தவ மிஷனரியின் உதவியுடன், அவர் 1967-ம் ஆண்டு கோட்டயத்தில் இரண்டு வாடகை அரங்குகளில் ஒரு பள்ளியைத் தொடங்கினார் – அந்த இடம் கோட்டயம் ரோட்டரி சங்கத்திற்கு சொந்தமானது. அருந்ததி மற்றும் அவரது சகோதரர் உட்பட ஏழு மாணவர்களுடன் இது தொடங்கியது; ஒவ்வொரு காலையிலும், அவர்கள் “சங்க உறுப்பினர்களால் விடப்பட்ட சிகரெட் துண்டுகளை எடுத்து, அழுக்குக் கோப்பைகளை அகற்ற வேண்டும். நிச்சயமாக, அவர்கள் அனைவரும் ஆண்கள். யாருக்கு எதையும் சுத்தம் செய்யவோ அல்லது அகற்றவோ ஒருபோதும் தோன்றாது.”

மேரி ராய் “ஒரு தனித்துவமான பள்ளியின் உரிமையாளர், தலைமை ஆசிரியை மற்றும் சுதந்திர ஆன்மாவாக” இருந்தார். இந்தப் பள்ளி, கோட்டயத்தில் ஒரு மதிக்கத்தக்க நிறுவனமாக மாறியது. திருமதி ராய் ஒரு தனித்துவமான பெண்மணி என்று அருந்ததி கூறுகிறார்; “அவர் தன்னை நேசித்தார். தன்னைப் பற்றிய எல்லாவற்றையும் நேசித்தார். எனக்கு அது அவரிடம் பிடித்திருந்தது.”

2022-ல் அவர் மறைந்த போது ஊடகங்கள் அவரது மரணத்தை பரவலாக வெளியிட்டன மற்றும் “அவர் நிறுவிய பள்ளியில் படித்த பல தலைமுறை மாணவர்களிடமிருந்தும், மற்றும் கேரளாவில் கிறிஸ்தவப் பெண்களுக்குச் சம சொத்துரிமைக்காக அவர் நடத்தி வென்ற புகழ்பெற்ற சட்டப் போராட்டத்தைப் பற்றி அறிந்தவர்களிடமிருந்தும் வந்த அன்பின் பெருக்கத்தால் இணையத்தளங்கள் ஒளிர்ந்தது.”

அவர் பள்ளியில் பயின்ற சிறுவர்கள் “கவனமுள்ள, மரியாதைக் குரிய ஆண்களாக மாறினர், அத்தகையவர் களை நகரம் அரிதாகவே பார்த்தது. ஒரு வகையில், அவர் அவர்களையும் விடுவித்தார்... அவர் பல தலைமுறை நல்ல மனிதர்களை வளர்த்து உலகிற்கு அனுப்பினார். அவர் பெண் மாணவர்களுக்கு புகுத்திய மனப்பான்மை புரட்சிகரமானது. அவர் அவர்களுக்கு முதுகெலும்பைக் கொடுத்தார், சிறகுகளைக் கொடுத்தார். “அவர் தனது அசைக்க முடியாத கவனத்தையும் கடினமான அன்பையும் அவர்களுக்கு வழங்கினார்; அவர்கள் அந்த அன்பை அவரிடம் பிரகாசமாகத் திருப்பித் தந்தனர்.”

ஆனால் அந்தப் புரட்சிக்கு ஒரு விலை இருந்தது. தந்தை, கணவன், சகோதரன் மற்றும் அவரது சொந்த மகன் என அவர் தனது கோபத்தை ஆண்கள் மீது செலுத்தினார். ஒருமுறை அவரது மகன் பள்ளியில் இருந்து கொண்டு வந்த அறிக்கையில் “சாதாரண மாணவர்” என்று இருந்ததால், அவரை இரக்கமின்றி அடித்தார், அத்தகைய மகனை ஏற்க முடியாது என்று கூறினார். மகள் “திறமையான மாணவியாக இருந்ததற்காகக் கட்டி அணைக்கப்பட்டார்”. அன்றிலிருந்து, அனைத்து தனிப்பட்ட சாதனைகளும் அவருக்கு ஒருவித பயத்துடனேயே வருகின்றன என்று அருந்ததி எழுதுகிறார். “நான் புகழப்படும் அல்லது பாராட்டப்படும் தருணங் களில், யாரோ, ஒரு அமைதியானவர், அடுத்த அறையில் தாக்கப்படுகிறார் என்று நான் எப்போதும் உணர்கிறேன்.”

அவரது தாய் 89 வயதில் மறைந்தபோது, அருந்ததி “சிதைந்தும், மனச்சோர்விலும்” இருந்தார். தனது எதிர்வினையின் தீவிரம் ஏன் இவ்வளவு என்பதில் அவருக்கே குழப்பமும் சிறிது வெட்கமும் ஏற்பட்டது. இதைக் கண்டு, அவரின் சகோதரன், “அவர் உன்னைப் போல யாரையும் மோசமாக நடத்தவில்லை, அப்படியிருக்க ஏன் இப்படிப் பாதிக்கப்படுகிறாய்?” என்று கேட்டுள்ளார். ஒருவேளை இது உண்மையாக இருக்கலாம், ஆனால் அவர் அதை நீண்ட காலத்திற்கு முன்பே மறந்துவிட்டார். ஏனெனில், “இவ்வளவு துயரங்களையும், அமைப்புசார் வறுமையையும், குறையாத கொடுமையையும், நரகத்தின் பல வடிவங்களையும் நான் பார்த்தும் எழுதியும் இருக்கிறேன்; அதனால் நான் உலகில் மிகவும் அதிர்ஷ்டசாலிகளில் ஒருத்தி என்றே எண்ணுகிறேன்.”

தாய் மற்றும் மகளுக்கு இடையேயான கசப்புணர்வும், அவர் மீது வீசப்பட்ட வெறுப்பு நிறைந்த அவமானங்களுமே தான் வீட்டை விட்டு வெளியேறவும், வீட்டிற்கு வருவதை நிறுத்தவும் காரணம் என்று அருந்ததி கூறுகிறார். டெல்லியில் உள்ள கட்டிடக்கலை பள்ளியில் தனது மூன்றாவது ஆண்டின் போது, தனது 18 வயதில்தான் அவர் மீண்டும் வீட்டிற்குத் திரும்பினார்.

தனித்துவமான எழுத்து நடையைத் தவிர, அவரது எழுத்தில் உள்ள மரியாதைக் குறைவும், மிகக் குறைந்த பாசாங்கும்தான், இந்தப் புத்தகத்தை மிகவும் பிடிக்கும்படி செய்கிறது. அவர்களின் தாயார் “எதற்கும் உதவாத மனிதன்” என்று இகழ்ந்து இரு குழந்தைகளுடன் அவரை விட்டு வெளியேறிய தனது தந்தையை, அவர் “அன்புக்குரிய துஷ்டன்” என்று அழைக்கிறார். அவருக்கு குடிக்க பணம் கொடுத்து அவரை அனுசரித்தும் வந்தார். வார்ணிஷ் கலந்த அந்த மது, “அவருடைய குடல்களை எரித்து சரிகை போல ஆக்கியது.”

அவர் தனது தாயை மேடம் ஹூடினி உட்பட எல்லா வகையான பெயர்களிலும் அழைக்கிறார், ஆனால் கொச்சி மருத்துவமனையில் மூன்று நாட்களுக்கு அவர் வென்டிலேட்டரில் வைக்கப்பட்டபோது மனம் உடைந்து போகிறார். மேரி ராய்க்கு எப்போதும் நுரையீரல்/சுவாசப் பிரச்சினைகள் இருந்தன, ஆனால் “அவர், இந்த சக்திவாய்ந்த பெண்மணி, எங்கள் பைத்தியக்காரத்தனமான, கணிக்க முடியாத, மாயாஜால, சுதந்திரமான, கடுமையான திருமதி ராய் முழுமையான உதவியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டதைப் பார்ப்பது, ஒரு வகையான துன்பமாக இருந்தது.” ஆனால் அவர் போராடி மேலும் 15 ஆண்டுகள் வாழ்ந்தார், மேலும் “அவர் இறக்கும் நாள் வரை, அவர் கற்றலை நிறுத்தவில்லை, ஒருபோதும் தேங்கி நிற்கவில்லை, மாற்றத்திற்கு ஒருபோதும் பயப்படவில்லை, தனது ஆர்வத்தை ஒருபோதும் இழக்கவில்லை.”

அருந்ததி இந்தப் புத்தகத்தில் தன்னையும் விட்டு வைக்கவில்லை, மேலும் அவரது எண்ணங்கள், உணர்வுகள், மற்றும் உறவுகள்

பற்றிய அவரது உண்மையான விளக்கங்கள் இந்தப் புத்தகத்தை மிகவும் நேர்மையான புத்தகங்களில் ஒன்றாக ஆக்குகின்றன. 'பிட்ச்' போன்ற வார்த்தைகளுடன், தனது உறவினர்கள் அவரை அடிக்கடி 'மிஸ்ட்ரஸ்' அல்லது 'கீப்' என்று கூப்பிடுவார்கள் என்பதைத் தன் தாய் எப்போதும் கூறிக்கொண்டிருக்கிறார். இதனால் அவர் தனக்கு தானே ஒரு இனிமையான பட்டத்தை வைத்து கொண்டார்: புக்கர் வென்ற 'ஹூக்கர்'.

புக்கர் பரிசை வென்ற அவரது புத்தகமான தி காட் ஆஃப் ஸ்மால் திங்ஸ் இன் அற்புதமான வெற்றி பற்றிய ஒரு சுவாரஸ்யமான பதிவு உள்ளது. அவர் முதல் பிரதியை முடித்து அதை வெளியிட விரும்பியவுடன், ஒரு புயல் ஏற்பட்டது. நாற்பது பதிப்பாளர்கள் வரிசையில் நின்றனர் மற்றும் ராயல்டிக்கு எதிராக அவர்கள் கொடுக்க வந்த முன்பணம் $1 மில்லியன் ஆகும். அவருக்கு, உலகின் பணக்காரர்கள் இடையே சுழலும் செல்வ குழாயை தான் திடீரெனத் தடுத்து நிறுத்தியதாகவும், அது நேராக தன்மீது பணத்தை பீறிட்டு வீசியது போலவும் உணர்ந்தார். எல்லா வகையான விமர்சனங்களும் இருந்தன. மக்கள் அதை வெறுத்தனர், நேசித்தனர், கேலி செய்தனர், அழுதனர், சிரித்தனர். புத்தகம் அலமாரிகளில் இருந்து பறந்தது.

ஆனால் புத்தகம் மற்றும் அதைச் சுற்றியுள்ள சலசலப்பு அவருக்கும் திருமதி ராய்க்கும் இடையேயான சிக்கல்களை "ஆயிரம் மடங்கு" அதிகரித்தது. ஒரு உள்ளூர் பழ வியாபாரி "அவர் அருந்ததி ராயின் தாயா என்று கேட்கத் துணிந்தபோது, அவள் என்னை அறைந்ததைப் போல நான் உணர்ந்தேன்," என்று தன் தாய் கோபப்பட்டார்!

கோட்டயத்தில் புத்தகம் வெளியானது ஒரு பெரிய சர்ச்சையைச் சந்தித்தது, ஏனெனில் இது கம்யூனிஸ்டுகள், ஒழுக்க காவலர்கள் மற்றும் சில பழமைவாத சிரியன் கிறிஸ்தவர்கள் ஆகியோரைப் புண்படுத்தியது. அவர்மீது "அருவருப்பும் பொது நெறியைக் கெடுப்பதாகவும் செய்தல்" என்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன; அந்த வழக்கு பத்து நீண்ட ஆண்டுகள் நீடித்த பிறகு இறுதியில் தள்ளுபடி செய்யப்பட்டது.

மேரி ராயின் வினோதங்கள் இந்த நினைவுக் குறிப்பில் சிறப்பாக வெளிப்படுத்தப்படுகின்றன. அவர் தனது மகனுக்கும் மகளுக்கும் மிகவும் சாத்தியமில்லாத பொருட்களுக்கான ஷாப்பிங் பட்டியல்களைக் கொடுப்பார், பெரும்பாலும் காலணிகள் மற்றும் உடைகளாக இருக்கும், அவற்றை அவர் பெற்றபோது, அனைத்தையும் ஒரே நேரத்தில் அணிந்து பெருமையாகக் காட்டுவார்.

ஒரு முறை, "நான் அவரை படுக்கையின் ஓரத்தில் பள்ளிக்கூடப் பெண்ணைப் போல கால்களை ஆட்டிக் கொண்டு, முகத்தில் மகிழ்ச்சியுடன் உட்கார்ந்திருந்ததை பார்த்தேன். மூக்கில் ஆக்சிஜன் குழாய், காதில் வைரக் காதணி, சைஸ்-44DD லைலக் லேஸ் ப்ரா, ஆடல்ட் டயப்பர், 'ஸ்டெபிலிட்டிக்காக' என்று அவர் சொன்ன உயரமான நைக் பாஸ்க்கெட்ட்பால் ஷூக்கள்-இவை அனைத்தையும் அணிந்திருந்தார்."

அருந்ததி ராய்
தன் தாய் மேரி ராயுடன்.

ஒரு சுவாரஸ்யமான பகுதி, தனது தாயின் பிராவை இத்தாலியில் ஒரு கடையில் தனது விருப்பமான எழுத்தாளர் நண்பரான ஜான் பெர்கருடன் சேர்ந்து அருந்ததி ஷாப்பிங் செய்தது பற்றியது. "ஒவ்வொரு கடையிலும் நுழைந்ததும், நான் பின்தங்கிக் கொண்டு, இந்த மிகவும் அழகான எண்பது வயதுக்கு மேற்பட்ட மனிதர் தனது பிரிட்டிஷ் உச்சரிப்புள்ள இத்தாலிய மொழியில், 'மன்னிக்கவும், 44DD அளவில் என்னென்ன இருக்கிறது என்று காட்டச் சொல்கிறீர்களா?' என்று கேட்பதைப் பார்க்கும் பேரானந்தத்தை அனுபவித்தேன். எனது தாய்க்கான உள்ளாடையை அவர் வாங்க உதவுவதை நான் மிகவும் விரும்பினேன். நான் அவ்வப்போது இந்த விசித்திரமான, இரகசியமான விளையாட்டுகளை ரசிக்க என்னை அனுமதித்தேன்."

அவரது மாணவர்களில் ஒருவர் பிரிக் பை பிரிக் என்ற தலைப்பில் திருமதி ராயின் வாழ்க்கை குறித்து ஒரு புத்தகம் எழுதியிருந்தார். அந்த புத்தகத்தை "அவர் தானே திருத்தி, முழுப் பக்கங்களை இரக்கமின்றி கோத்தெறிந்து, மற்றவர்களை ஓரளவு கூட பாராட்டும் பகுதிகளை நீக்கி, வாக்கியங்களை மறுபடியும் எழுதினார் – அது அவர் (ஐம்பதுகளில் இருக்கும்) மாணவர் சமர்ப்பிக்கும் ஒரு விடுமுறைப் வீட்டுப்பாடம் போல திருத்தப்பட்டது. தனது வாழ்க்கை வரலாற்றுக்கான ஒரே ஒரு பக்க அறிமுகத்தை, காசோலைக்கு கையெழுத்திடுவது போல கீழே கையெழுத்திட்டிருந்தார்; மேலும் அது முழுவதும் பெரிய எழுத்துக்களிலேயே இருந்தது," என்று அருந்ததி கூறுகிறார்!

இந்த புத்தகத்தை அதன் ஈர்க்கும் நடை, நேர்த்தியான மற்றும் அதே சமயம் வலுவான உரைநடை, நெத்தியடி உண்மை, அறிவு மற்றும் நகைச்சுவைக்காகப் படியுங்கள்... இதை ஒரு பெருமையான கோப்பையாக உங்கள் புத்தக அலமாரிகளில் வைத்திருக்க விரும்புவீர்கள்.■

திருவனந்தபுரத்தில் நடமாடும் இரத்த வங்கி

ரஷீதா பகத்

திருவனந்தபுரம் சென்ட்ரல் ரோட்டரி சங்கம் மற்றும் கழக்கூட்டம் CSI மிஷன் மருத்துவமனை இணைந்து நடத்திய ஆய்வை அடுத்து திருவனந்தபுரத்தில் தேவைப்படுபவர்களுக்கு உதவ, தினமும் 400 யூனிட் இரத்தம் தேவை என்ற மதிப்பீட்டின் அடிப்படையில், திருவனந்தபுரம் சென்ட்ரல் ரோட்டரி சங்கம், ஒரு நடமாடும் இரத்த வங்கியை பரிசாக வழங்கியுள்ளது. இந்த நடமாடும் இரத்த வங்கியில் சேகரிக்கப்படும் இரத்தம், நகரத்தில் உள்ள ஐந்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் பிராந்திய புற்றுநோய் சிகிச்சை மையம், ஸ்ரீ சித்ரா மருத்துவ ஆராய்ச்சி கழகம் உள்ளிட்ட ஆராய்ச்சி மையங்களில் உள்ள நோயாளிகள், விபத்துக்குள்ளானவர்கள் மற்றும் அறுவைச்சிகிச்சை தேவைப் படும் நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற உதவுகிறது.

இந்த நடமாடும் இரத்த சேகரிப்பு வங்கி வாகனத்துக்கு கடந்த ஆண்டு மறைந்த, சங்கத்தின் முன்னாள் தலைவரான “ரோட்டேரியன் R ரவீந்திரகுமார் நினைவு இரத்த வங்கி” என பெயரிடப்பட்டுள்ளது, மேலும் இதில் ரூ.50 லட்சத்தில் நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது, இரத்த தானம் செய்பவர்களின் வீட்டுவாசலுக்கே வந்து இரத்தம் சேகரிக்கும் இந்த திட்டத்தை கொண்டுவந்து செயல்படுத்த முக்கிய காரணமாக இருந்தவர் PDG சுரேஷ் மேத்யூ.

இந்த நடமாடும் இரத்த சேமிப்பு வங்கி வாகனம் மக்கள் அதிகம் சென்று வரும் தொழில்நுட்ப பூங்காக்கள், என்ஜினீயரிங் கல்லூரிகள் மற்றும் கார்ப்பொரேட் நிறுவனங்களுக்கு சென்று இரத்தம் சேகரிக்கவும், இரத்த தான முகாம் நடத்தவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த திட்டம் சர்வதேச மானிய உதவி மூலம் நிதியளிக்கப்பட்டு, சிங்கப்பூர் ராஃபிள்ஸ் ரோட்டரி சங்கத்தின் கூட்டாண்மையுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

மாநில மீன்வளம், கலாசாரம் மற்றும் இளைஞர்கள் நலன் விவகாரத்துறை அமைச்சர் ஷாஜி செரியன், அண்மையில் திருவனந்தபுரம் நகரில் நடைபெற்ற நிகழ்வில், இந்த நடமாடும் இரத்த சேகரிப்பு வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், “சரியான நேரத்தில் இந்த திட்டம் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது சுகாதாரத்துறைக்கு மிகப்பெரிய சொத்தாகும். கழக்கூட்டம் மற்றும் அதனை சுற்றியுள்ள கடலோரப் பகுதிகளில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இந்த இரத்த வங்கி உதவியாக இருக்கும்” என்று கூறினார். இரத்தம் உறையாமல் பாதுகாப்பாக சேமித்து வைக்க குளிர்பதன வசதி உள்ளிட்ட நவீன வசதிகளை இந்த வாகனத்தில் உள்ளன.

நடமாடும் இரத்த வங்கி, நிர்வாகம் மற்றும் செயல்பாட்டுக்காக அதன் திட்ட கூட்டாளியான கழக்கூட்டம், CSI மிஷன் மருத்துவமனை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் முன்னாள் தலைவர் P R கர்த்தாவின் முன்முயற்சியில் தொடங்கப்பட்டு, இந்த ஆண்டு சங்கத் தலைவர் கலோனல் K E ராஜனின் முயற்சியால் பூர்த்தி செய்யப்பட்டது.

இந்த நடமாடும் இரத்த சேமிப்பு வாகனம் தொடங்கிவைக்கப்பட்டது முதல் இது தொடர்பான விடியோ காட்சிகளை சமூக வலைத்தளங்களில் 50,000-த்துக்கும் மேலானவர்கள் பார்வையிட்டுள்ளனர். CSI மிஷன் மருத்துவமனையுடன் இணைந்து தங்களின் இரத்த சேமிப்பு அல்லது சேகரிப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வருகிறது. திருவனந்தபுரம் தகவல் தொழில்நுட்ப பூங்கா மற்றும்

நடமாடும் இரத்த வங்கி வசதிக்குள் ரத்த தானம் செய்யும் நன்கொடையாளர்கள்.

திருவனந்தபுரம் தொழில் நகரத்தில் மட்டும் 1,40,000 பேர் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் 70 சதவீதம் பேர் 40 வயதுக்கும் குறைவான வர்கள். இவர்கள் இரத்ததானம் செய்வதை ஊக்குவிக்க பல்வேறு விளம்பர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. விடியோக்கள் வெளியிடப்பட்டும், ரோட்டரி வாட்ஸ்ஆப் மூலம் தகவல்களையும் பகிர்ந்துகொண்டுள்ளோம்.

இந்த இரத்த சேகரிப்பு வங்கி வாகனத்தில் ஒரே நேரத்தில் மூன்று பேர் இரத்த தானம் செய்வதற்கான இடவசதி உள்ளது. ஒரு நாளில் 50 முதல் 75 பேரிடம் இரத்தம் சேகரிப்பதே எங்களின் இலக்காகும். இதன் மூலம் 150 முதல் 200 யூனிட் இரத்தம் சேகரிக்கப்படும். இந்த வாகனத்தில் சேகரிக்கப்படும் இரத்தம், டாக்டர் S M நினைவு மருத்துவக் கல்லூரியில் அமைந்துள்ள தாய் இரத்த வங்கிக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு பல கூறுகளாக பிரிக்கப்படும்.

இந்த மருத்துவக் கல்லூரியின் நகர துணை மருத்துவ மையம்தான் CSI மிஷன் மருத்துவமனையாகும். இந்த நகர மருத்துவமையத்தில் உள்ள நிலையான இரத்த சேமிப்பு பிரிவும் ரோட்டரியின் சர்வதேச மானிய உதவித் திட்டத்தில் அமைந்ததுதான் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார் மாத்யூ.

கேரளத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில் இரத்தத்திற்கான தேவை குறித்து மாத்யூ கூறுகையில், “இங்கு தினமும் 400 யூனிட் இரத்தம் தேவைப்படுகிறது. ஏனெனில் இங்கு ஐந்து மருத்துவக் கல்லூரிகள், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகள் உள்ளன. ஒவ்வொரு நாளும் சராசரியாக 100 அறுவைச்சிகிச்சைகள் நடை பெறுகின்றன. மேலும் விபத்துகளில் சிக்குவோருக்கும் அவசர சிகிச்சைக்கு ஏராளமாக இரத்தம் தேவைப்படுகிறது. கடந்த காலத்தை போல் அல்லாமல், இன்றைய இளைஞர்கள் இரத்ததானம் செய்ய தயங்குவதில்லை. ஆனால், இரத்த வங்கிக்கு வருவதற்கு அரை நாள்கூட செலவிட முடியாமல் மிகவும் பிஸியாக உள்ளனர். இதனால், தேவை அதிகரிப்பால் இரத்தத்திற்கு பற்றாக்குறை நிலவுகிறது.

நடமாடும் இரத்த வங்கியை மாநில மீன்வளத்துறை அமைச்சர் சாஜி செரியன் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார். PDG சுரேஷ் மேத்யூ அவரது வலது புறத்தில் காணப்படுகிறார்.

இந்த திட்டத்திற்கு அதிக வரவேற்பு உள்ளது.இந்த நடமாடும் இரத்த வங்கி நடைமுறைக்கு வந்துவிட்டதால் இந்திய மருத்துவ சங்கம் இரத்ததான மற்றும் சேமிப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. பல்வேறு ரோட்டரி சங்கங்களும் இரத்ததான முகாம் நடத்த இந்த வாகனத்தை பயன்படுத்த தொடங்கியுள்ளன. “இலவசமாக இரத்ததான முகாம் நடத்த விரும்புபவர்களுக்கு இந்த நடமாடும் இரத்த வங்கி கிடைப்பதையும் நாங்கள் உறுதிசெய்து வருகிறோம்”. இரத்தம் நன்கொடையாளர்களுக்கு CSI மருத்துவமனை அடையாள அட்டைகளை வழங்கி வருகிறது. இதன் மூலம் அவர்களிடமிருந்து தேவைப்படும் நேரத்தில் இரத்தம் நன்கொடையாகப் பெற்றுக்கொள்ள முடியும். “இதே மருத்துவமனையில் நாங்கள் ரோட்டரி டயாலிசிஸ் சிகிச்சை மையம் மற்றும் இரத்த சேமிப்பு பிரிவை நாங்கள் ஏற்கெனவே தொடங்கியுள்ளோம். இந்த பயனாளி மருத்துவமனை சேவைமனப்பான்மை கொண்டது மற்றும் ரோட்டரியுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகிறது.”

இந்த திட்டத்திற்கு கணிசமாக பங்களித்தவர்களில் துபாயில் உள்ள கேரள குளோபல் இ சங்கத்தின் தலைவரும் உதவி ஆளுநருமான ரஞ்சித் சுசீலன், ராய் குரியன் ஜக்காரியா, PAG வில்சன் ஜார்ஜ் மற்றும் திருவனந்தபுரம் ஈஸ்ட் ரோட்டரி சங்கத்தின் அனில் நாயர் உள்ளிட்டோர் அடங்குவர். இந்த திட்டத்துக்கு IPDG சுதிர் ஜப்பார் மூலம் DDF நிதி ஆதரவும் கிடைத்துள்ளது. இந்த திட்ட விவரங்களை வழங்கிய PDG மாத்யூ தவிர, திருவனந்தபுரம் சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ராஜன், முன்னாள் தலைவர் கர்தா, DG ஜப்பார் மற்றும் டாக்டர் தாமஸ் வாவனிக்குன்னல், திட்ட இயக்குநர் டான் தாமஸ் மற்றும் சங்கத்தின் செயலர் பிரேம் தம்பி ஆகியோரும் பங்கேற்றனர்.

[இந்த நடமாடும் இரத்த வங்கி வாகனம் மூலம் இரத்த தான முகாம் ஏற்பாடு செய்ய ஆர்வமுள்ள திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள நிறுவனங்கள் மற்றும் குழுவினர் 7510356766 அல்லது 7510357666 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.] ■

Rotary PEOPLE OF ACTION

முதியோர் வாழ்க்கையில் குதூகலம்!

கிரண் ஜெஹரா

1963-ம் ஆண்டு வெளிவந்து ரசிகர்களிடம் வரவேற்பை பெற்ற பெரிய இடத்துப் பெண் திரைப்படத்தின் "அன்று வந்ததும் இதே நிலா" பாடல் அரங்கில் சத்தமாக ஒலித்தபோது 97 வயதான, மினுமினுக்கும் ஆரஞ்சு வண்ண புடவை அணிந்திருந்த லலிதா, எழுந்து நின்று பாடலுக்கு ஏற்றவாறு கையை அசைத்து தாளம் போட்டார். ஒரு நடனக்கலைஞர் போல் அவரது கண்கள் பிரகாசித்தன. அடுத்த சில நொடிகளில் அவருடன் மற்றவர்களும் சேர்ந்துகொண்டு ஆடினர். கைதட்டல்களால் அரங்கமே அதிர்ந்தது. DG டி.தேவேந்திரன் மற்றும் இதர ரோட்டேரியன்களும் மேடையில் அவர்களுடன் இணைந்தனர்.

இந்த நிகழ்வு, RID 3233 சார்பில் நடைபெற்ற கோல்டன் சீனியர்ஸ் தீபாவளிக் கொண்டாட்டம். சென்னையில் உள்ள 10 முதியோர் இல்லங்களைச் சேர்ந்த முதியோர்கள் 600 பேர், ரோட்டேரியன்களுடன் சேர்ந்து இந்த நிகழ்வில் பங்கேற்றனர். ஒரே வேடிக்கையும் விளையாட்டுமாக இருந்த இந்த நிகழ்ச்சியில் விருந்தினர்களுக்கு வாழை இலைபோட்டு தென்னிந்திய முறைப்படி கல்யாண விருந்து பரிமாறப்பட்டது. "இதில் பங்கேற்ற முதியோர்கள் ஏதோ தங்கள் வீட்டுக்கே திரும்பி வந்தது போல் உணர்ந்தார்கள்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார் DG.

பின்னர், அந்தப் பாடல் முடிந்ததும், லலிதாவிடம், "எப்படி உங்களால் முகபாவனையுடன் பாடலுக்கு ஏற்றவாறு ஆடமுடிகிறது" என்று நான் கேட்டேன். 1930-களில் போர் வெடிப்பதற்கு முன்பு அவரது குடும்பம் மியான்மரில் ரங்கூன் நகரில் வசித்து வந்தது. "எனக்கு ஐந்து வயது இருக்கும்போது நாங்கள் பல மைல்கள் நடந்து பின்னர் படகு மூலம் சென்னை வந்து சேர்ந்தோம்" என்று அவர் நினைவுகூர்ந்தார். கலாஷேத்ராவில், குரு கே.என்.தண்டாயுதபாணியிடம் பரதநாட்டியம் கற்றேன். இதையடுத்து நடனகலா சேவை என்னும் நாட்டியக் குழுவில் சேர்ந்தேன். "தமிழ் திரையுலகில் பின்னணி நடனக் கலைஞராக இருந்தேன். சந்திரலேகா (1948), மர்மயோகி (1951) போன்ற படங்களில் நடித்தேன். மேலும் வைஜயந்திமாலா, லலிதா-பத்மினி, ஜெயலலிதா போன்ற திரைப் பிரபலங்களுடனும் நடித்துள்ளேன்".

சந்திரலேகா திரைப்படத்தில் தனது நடிப்பைப் பற்றி அவர் விவரித்தபோது அவரது கண்கள் பிரகாசித்தன. "நாங்கள் ஒருவருடம் ஒத்திகை பார்த்தோம். மூன்று மாதங்கள் சுட்டெரிக்கும் வெயிலில் நடித்தோம். அந்த பொன்னான நாட்களை மறக்க முடியாது" என்று கூறிய அவர், டிரம் டான்ஸுக்கு ஏற்ப காலை அசைத்து எங்களுக்கு நடித்துக் காட்டினார்.

கணவர் மற்றும் மகன் இறந்த பிறகு, 2012-ல் லலிதா, விஸ்ராந்தி முதியோர் இல்லத்தில் சேர்ந்தார். இங்கு

97 வயதான லலிதாவுடன் நடனமாடும் DG D தேவேந்திரன்.

லலிதா பாட்டி.

இடமிருந்து: திட்டத் தலைவர் M ஸ்ரீகுமார், DGND M அம்பலவாணன், PDGக்கள் R சீனிவாசன், மகாவீர் போத்ரா, I S A K நாசர் மற்றும் DG தேவேந்திரன்.

150-க் மேலான முதியோர்கள் உள்ளனர். “நான் யாருக்கும் சுமையாக இருக்க விரும்பவில்லை. இந்த இடத்தில் எனக்கு மன அமைதி கிடைக்கிறது” என்கிறார் அவர். “இன்று அந்த இல்லத்தின் முக்கிய நபர்களில் ஒருவராக லலிதா இருக்கிறார். முதல்வர் எம்.கே.ஸ்டாலின் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் இங்கு வந்தால் அவர்களுக்கு நடனமாடி காட்டுகிறார்” என்கிறார் விஸ்ராந்தி இல்லத்தின் ஊழியர் மஞ்சுளா.

வந்திருந்தவர்களில் விஸ்ராந்தி போன்ற பிற முதியோர் இல்லங்களைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். அவர்களும் லலிதாவைப் போல ஒவ்வொரு கதைகளைக் கொண்டிருந்தனர். “அவர்கள் சிறப்பான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். பாடவும் ஆடவும், கொண்டாடவும் வாய்ப்பு கிடைக்கும்போது அவர்கள் முகத்தில் மகிழ்ச்சியை காண முடிகிறது” என்கிறார் மஞ்சுளா பெருமையுடன். விஸ்ராந்தி இல்லத்தைச் சேர்ந்தவர்கள், “ராஜன் கண் மருத்துவமனையுடன் இணைந்து 25 வருடங்களாக கண்களை தானம் செய்து வருகின்றனர். இதுவரை 590 ஜோடி கண்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளன.

லலிதா பாட்டியுடன் ரோட்டேரியன்கள் ஒரு குழுவாக சுயபடம் எடுத்துக்கொண்டனர். பல் இல்லாத லலிதா பாட்டி சிரிக்கும் அழகே ரசிக்கும்படி இருந்தது. “மக்களுக்கு அங்கீகாரம் என்பது பல்வேறு நிலைகளில் வரும். என் நடனத்தின் மூலம் நான் இருப்பதை பலரும் அறிந்து கொள்வார்கள். அந்த வகையில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். சாகும்வரை நான் தொடர்ந்து நடனமாடிக் கொண்டிருப்பேன்” என்கிறார் அவர்.

“இந்த நிகழ்வு கவனமாவும் துல்லியமாகவும் திட்டமிடப்பட்டது. நகரில் உள்ள 15 வெவ்வேறு இடங்களிலிருந்து ஆண்களும், பெண்களுமாக முதியோர்கள் 9 பேருந்துகளில் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் ஜன்னலுக்கு வெளியே பேனர்களையும் அலங்காரங்களையும் ஆர்வத்துடன் பார்த்தது மனதை தொடும் வகையில் இருந்தது” என்று DG தேவேந்திரன் கூறினார். அவர்கள் பேருந்திலிருந்து இறங்கினர். சிலர் கைத்தடிகளுடனும், சிலர் மற்றொருவர் உதவியுடனும் இறங்கினர். அப்போது ரோட்டேரியன்கள் கைகூப்பி, அனைவரையும் “வணக்கம் அம்மா, வணக்கம் அப்பா” என்று குடும்பத்தில் ஒருவராக கருதி வரவேற்றனர்.

மதிய நேரத்தில் ரோட்டோரியன்கள் நாற்காலிகளை நகர்த்திப்போடுவது, முதியோர்களை கழிவறைக்கு அழைத்துச் செல்வது, சக்கர நாற்காலிகளில் அவர்களை அமர வைத்து அழைத்துச் செல்வது, உணவு பரிமாறுவது என பரபரப்பாக செயல் பட்டனர். “அவர்களுக்கு நாங்கள் மறக்க முடியாத தீபாவளிப் பரிசு கொடுக்க விரும்பினோம். இது சேவை அல்ல, கண்ணியம் பற்றியது. இதுபோன்ற செயல்களைச் செய்யும்போது அவர்கள் எங்களுடன் இருப்பவர்கள் என்பதை நினைவுபடுத்துகிறோம்” என்கிறார் திட்டத்தலைவர் ஸ்ரீகுமார். மதிய உணவின் போது ஒரு முதியவர் சாப்பிடுவதற்கு முன் எழுந்து நின்று ரோட்டேரியன்களுக்கு நன்றி தெரிவித்தார். “நீங்கள் எங்களை உங்கள் பெற்றோர்கள் போல் கருதினீர்கள். இன்று நாங்கள் அதிகம் நேசிக்கப்பட்டவர்கள், மதிக்கப் பட்டவர்கள் போல் உணர்கிறோம். அதுதான் எங்களை உயிருடன் வாழவைக்கிறது” என்று கூறினார்.

தேங்காய் எண்ணெய், வலி நிவாரணி, முகத்தில் பூசும் பவுடர், குளியல் சோப்பு, துணி துவைக்கும் சோப்பு, ஷாம்பூ உள்ளிட்ட டாய்லெட் சாமான்கள், பெண்களுக்கு புடவை, ஆண்களுக்கு வேஷ்டி ஆகியவற்றைக் கொண்ட தீபாவளி பரிசுகள் வந்திருந்த அனைவருக்கும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பங்குபெற முடியாத 400 பேருக்கு இந்த பரிசுப் பொருள்கள் அவர்கள் தங்கியிருந்த முதியோர் இல்லங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றார் ஸ்ரீகுமார்.

இந்த கொண்டாட்டத்தின் சிறப்பு அம்சம் என்னவென்றால், இளையராஜாவின் இசைக் குழுவில் பணியாற்றி ஓய்வுபெற்ற மூத்த உறுப்பினர்களின் இசை நிகழ்ச்சி தான். இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய நடிகரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான எஸ்.வி.சேகர், மறைந்த தனது தாயாரைப் பற்றி குறிப்பிட்டார். “உங்கள் அனைவரிடமும் நான் அவரைப் பார்க்கிறேன். இது எனக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்” என்று கூறினார். சாகித்ய அகாதெமி விருதுபெற்ற தமிழ் எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளருமான எம்.ராமலிங்கம், “முதுமை மற்றும் எல்லாவற்றிலும் சிரிப்பை காண்பது” பற்றிய தனது கருத்துகளை பகிர்ந்து கொண்டார்.

PDGs I S A K நாஸர், R ஸ்ரீனிவாசன், மகாவீர் போத்ரா மற்றும் DGND M அம்பலவாணன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

படங்கள்: கிரண் ஜெஹரா

Rotary PEOPLE OF ACTION

தானேவில் இலக்கிய விழாவை நடத்தும் ரோட்டரி

அர்ஷத் திவாகர்

தொழிலதிபர் நாதிர் கோத்ரெஜ், தானே இலக்கிய விழா ஒருங்கிணைப்பாளர் அதுல் பிடே, RC தானே ஹில்ஸ் தலைவர் சமீர் லிமாயே மற்றும் RID 3142 DG ஹர்ஷ் மகோல் ஆகியோர் TLF புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

ரோட்டரி கிளப் ஆஃப் தானே ஹில்ஸ் (RCTH), RID 3142, நேஷனல் சென்டர் ஃபார் பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் (NCPA) உடன் இணைந்து, சமீபத்தில் முதல் தானே இலக்கிய விழாவை (TLF) நடத்தியது.

இரண்டு நாள் விழாவில் இந்தியா முழுவதிலும் இருந்து வந்த 24 புகழ்பெற்ற எழுத்தாளர்கள் மற்றும் படைப்பாளிகள் கலந்துகொண்டனர் - இவர்கள் அனைவரும் இலக்கியத்தின் மீதுள்ள அன்பு மற்றும் RCTH-ன் சிறப்பு அழைப்பின் பேரில், எந்தவிதமான சன்மானமும் இன்றி பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சி துவக்கம், இந்திய தொழில்துறையின் கவிஞர்' எனத் தன்னை அழைக்கும் தொழிலதிபர்-கவிஞர் நதீர் கோத்ரேஜ், சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் TLF ஒருங்கிணைப்பாளர் அதுல் பிடே ஆகியோரின் உரையாடலால் குறிக்கப்பட்டது. கோத்ரேஜின் நேர்மையான பதில்களும் குழந்தைத் தூய்மையும் பார்வையாளர்களைக் கவர்ந்தன. பார்சி சமூகக் கவிதைகள் முதல் 'நன்றியுரை' வரை அவரது சிறப்பு தொகுப்பு பெரிதும் பாராட்டப்பட்டது. ஹரீஷ் பட் எழுதிய டூயிங் த ரைட் திங், லர்னிங் ஃப்ரம் ரத்தன் டாடா புத்தகத்தின் முறையான வெளியீட்டிற்காக, ரத்தன் டாடாவைப் பற்றிய அவரது புதிய கவிதை ஒரு நாள் முன்னதாக வாசிக்கப்பட்டது. தனது உரையில், ரத்தன் டாடாவைச் சார்ந்த ஊக்கமளிக்கும் சம்பவங்களை பகிர்ந்தார். 'திரைப்படங்களும் புத்தகங்களும்' என்ற அமர்வில், மூத்த எழுத்தாளர், பத்திரிகையாளர் மற்றும் ஃபெமினா இதழின் முன்னாள் ஆசிரியர் சத்யா சரண் மற்றும் சாகித்ய அகாடமி விருது பெற்ற பத்திரிகையாளர், கவிஞர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் ஜெர்ரி பின்டோ, பாலிவுட் பற்றிய தங்கள் பார்வையால் அனைவரையும் கவர்ந்தனர்.

எழுத்தாளர்களாக மாறிய மூன்று கார்ப்பரேட் தலைவர்கள்-பாங்க் ஆஃப் பரோடாவின் முன்னாள் தலைவர் அனில் கந்தேல்வால், விளம்பர நிபுணர் ஆம்பி பரமேஸ்வரன், தொழிலதிபர் ராகுல் மிர்சந்தானி-'நாங்கள் ஏன் எழுதுகிறோம்' என்ற தலைப்பில் தங்கள் பார்வைகளை பகிர்ந்தனர்.

விவாதங்கள் பாரம்பரிய எல்லைகளைத் தாண்டின. 'மொழி பெயர்ப்பின் கலை, அறிவியல் மற்றும் வணிகம்' அமர்வில், எழுத்தாளர்கள் விக்ராந்த், சுபா பாண்டே மற்றும் கவிஞர் சம்பூர்ணா சட்டார்ஜி, மொழிபெயர்ப்பு என்பது நகலல்ல, மறு உருவாக்கம் செய்யும் படைப்பாற்றல் எனக் கூறினர். ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி, மராத்தி எழுத்தாளர் மற்றும் 99வது அகில இந்திய மராத்தி சாகித்ய சம்மேளனத் தலைவர் விஸ்வாஸ் பாட்டீல், இன்றைய காலத்தில் சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசினார்.

ரோட்டரி நியூஸ் இதழின் ஆசிரியர் ரஷீதா பகத் மற்றும் கரோன் ஷைவா கலந்து கொண்ட 'சேவையாற்றும் கதைகள்: மாற்றத்தின் ஆசிரியர்கள்' எனும் அமர்வில், நடுவர் சீதா ராஜு, பத்திரிகை எவ்வாறு இரக்கத்தையும் நெறிமுறைச் சேவையையும் முன்னிறுத்தும் சக்தியாக விளங்குகிறது என்பதை ஆராய்ந்தார். எழுத்தாளர் தேவதத் பட்நாயக்கின் ஊக்கமளிக்கும் உரை, அவரது புதிய புத்தகமான தி பகாசுரா எஃபெக்ட் குறித்து நடந்த உரையாடலுடன், முதல் நாளின் சிறப்பம்சமாக இருந்தது.

இரண்டாம் நாளில், மூத்த பத்திரிகையாளரும், புகழ்பெற்ற நையாண்டி எழுத்தாளருமான பச்சி கார்க்கரியாவின் 'எரட்டிகா அண்ட் பியான்ட்' என்ற அமர்வு, நிரம்பி வழிந்த பார்வையாளர்களிடம் இருந்து ஒரு தன்னெழுச்சியான பாராட்டுகளைப் பெற்றது. அவருக்கு முதல் TLF வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

'திடீர் யாத்ரீகர்' அமர்வில் பத்திரிகையாளர் மற்றும் எழுத்தாளர் நமிதா தேவிதயாலின் புதிய புத்தகம் டாஞ்ஜரீன்: ஹௌ டூ ரீட் த உபநிஷாத்ஸ் வித்தௌட் கிவிங் அப் காஃபி வெளியிடப்பட்டது. பின்னர், சார்லஸ் அசிசி மற்றும் தாமினி ரத்னம் உடன் 'நாங்கள் ஏன் எழுதுகிறோம்' என்ற அமர்வை அவர் வழிநடத்தினார்.

புகழ்பெற்ற நையாண்டி எழுத்தாளர் பாச்சி கன்காரியாவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படுகிறது.

கதை சொல்லலின் அடிப்படைத் தூண்டுதல்கள்-சிக்கலான அமைப்புகளைப் புரிய வைப்பது, ஒதுக்கப்பட்டவர்களின் அடையாளத்தைப் பதிவு செய்வது- என்பவைகளை ஆராய்ந்த அவர்கள், செயற்கை நுண்ணறிவு யுகத்திலும் மனித எழுத்தாளரின் நம்பகத்தன்மையும் தனித்துவமான பார்வையும் மாற்றீடு செய்ய முடியாதவை என வலியுறுத்தினர்.

'காட்சி கதைகள்' அமர்வு, இலக்கியத்தில் படங்களின் பங்கு மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை ஆராய்ந்து, கலை, விளக்கப்படம் மற்றும் புகைப்படம் போன்ற பல்வேறு கதை சொல்லும் வடிவங்களை கொண்டாடியது. கலைஞர்கள் கிரிபா பாட்டியா, சுசரிதா மற்றும் புகைப்படக்காரர் சில்ரோதீப், பத்திரிகையாளர் ஜேன் போர்கஸ் உடன் சேர்ந்து இலக்கியத்தின் இந்த தனித்துவமான கோணத்தை வெளிப்படுத்தினர்.

இலக்கிய விழாவின் இரண்டு நாட்களிலும், இரண்டு நிகழ்ச்சிகள் தனித்து நின்றன. தனாஸ்ரீ கர்மர்கர் மற்றும் ஸ்ரீரங் கடவ்கர் ஆகியோரால் வழங்கப்பட்ட இந்தியில் ஆழமாக மனதைத் தொடும் நாடக வாசிப்பான தாஸ்தங்கோய் மற்றும் மராத்தியில் உள்ள அபிவசன் ஆகும். அச்சிடுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே கதை சொல்லுதல் ஒரு துடிப்பான பேசும் கலையாகத் தொடங்கியது என்பதை அவை பார்வையாளர்களுக்கு நினைவூட்டின.

விழாவிற்குப் பின்னால் இருந்த முக்கிய உந்துசக்தியான முன்னாள் தலைவர் அதுல் பிடே, சமீபத்தில் முதுகெலும்பு அறுவை சிகிச்சை செய்த போதிலும், தொலைநோக்கு தலைமையையும் விடாமுயற்சியையும் வழங்கினார். அவருக்குக் சங்கத்தலைவர் சமீர் லிமாயே முழு ஆதரவையும் அளித்தார்.

ரோட்டேரியர்கள் A S குமார், ஜெயந்த் நாகவ்கர் மற்றும் PP விஜய் ஷெட்டி ஆகியோரின் உதவியால், ஃபோர்ட்ரஸ் குழுமம், யெஸ் வங்கி, பயோ செட் மற்றும் TJSB சஹாகரி வங்கி போன்ற பெருநிறுவனங்களால் இலக்கிய விழாவுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. NCPA மற்றும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் உடனான கூட்டணி அதற்கு நல்ல ஊடக வெளிச்சத்தைப் பெற்றுக் கொடுத்தது.

இந்த இலக்கிய விழாவை ஏற்பாடு செய்ததன் மூலம், ரோட்டரியின் கலாச்சார மாற்றத்தை ஏற்படுத்தும் ஆற்றலை RCTH உறுதிப்படுத்தியுள்ளது, சேவையும் சமூக ஈடுபாடும் இணையும்போது, வார்த்தைகள் உண்மையாகவே நன்மையின் நீடித்த சக்தியாக மாறும் என்பதை இது நிரூபிக்கிறது.

இந்தக் கட்டுரையை எழுதியவர் தானே ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் ஆவார்.■

போலியோவுக்கு முடிவுகட்டுவோம்

V முத்துகுமரன்

"உலகளாவிய போலியோ ஒழிப்பு முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், ஏறக்குறைய 99.9 சதவீதம் போலியோவை ஒழித்து விட்டாலும், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய இருநாடுகளிலும் ஆண்டு தோறும் புதிது புதிதாக தீவிர போலியோ நோய் தாக்குதல் சம்பவம் தொடர்வது மிகவும் கவலை அளிக்கிறது. அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாதது, மோதல்கள் மற்றும் பயங்கரவாதம் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ரோட்டரி தன்னார்வலர்களின் நோய்த்தடுப்பு முயற்சிகளுக்குத் தடையாக இருக்கின்றன" என்று RI-ன் போலியோபிளஸ் குழுவின் தலைவர் மைக்கேல் மெக்கவர்ன் தெரிவித்தார்.

RID 3234 மற்றும் தி ஹிந்து நாளிதழ் இணைந்து நடத்திய "போலியோ நோய் ஒழிப்பில் கடைசி மைல்கல்" என்னும் தலைப்பிலான மெய்நிகர் கருத் தரங்கில் உரையாற்றிய அவர், ரோட்டேரியன்கள் சங்க அளவிலும், தேசிய அளவிலும் போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளைத் தொடர வேண்டும் என்று வலியுறுத்தினார். அதிகம் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் போலியோ ஒழிப்பில் கவனம் செலுத்த வேண்டும். குறிக்கோளை எட்டுவதில் கூட்டாளர்களிடையே பொறுப்புணர்வை உறுதிசெய்ய வேண்டும். ஆதரவு குழுக்களுடனும், உள்ளூர் அரசாங்கத்துடனும் இணைந்து செயலாற்ற வேண்டும். இது போலியோ பிளஸ் பிரசாரத்துக்கு நிதிபெற உதவும்" என்றார்.

தற்போது, உலகளாவிய ரோட்டரி சங்கங்களில் 62 சதவீத சங்கங்கள் போலியோ ஒழிப்புக்கு நிதிப்பங்களிப்புச் செய்கின்றன. மேலும், "இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கத்தினர் தங்கள் விழிப்புணர்வு இயக்கங்கள் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்து விழிப்புணர்வு மற்றும் ஆதரவு நடவடிக்கைகள் மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றனர்." போலியோ சொட்டு மருந்திலிருந்து தடுப்பூசிக்கு மாறும் இந்திய அரசின் நடவடிக்கைகளுக்காக ரோட்டரி 25 மில்லியன் டாலர் பங்களிப்புச் செய்துள்ளதாகவும் அவர் நினைவுகூர்ந்தார்.

ரோட்டரியின் சர்வதேச தலைவராக பொறுப்பேற்ற பிறகு, பிரான்செஸ்கோ அரெஸ்ஸோவின் முதல் பயணம் பாகிஸ்தானுக்குத்தான். அங்கு அவர் போலியோ ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அரசியல் மற்றும் ரோட்டரி தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். "பாகிஸ்தானில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை போலியோ நோய் தாக்குதல் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது. குறிப்பாக தேர்தலின்போது சுகாதார மற்றும் தன்னார்வலர்களின் போலியோ தடுப்புப் பணிகளுக்கு தடையேற்படுகின்றன என்று அவர்

RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ, பாகிஸ்தானில் உள்ள ஒரு நோய்த்தடுப்பு மையத்திற்கு வருகை தந்தபோது.

கூறினார். கடந்த அக்டோபர் மாதம் 16-ம் தேதி நிலவரப்படி உலக அளவில் தீவிர போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 35 ஆகும். இதில் பாகிஸ்தானில் 29 பேரும், ஆப்கானிஸ்தானில் 6 பேரும் பாதிக்கப்பட்டவர்கள். கடந்த 2024-ம் ஆண்டில் இரு நாடுகளிலும் சேர்த்து பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 99-ஆக இருந்தது என்றார்.

எத்தியோப்பியா, யேமன், சாட், அங்கோலா, காஸா, நைஜீரியா மற்றும் சோமாலியா போன்ற ஆப்பிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் போலியோ தடுப்பூசிகளுக்கு தேவையும், ரோட்டரி குழுவினரின் கண்காணிப்பும் தேவைப்படுகிறது என்றார் மெக்கவர்ன். ஒவ்வொரு ஆண்டும் ரோட்டரி போலியோ பிளஸ் பிரசாரத்துக்காக 50 மில்லியன் டாலர் நிதி திரட்டுகிறது. இதற்கு 2:1 என்ற விகிதத்தில் கேட்ஸ் அறக்கட்டளை 2029 வரை நிதியளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. அமெரிக்க அரசு மிகப்பெரிய நன்கொடையாளராக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆண்டுக்கு 265 மில்லியன் டாலர் என்ற வகையில் நிதிப் பங்களிப்புச் செய்துள்ளது. 2026-ம் ஆண்டிலும் இதே தொகை வழங்கப்படும். 1985-ம் ஆண்டிலிருந்து அமெரிக்க அரசு மட்டும் போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக 5 பில்லியன் டாலருக்கு மேல் செலவிட்டுள்ளது.

நைஜீரியாவில் உள்ள ஒரு ஆரம்ப சுகாதார மையத்தில் நடைபெற்ற நோய்த்தடுப்பு முகாமின் போது RI-ன் போலியோபிளஸ் கமிட்டித் தலைவர் மைக்கேல் மெக்கவர்னுடன் TRF அறங்காவலர் பேர்ல் இஜியோமா ஒகோரோ.

ரோட்டரி, தனது ஆதரவு முயற்சிகள் மூலம் 1988-ல் உருவாக்கப் பட்ட சர்வதேச போலியோ ஒழிப்பு முயற்சிக்கான கூட்டணியில் உலக சுகாதார நிறுவனம் மற்றும் கேட்ஸ் அறக்கட்டளையை கொண்டு வந்துள்ளது. ரோட்டரி மற்றும் இதர சுகாதார அமைப்புகள் இதில் நிறுவன உறுப்பினர்கள். போலியோ ஒழிப்பை ஒரு சவாலான திட்டமாக ரோட்டரி எடுத்துக்கொண்டதுபோல உலகில் எந்த அமைப்பும் எடுத்துக் கொள்ளவில்லை என்று மெக்கவர்ன் குறிப்பிட்டார். போலியோ ஒழிப்பு திட்டத்துக்கு முற்றிலுமாக முடிவு கட்டாமல், நாம் அடுத்த திட்டத்துக்கு செல்ல முடியாது என்றும் அவர் கூறினார்.

சென்னை மாநகராட்சியுடன் இணைந்து கூட்டு முயற்சியாக கடந்த நவ. 8, 9 தேதிகளில் போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் முகாம் நடத்தப்பட்டது என்று DG வினோத் சரோகி கூறினார். போலியோவை முற்றிலுமாக ஒழிக்க ரோட்டரி எடுத்து வரும் முயற்சிகள் குறித்து மெட்ரோ ரயில்நிலையங்களில் ரோட்டேரியன்கள் பயணிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். சமூக ஊடகங்கள் மூலமும் பிரசாரம் தொடர வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் போலியோ மீண்டும் தலைதூக்காமல் இருக்க கண்காணிப்புடன் இருக்க வேண்டும். உலகில் கடைசி குழந்தைக்கு தடுப்பூசி போடும் வரை போலியோவை முற்றிலும் ஒழிப்பதற்கான போலியோ பிளஸ் பிரசாரத்தை நாம் தொடர வேண்டும் என்றார்.

பல்வேறு சமூக ஊடகங்கள் மூலம் இந்த நேரடி ஒளிபரப்பு அமர்வை சுமார் 700 ரோட்டேரியன்கள் மற்றும் தி ஹிந்து நாளிதழ் வாசகர்களும் பார்த்தனர். ■

சென்னை ஒரு முன்னோடி ஆய்வு

ரோட்டரி நியூஸ் குழுவிடம் பேசிய மூத்த EPN பிரசாரகரும், RC மெட்ராஸின் முன்னாள் தலைவருமான N K கோபிநாத், 1984-ம் ஆண்டிலேயே மாநில அரசின் உதவியுடன் கனடாவிலிருந்து தடுப்பூசியை இறக்குமதி செய்து, நாட்டிலியே முதலாவதாக அப்போதைய சென்னையில் போலியோ பிளஸ் பிரசாரத்தை தொடங்கியது மெட்ராஸ் ரோட்டரி சங்கம்தான் என்றார்.

இந்தியாவில் முதன் முதலாக தடுப்பூசி போடும் இயக்கத்தின் முன்னோடிகளாக இருந்தவர்கள் மறைந்த கிறிஸ் சிட்டாலே, கனடாவின் விட்பை ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த PDG கென் ஹாப்ஸ் மற்றும் வேலூர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த Dr ஜேக்கப் ஜான் ஆகியோர்தான். “1984-ல் சென்னையில் நடைபெற்ற பிரசாரத்தின் வெற்றிதான், போலியோ பிளஸ் பிரசாரத்தை தேசிய அளவில் எடுத்துச் செல்ல அடிப்படை காரணமாக அமைந்தது. 1987-ம் ஆண்டு மே மாதம் 1-ம் தேதி இதற்கான பிரசாரத்தை தொடங்கிவைத்தவர் அப்போதைய RI தலைவர் மாட் காப்ராஸ். இந்திய அரசு தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாகத் தேர்ந்தெடுத்தது. அப்போது ரோட்டரி இந்த பிரசாரத்திற்காக 2.5 மில்லியன் டாலர் நிதியை மானியமாக வழங்கியது” என்றார் கோபிநாத்.

Rotary PEOPLE OF ACTION

இந்திய ரோட்டரியின் இளம்பிள்ளைவாத நாள் நிகழ்ச்சிகள்

ரோட்டரி செய்திக்குழு

உலக இளம்பிள்ளைவாத நாளான அக்டோபர் 24 அன்று, உலகெங்கும் இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதில் ரோட்டரியின் சிறந்த பங்களிப்பையும், 2014-ல் இந்தியாவை இளம்பிள்ளைவாதம் இல்லாத நாடாக ஆக்க உதவிய ஆயிரக்கணக்கான இந்திய ரோட்டரியன்களின் தொடர் முயற்சிகளையும் போற்றும் வகையில் இந்தியா முழுவதுமுள்ள ரோட்டரி சங்கங்கள் பல நிகழ்ச்சிகளை நடத்தின.

இந்த நிகழ்ச்சிகள் ரோட்டரியின் வரலாற்றுப் பணியைக் கொண்டாடின, புதிதாகப் பிறந்த, ஐந்து வயது வரையிலான குழந்தைகளை இந்த முடக்கிப்போடும் வைரஸிலிருந்து காப்பதற்காக வழக்கமான தடுப்பு மருந்து வழங்கல், தொடர் கண்காணிப்பு முதன்மையானது என்பதையும் வலியுறுத்தின. அருகிலிருக்கும் பாகிஸ்தான்,

மேலே: RC விஜயநகரத்தின் நர்த்தனசாலா இன்டராக்ட் சங்க உறுப்பினர்கள் ஒரு ஷாப்பிங் மாலில் உலக போலியோ தினத்தை நினைவு கூர்ந்தனர்.

வலது: World's Greates Meal திரட்டும் நிகழ்வில் குழந்தைகளுடன் RC பெல்காம் மிட் டவுன் உறுப்பினர்கள்.

வலமிருந்து: நவி மும்பை மாநகராட்சிக் கட்டிடத்தின் முன் PDG கைலாஷ் ஜெதானி, DG ஹர்ஷ் மகோல் மற்றும் RC நவி மும்பை ஜாய் ஆஃப் கிவிங் தலைவர் ரேகா சங்கலா.

RC மயிலாடுதுறை கிங்ஸ் தலைவர் P அய்யாசாமி (இடமிருந்து மூன்றாவது) மற்றும் சங்க உறுப்பினர்கள் போலியோ ஹுண்டியுடன்.

ஆஃப்கானிஸ்தானில் இன்னும் இளம்பிள்ளைவாதம் இருப்பதால், இந்தியாவின் இளம்பிள்ளைவாதம் இல்லா நிலையைத் தக்கவைத்துக் கொள்வது முக்கியம். ஏனெனில், வைரஸ்கள் எல்லைகளை மதிப்பதில்லை.

இந்தியா முழுவதும் ரோட்டரி சங்கங்கள் அந்த நாளை எப்படிக் கொண்டாடின என்று பார்ப்போம்.

நவி மும்பை ஜாய் ஆஃப் கிவிங் ரோட்டரி சங்கம், RID 3141, RCC நவி மும்பை ஷேப்பர்ஸ் ஆகியோர் நவி மும்பை நகராட்சிக் கழகத்துடன் இணைந்து, NMMC தலைமையகத்தில் இப்போதே இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவோம், போன்ற ஆற்றல் மிக்க செய்திகளை ஒளிரவிட்டனர்.

புணே-வில், சேனாபதி பாபட் சாலையில், இளம்பிள்ளைவாதத்தை நீக்குவதில் ரோட்டரியின் முதன்மைப் பங்கைச் சுட்டிக்காட்டுகிற சிறப்பான 30×40 அடிப் பலகையொன்றை நிறுவியது RC புணே ஸ்போர்ட்ஸ்சிட்டி (RID 3131). இந்தச் சங்கம் இந்த நகரத்தின் சேரிப் பகுதிகளின் வழியாக 12 கிலோமீட்டர் பைக் பேரணியையும் நடத்தியது.

இந்தச் சங்கம் TRFன் இளம்பிள்ளைவாத நிதிக்கு $2,000 பங்களித்துத் தன் நீண்ட மரபைத் தொடர்ந்தது.

ரூர்க்கி மிட்-டவுன் ரோட்டரி

சங்கம், RID 3080, மதராசா ரகுமானியா அராபியாவுடன் இணைந்து இந்த நகரத்தில் விழிப்புணர்வுப் பேரணியை நடத்தியது. இஸ்லாமிய அறிஞர்கள், ரோட்டரியன்கள், மருத்துவத் தொழில் வல்லுநர்கள் பேசிய கருத்தரங்கில் குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து கொடுப்பதன் முக்கியத்துவம் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டது.

DG ரவி பிரகாஷ் மக்களிடம் இருக்கக் கூடிய தவறான நம்பிக்கைகள், அச்சங்களை அகற்றும்படி சமூகத் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்.

இளம்பிள்ளைவாத நிதிக்கு நிதி திரட்டுவதற்கான இளம்பிள்ளை வாதத்தை முடிப்பதற்கான உலகின் மிகச் சிறந்த உணவு (WGM) முன்னெடுப்பின்கீழ் RC பெல்காம் மிட்-டவுன், RID 3170, யோகாசன நிகழ்ச்சிகளை நடத்தியது. 2014-ல் RC கெய்ர்ன்ஸ் சன்ரைஸ், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சுசேன் ரீ தொடங்கிய WGM திட்டம் ரோட்டரியன்களை ஒரு விருந்து வழங்கும்படி, ரோட்டரியின் இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் கதையைப் பகிர்ந்துகொள்ளும்படி, பிறரை இந்த நோக்கத்தை ஆதரிக்க ஊக்குவிக்கும்படி கோருகிறது.

RID 3206 DG *செல்லா* K *ராகவேந்திரன் (இடமிருந்து மூன்றாவது) எண்ட் போலியோ நவ் ஒருங்கிணைப்பாளர்* PDG V R *முத்து மற்றும்* DGE *மாருதி சம்பா ஆகியோர் ஒரு மாரத்தான் நிகழ்ச்சியில்.*

அப்போதிலிருந்து இந்த நிகழ்வு உலக அளவில் $7 மில்லியன் திரட்டியுள்ளது, பில் & மெலிண்டா கேட்ஸ் அறக் கட்டளை அதற்கு இணையான பங்களிப்புகளை வழங்கியுள்ளது.

RC பீட் மிட்-டவுன் (RID 3132), RC பசோரா பட்காவ்ன் (RID 3030), மற்றும் RC ஹரிபட் கிரேட்டர் (RID 3211) உள்ளிட்ட பல சங்கங்கள் விழிப்புணர்வுப் பேரணிகளை நடத்தின.

கோயம்புத்தூரில், RID 3206 நடத்திய மாரத்தானை PDG V R முத்து (Zone 5-க்கான End Polio Now ஒருங்கிணைப்பாளர்) கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். இந்த நிகழ்வில் 4,000 பேர் ஓடினார்கள். DG செல்லா ராகவேந்திரன் தலைமையில் இந்த மாவட்டம் 33 ரோட்டரி சங்கங்களிடமிருந்து TRF-ன் இளம்பிள்ளைவாத நிதிக்கு $50,000 மதிப்புள்ள உறுதிமொழிகளைப் பெற்றது. இதில் $20,000 ஏற்கெனவே அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டு விட்டது.

துர்காபூரில் உள்ள ஐந்து சங்கங்கள் (RID 3240) இணைந்து ஒரு பேரணியை நடத்தின, மயிலாடுதுறையில் ரோட்டரி சங்கங்கள் இணைந்து, சிறு துளிகள் என்ற தமிழ்ப் படத்தை மக்களுக்குத் திரையிட்டன.

RC திருப்பத்தூர், RID 3231, ரோட்டரியன்கள் இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்கல் முகாம் ஒன்றை நடத்தினார்கள். RC விஜியநகரம், RID 3020, ஆதரிக்கும் நர்தனசாலா இன்டராக்ட் சங்கத்தின் இளம் உறுப்பினர்கள் ஒரு வணிக வளாகத்தில் இளம்பிள்ளைவாதத்தை இப்போதே முடித்துவைப்போம் என்ற கருப் பொருளில் ஒரு திடீர் நடனத்தை ஆடினார்கள்.■

RC *ரூர்க்கி மிட் டவுன் ஏற்பாடு செய்த போலியோ விழிப்புணர்வு பேரணியில் மதரசா ரஹ்மானியா அரேபியாவின் மாணவர் பங்கேற்கிறார்.*

ரோட்டரியின் சேவைத்திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

பெண்கள் மேம்பாட்டுக்கு ஆட்டோக்கள் வழங்குதல்

ஆட்டோ-மேஜிக் திட்டத்தின் கீழ், RID 3191 சார்ந்த ரோட்டரி சங்கங்கள், CSR ஆதரவாளர்களான Tessolve மற்றும் Wesco ஆகியவற்றுடன் இணைந்து பொருளாதாரத்தில் நலிவுற்ற 6 ஏழைப் பெண்களுக்கு ஆட்டோக்களை வழங்கின. இந்த நிகழ்வில் ஆர்ய வைசிய மகளிர் குழு சார்பில் பெண்களுக்கு பரிசுப் பொருள்களும், புடவைகளும் வழங்கப்பட்டது.■

IPDG சதீஷ் மாதவன் (இடது), DG B R ஸ்ரீதர் (வலது) மற்றும் DRFC காசிநாத் பிரபு (வலது) ஆகியோர் ஒரு பயனாளியுடன்.

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு

RC ஹுப்ளி வெஸ்ட் (RID 3170) மற்றும் கொடைக்கானல் ரோட்டரி சங்கம் (RID 3000), வடக்கு கர்நாட CSI திருச்சபையுடன் இணைந்து ஹுப்ளியில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் பரிசோதனை முகாமை நடத்தின. 250 பெண்களுக்கு பரிசோதிக்கப்பட்டனர்.

நடமாடும் மார்பகப் பரிசோதனை மருத்துவமனைக்கு முன்னால் கர்நாடக வடக்கு மாவட்ட CSI உறுப்பினர்கள் மற்றும் ரோட்டேரியன்கள்.

பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாடு

மீரட் ரோட்டரி சங்கம் (RID 3100) சர்வதேச மானிய உதவி $36,038 மூலம் தத்திரியில் உள்ள வேதிக் கன்யா இன்டர் கல்லூரிக்கு வழங்கியது. கணினி கருவிகள், ஸ்மார்ட் போர்டு, ஆய்வக கருவிகள், கழிப்பறைகள், சூரியசக்தி மின்பலகை அமைத்தல், மாணவிகளுக்கு சைக்கிள் வழங்குதல் ஆகிய வசதிகள் இதில் அடங்கும்.

பள்ளி மாணவர்கள் மற்றும் அவர்களின் புதிய மிதிவண்டிகளுடன் ரோட்டேரியன்கள்.

தியாகிகளின் குழந்தைகளுக்கு ரோட்டரி நாட்டியாஞ்சலி

RC மெட்ராஸ் ஹெரிடேஜ் (RID 3234), நாட்டிற்காக உயிர் தியாகம் செய்து வீரமரணமடைந்த ராணுவ வீரர்களின் குழந்தைகளின் கல்விக்கு நிதி திரட்டுவதற்காக நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியை நடத்தியது. இதில் 100 நடனக்கலைஞர்கள் ‘நவரசம்’ என்னும் கருபொருளில் நிகழ்ச்சி நடத்தினர். இதன் மூலம் ரூ.6.5 லட்சம் திரட்டப்பட்டது.

நாட்டியாஞ்சலி நிதி திரட்டும் நிகழ்ச்சியில் ஒரு நடன நிகழ்ச்சி.

ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

பெண்களை மையமாகக் கொண்ட முன்முயற்சிகள்

நீண்டகால நிலையானத் திட்டங்களில் கவனம் செலுத்துவதே அவரின் நோக்கமாகும். எங்கள் மாவட்டத்தில் உள்ள 162 சங்கங்களிடமும் (5276 உறுப்பினர்கள்) நீண்டகாலம் நிலைத்திருக்கும் சேவைத் திட்டங்களை செயல்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளேன் என்கிறார் டாக்டர் டினா.

ஆஷா திட்டத்தில் 75,000 பெண்களுக்கு செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் கருவிகள் மூலம் மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை நடத்தப்படும். இந்த தொழில்நுட்பம் கதிர்வீச்சு அபாயம் இல்லாத, ஊடுருவல் இல்லாத, மலிவு விலை பரிசோதனையை முறையாகும். 55,000 டாலர் மதிப்பிலான சர்வதேச மானிய உதவி மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதைத் தவிர மேலும் 6 துணை திட்டங்கள் உள்ளன. “அபயா” (வீடு கட்டுதல்), “வித்யா” (கல்வி கற்பித்தல்), “ஜனனி” (தாய்-சேய் நலன் மற்றும் ஸ்மார்ட் அங்கன்வாடிகள்), “ஸ்ரேயா” (பொருளாதார சுதந்திரம்), “நிர்மலா” (கழிப்பறைகள் மற்றும் தானியங்கி தண்ணீர் தொட்டிகள்), “பூமிகா” (சுற்றுச்சூழல் பாதுகாப்பு) ஆகியவை.

மாவட்ட சங்கங்கள் மூலம் தலா ரூ.200 விலையுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பான 75,000 மாதவிடாய் கோப்பைகள் 20 பஞ்சாயத்துகள் மூலம் விநியோகிக்கப்படும். ரூ.80 லட்சம் மதிப்புள்ள 3,000 சைக்கிள்கள் சங்கத்தின் மூலம் பள்ளி மாணவிகளுக்கு வழங்கப்படும். TRF-க்கு அவரது இலக்கு 1 மில்லியன் டாலர். புதிதாக 10 சங்கங்களை பட்டயப்படுத்தவும், 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும் திட்டமிட்டுள்ளார். டினா 1998-ல் ரோட்டரியில் சேர்ந்தார். அவரது கணவர் ஆன்டனி ரோட்டேரியனாக இருப்பதால் ரோட்டரி சேவையில் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது.

டாக்டர் டினா ஆன்டனி குன்னும்கல்
பல் மருத்துவர்
RC அரூர் சாட்டிலைட் சிட்டி, RID 3211

குவாலியரில் மருத்துவப்பணி

நிஷா ஷெகாவத்
கல்வியாளர்
RC ஆஜ்மிர், RID 3053

ஒரு இளம் பெண்ணாக நிஷா, 82 வயதான, கோட்டா ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரும் தந்தையுமான சிவராஜ் சிங் கவுரால் ஈர்க்கப்பட்டார். அவர் 44 ஆண்டுகளாக ரோட்டரி சேவையில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டு வருகிறார். மாவட்ட ரோட்டரியில் பல்வேறு பொறுப்புகளையும் வகித்து வந்துள்ளார். “எனது தந்தைதான் எனக்கு ரோல் மாடல்” என்கிறார் நிஷா. அவரின் கணவர் அமர்பால் சிங் ஷெகாவத்தும் ஒரு ரோட்டேரியன்.

ஜோத்பூர் மற்றும் ஆஜ்மிரில் உள்ள 30 அரசுப் பள்ளிகளுக்கு 1600 பெஞ்ச் மற்றும் சாய் மேஜைகள் (GG: ரூ.50 லட்சம்) மற்றும் ஜோத்பூர் M G மருத்துவமனையில் உள்ள பச்சிளங்குழந்தைகள் பாராமரிப்பு பிரிவுக்கு (GG: ரூ.26 லட்சம்) இரண்டு திட்டங்களை அவர் செயல்படுத்தியுள்ளார். கடந்த மார்ச் மாதம் கடைசி வாரத்தில் RID 3080 மற்றும் மாநில அரசின் கூட்டுமுயற்சியில் குவாலியர் ரோட்டரி சங்கம் சார்பில் சிவபுரியில் 7 நாட்கள் மெகா மருத்துவ முகாம் நடைபெற்றது. மேலும் பிவாண்டி ரோட்டரி சங்கம் சார்பில், 1500 மாணவர்கள் பயனடையும் வகையில் CSR நிதியுதவியுடன் (ரூ.1 லட்சம் மதிப்பில்) மகிழ்ச்சிப்பள்ளி திட்டத்தை செயல்படுத்தவும் முடிவு செய்துள்ளார்.

மாவட்டத்தில் தற்போது 77 சங்கங்களில் 3,400 உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர் சேர்க்கையை 15 சதவீதம் அதிகரிக்க திட்டமிட்டுள்ளார். ஜூலை மாதம் முதல் தாய்-சேய் நலன், சுகாதாரம், எழுதறிவு என ரூ.7 லட்சம் மதிப்பில் 50 திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். “நாங்கள் தற்போதைய நடவடிக்கை மூலம் 3,500 யூனிட் இரத்தம் சேகரித்துள்ளோம். 10,000 மரக்கன்றுகளை நட்டுள்ளோம்” என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

TRF-க்கு அவரது நிதிப் பங்களிப்பு இலக்கு 260,000 டாலர். ரோட்ராக்டராக (1990–93) இருந்து, 2007-ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்தவர் நிஷா.

மார்பக புற்றுநோய் கண்டறியும் வாகனத்தில் கவனம்

மாவட்ட ரோட்டரியின் செயல்பாட்டை மேம்படுத்த லட்டூரே, 26 உறுப்பினர்களுக்கு குறைவான சங்கங்களுக்கு தடைவிதித்துள்ளார். ரோட்டேரியன்கள் தங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள ஒரு சங்கத்தை தேர்வுசெய்ய வேண்டும். மேலும் ஒரு சங்கத்தில் குறைந்தது 5 பெண் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். தற்போது மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 16 சதவீதம்பேர் பெண் உறுப்பினர்கள் உள்ளனர். இதை ஜூன் இறுதிக்குள் 20 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்பதே நோக்கமாகும். எனது பதவிக்காலத்தில் 500 புதிய உறுப்பினர்களை சேர்ப்பதும், 25 புதிய சங்கங்களை பட்டயப்படுத்துவதும் இலக்காகும் என்கிறார் அவர். தற்போது 103 சங்கங்களில் மொத்தம் 4,240 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

மார்பக புற்றுநோய் கண்டறிதலை ஊக்குவிக்க தற்போதுள்ள மூன்று மார்பக புற்றுநோய் கண்டறியும் நடமாடும் பரிசோதனை வாகனத்துடன் (GG: $300,000) மேலும் ஐந்து பரிசோதனை வாகனங்கள் கூடுதலாக சேர்க்கப்படும். இதன் மூலம் தொலைதூர கிராமங்களில் உள்ள 2 லட்சம் மகளிர்க்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை நடத்த முடியும். பச்சிளங் குழந்தைகளுக்காக சோலாப்பூர், நாந்தேத் மற்றும் அம்பாஜோகை ஆகிய மூன்று இடங்களில் உள்ள அரசு மருத்துவமனையில் தாய்ப்பால் வங்கிகள் (GG: $150,000) நிறுவப்படும். 100 அரசுப் பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக (GG: $200,000) மாற்றப்படும். விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில், அக்னுஜ், சாகுர், ஜல்னா மற்றும் ஷிர்டியில் நான்கு பண்ணை உபகரண வங்கிகள் (GG: $100,000) ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். புதிதாக 250 ரோட்ராக்டர்கள் சேர்க்கப்படுவார்கள் (தற்போது 490 உறுப்பினர்கள் உள்ளனர்.) தற்போது 34 ரோட்ராக்ட் சங்கங்கள் உள்ளன. மேலும் 10 புதிய சங்கங்கள் நிறுவப்படும் என்றும் அவர் கூறினார்.

TRF நிதிப் பங்களிப்பு இலக்கான 1 மில்லியன் டாலரை எட்டுவதற்கு கடந்த நவம்பர் மாதம் பல இடங்களில் ரோட்டரி ஓட்டம் நடைபெற்றது. லட்டூரே 2011-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார்.

சுதிர் லட்டூரே
மெட்டல் ஃபேப்ரிகேஷன்
RC லட்டூர் மிட்- டவுன்
RID 3132

நம்ரதா
அணைகள் மற்றும் கால்வாய்கள்
RC சாணக்யா, RID 3250

மருத்துவம், குடிநீர் திட்டங்களின் கலவை

DG நம்ரதா, பெரும்பாலான மக்களுக்கு பயனளிக்கும் வகையில் மருத்துவம் மற்றும் குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். பட்டியலில் முதலாவதாக முஸாஃபர்பூர், பக்ஸார் மற்றும் பாட்னாவில் உள்ள தனியார் மருத்துவமனையில் தலா ஒரு இரத்த வங்கி (GG: ₹144 லட்சம்) அமைக்கப்படும். இதைத் தொடர்ந்து ராஞ்சியில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் பிகாரில், மோதிஹரியில் ஒரு அறக்கட்டளை மருத்துவமனையில் தலா இரண்டு டயாலிசிஸ் சிகிச்சை இயந்திரங்கள் நிறுவப்படும்.

பிகார் மாநிலத்தில் அவுரங்காபாத் மாவட்டத்தில் உள்ள கோஹ் கிராமத்தில் மக்களின் குடிநீர் மற்றும் நீர்ப்பாசனத் தேவையை கருத்தில் கொண்டு 250 மோட்டார் பம்பு செட்டுகள் (GG: ரூ.60 லட்சம்) நிறுவப்படும். பாட்னா அருகே உள்ள ஏழு பாழடைந்த குளங்கள் CSR நிதியுதவியுடன் புதுப்பிக்கப்படும். ராஞ்சியில் உள்ள மனநல மருத்துவமனைக்கு உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் ($225,000 CSR நிதி உதவியுடன்) நன்கொடையாக வழங்கப்படும்.

நம்ரதாவின் TRF நன்கொடை இலக்கு $500,000. மாவட்டத்தில் உள்ள 120 சங்கங்களில் 4,700 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்கள் எண்ணிக்கையை 20 சதவீதம் அதிகரிக்கவும், 10 புதிய சங்கங்களை பட்டயப்படுத்தவும் அவர் திட்டமிட்டுள்ளார். அவர் 2008 ஆம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்தார்.■

RID 2981

RC விஜயபுரம்

COPSE என்ற மாவட்டத் திட்டத்தின்கீழ் இந்தச் சங்கம் பசுமைப் பரப்பைக் கூடுதலாக்குகிற, திட்டங்கள் பலவற்றை நடத்தியுள்ளது. இந்த முன்னெடுப்பைச் சப்செல் டெக் சொல்யூஷன்ஸ் நிறுவனம் ஆதரித்துள்ளது.

Rotary PEOPLE OF ACTION

சங்கச் செய்திகள்

RID 3012

RC டெல்லி ஷாஹ்தாரா

பஞ்ச்குயான், அந்த் மகாவித்யாலயா பார்வைத் திறன் குறைந்தோர் உண்டுறை பள்ளிக்கு மளிகைப் பொருட்கள் கொடையளிக்கப்பட்டன. இங்குள்ள குழந்தைகளுக்காக இந்தச் சங்கம் 25 சீருடைகள், 80 படுக்கை விரிப்புகளை வழங்கும்.

RID 3100

RC பார்திய கிராம்

அம்ரோகா மாவட்டம் கஜ்ரௌலா-வின் சமூக நல மையத்தில் 70 TB நோயாளிகளுக்கு CMO மற்றும் மாவட்ட TB அலுவலர் முன்னிலையில் ஊட்டச்சத்துப் பொதிகள் வழங்கப்பட்டன.

RID 3120

RC அலகாபாத் சவுத்

பிரயாக்ராஜ் உடான் பள்ளியில் 30 குழந்தைகளுக்குப் புத்தகங்கள், வரையும் பொருட்கள், எழுதுபொருட்கள், உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

RID 3000

RC திருச்சிராப்பள்ளி ஃபீனிக்ஸ்

வடக்குப் பகனூர் புனித அந்தோனி தொடக்கப் பள்ளியில், சங்கத் தலைவர் மணிவேல் அண்ணாதுரை, திட்டத்தலைவர் S தினேஷ் மாணவர்களுடன் கற்றுத்தருவதற்காகப் பசுமைத் தீபாவளியைக் கொண்டாடினார்கள். பள்ளி வளாகத்தில் நடுவதற்கு 150 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

RID 3132

RC சோலாப்பூர் ஸ்மார்ட் சிட்டி

இந்தச் சங்கத்தின் பசுமைப் பணியின் இரண்டாம் கட்டமாக, ஹொட்கி சாய் கோயில் வளாகத்தில் 200 மரக் கன்றுகள் நடப்பட்டன. இந்தச் சங்கத்தின் இலக்கான 500 மரக் கன்றுகளில் இதுவரை 300 கன்றுகளை நடப்பட்டுள்ளன.

RID 3141

RC மும்பை இன்ஸ்பயர்

இந்தச் சங்கம் நடத்திய கண்காட்சியில் 70-க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர் தங்கள் பொருட்களைக் காட்சிப் படுத்தினார்கள்.

B12 – நரம்பு ஆரோக்கியத்திற்கான திறவுகோல்

கீதா மதாய்

சுகாதாரமான, திறமையான உடல் மற்றும் மனதின் செயல்பாட்டிற்கு வைட்டமின்கள் அவசியம் என்பது எல்லோருக்கும் தெரியும். உடலில், ஒவ்வொரு நொடியும் நிகழும் லட்சக்கணக்கான இரசாயன எதிர்வினைகளில் வைட்டமின்கள் இணை என்சைம்கள் மற்றும் துணை காரணிகளாகச் செயல்படுகின்றன. சிலர் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் மேம்படுத்தும் நம்பிக்கையில் அதிக அளவுகளில் வைட்டமின்களை எடுத்துக்கொள்கின்றனர். இது பயனற்றது, ஏனெனில் நீரில் கரையக்கூடிய வைட்டமின்கள் பெரும்பாலும் சிறுநீர் வழியாக வெளியேற்றப்படுகின்றன. மாறாக, கொழுப்பில் கரையக்கூடிய வைட்டமின்கள் உடலில் தங்கி, நச்சு அளவை அடையலாம்.

உடல் வைட்டமின்களை உற்பத்தி செய்வதில்லை. நமது வைட்டமின்களில் பெரும்பாலானவை சமச்சீரான மற்றும் சத்தான உணவில் இருந்து பெறப்படுகின்றன. சைவ உணவு உண்பவர்கள், மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது வலுவூட்டப்படாத திரவ உணவுகளை உண்பவர்கள், கதிர்வீச்சு அல்லது அறுவை சிகிச்சை செய்தவர்கள் மற்றும் வயதானவர்களுக்கு வைட்டமின் குறைபாடுகள் ஏற்படலாம்.

கொழுப்பில் கரையக்கூடிய வைட்டமின்கள் (A, D, E, மற்றும் K) நீண்ட காலத்திற்கு உடலில் சேமிக்கப்படுகின்றன. இதற்கு நேர்மாறாக, நீரில் கரையக்கூடிய வைட்டமின்கள் (பி-காம்ப்ளக்ஸ் குழு மற்றும் வைட்டமின் C) சேமிக்கப்படுவதில்லை. அவை உணவு மூலம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

இந்தக் குழுவில், வைட்டமின் B12 ஒரு விதிவிலக்கு. மற்ற B வைட்டமின்களைப் போலல்லாமல், இது கீரை வகைகள் அல்லது பழங்களில் இல்லாமல், முக்கியமாக இறைச்சி, மீன் மற்றும் பால் பொருட்களில் காணப்படுகிறது. மேலும், பெரும்பாலான B வைட்டமின்கள் வெப்பம் மற்றும் சமையலால் அழிக்கப்பட்டாலும், வைட்டமின் B12 ஒப்பீட்டளவில் நிலையானதாக உள்ளது. உடல் சுமார் 1 முதல் 5 மில்லிகிராம் வைட்டமின் B12-ஐ சேமிக்க முடியும், எனவே குறைபாட்டின் அறிகுறிகள் தோன்ற பல ஆண்டுகள் ஆகலாம்.

வைட்டமின் B12 இன் உறிஞ்சுதல் மற்ற நீரில் கரையக்கூடிய வைட்டமின்களை விட மிகவும் சிக்கலானது. இந்தச் செயல்முறை வாயில் தொடங்குகிறது, அங்கு வைட்டமின் B12 உமிழ்நீரில் உள்ள ஹேப்டோகோரின் எனப்படும் ஒரு புரதத்துடன் பிணைகிறது, பின்னர் வயிற்றின் சுவரணுக்களால் சுரக்கப்படும் உள்ளார்ந்த காரணி எனப்படும் மற்றொரு புரதத்துடன் பிணைகிறது. இந்த புதிய கூட்டுப்பொருள் பின்னர் சிறுகுடலின் இறுதிப் பகுதியான இலியம்-இல் உறிஞ்சப்படுகிறது. வைட்டமின் B12 வலுவூட்டப்பட்ட உணவுகளில் சேர்க்கப்படும்போது அல்லது சப்ளிமெண்ட்டாக எடுத்துக்கொள்ளப்படும்போது, அது மிகவும் நேரடியாக உறிஞ்சப்படலாம், ஆனால் அது இன்னும் உள்ளார்ந்த காரணியுடன் பிணைக்கப்பட வேண்டும்.

வைட்டமின் B12 குறைபாடு, போதுமான அளவு இல்லாத உணவின் காரணமாக ஏற்படலாம், குறிப்பாக விலங்கு பொருட்கள் இல்லாத உணவின் காரணமாக. சில நேரங்களில் வாய் உலர்ந்து போதல் உமிழ்நீரைக் குறைத்து, உறிஞ்சுவதில் தலையிடலாம். உள்ளார்ந்த காரணியை உற்பத்தி செய்யும் இரைப்பை சுரப்பிகள் சேதமடைந்து ஃபைப்ரஸ்

திசுக்களால் மாற்றப்படலாம். இது தைராய்டு கோளாறுகள் அல்லது ஆட்டோ இம்யூன் நோய்களிலும் ஏற்படலாம். நீண்டகால ஹெலிகோபாக்டர் பைலோரி தொற்று, அத்துடன் புகையிலை அல்லது மது வழக்கமாகப் பயன்படுத்துவதும் உறிஞ்சுதல் அளவைக் குறைக்கலாம். குடல் நோய்கள் அல்லது வயிற்றின் அல்லது சிறுகுடலின் பகுதி நீக்கம், பேண்டிங் அல்லது பைபாஸ் போன்ற அறுவை சிகிச்சை முறைகள், அல்லது எடை குறைப்பு அறுவை சிகிச்சைகள், வைட்டமின் B12 அளவுகள் குறைவதற்கு மேலும் பங்களிக்கலாம்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த மிகவும் பயன்படுத்தப்படும் மருந்துகளில் மெட்ஃபார்மின் ஒன்றாகும். ஓமியோபிரஸோல் மற்றும் பான்டோபிரஸோல் போன்ற புரோட்டான் பம்ப் இன்ஹிபிட்டர்கள் மற்றும் சிமெடிடின், ரனிடிடின், மற்றும் ஃபாமோடிடின் போன்ற ஆன்டாசிட்கள் பரவலாக பரிந்துரைக்கப்படுகின்றன. இந்த மருந்துகளுடன், ஃபெனிடோயின் மற்றும் ஃபீனோபார்பிட்டல் போன்ற சில வலிப்புத் தடுப்பு மருந்துகளும் வைட்டமின் B12 அளவைக் குறைக்கலாம்.

வைட்டமின் B12 தேவை குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு சுமார் 0.4 mcg ஆகவும், பெரியவர்களுக்கு ஒரு நாளைக்கு 2.4 mcg ஆகவும் உள்ளது. கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு ஒரு நாளைக்கு சுமார் 2.8 mcg என்ற அளவில் தேவைப்படுகிறது. வைட்டமின் B12 நிறைந்த உணவுகளில் ஈரல், மாட்டிறைச்சி, மீன், முட்டை (குறிப்பாக மஞ்சள் கரு), மற்றும் தயிர், பனீர் மற்றும் சீஸ் போன்ற பால் பொருட்கள் அடங்கும்.

அனைத்து செல்களும் DNA-வைக் கொண்டுள்ளன, மேலும் பிரிவடையும் அனைத்து செல்களிலும் DNA-வை உற்பத்தி செய்வதற்கு வைட்டமின் B12 ஒரு முக்கிய சத்தாகும். இது இரத்த சிவப்பணுக்கள் உருவாவதற்கு அவசியமானது. இதன் குறைபாடு ஒரு வகை இரத்த சோகைக்கு வழிவகுக்கும், இதில் இரத்த சிவப்பணுக்கள் வழக்கத்தை விட பெரியதாகவும், குறைவான திறனுடனும் இருக்கும் (மெகாலோபிளாஸ்டிக் அனீமியா). நரம்புகளும் பாதிக்கப்படுகின்றன, ஏனெனில் B12 அவற்றை காப்பிடும் பாதுகாப்பு மையலின் உறையைப் பராமரிக்கத் தேவைப்படுகிறது, மேலும் நரம்புகள் தொடர்பு கொள்ள அனுமதிக்கும் நியூரோடிரான்ஸ்மிட்டர்கள் தொகுப்புக்கு இது மிக முக்கியமானது. போதுமான B12 இல்லாவிட்டால், நரம்புகள் சேதமடையக்கூடும், இதனால் உணர்வின்மை, கூச்ச உணர்வு மற்றும் பலவீனம் போன்ற அறிகுறிகள் தோன்றும். கடுமையான குறைபாடு முதுகுத் தண்டு சேதம், சமநிலை இழப்பு, அறிவாற்றல் குறைபாடு மற்றும் மறதி உள்ளிட்ட மிகவும் தீவிரமான நரம்பியல் பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும்.

வைட்டமின் B12 குறைபாடு இருக்கலாம் என்று அறிகுறிகள் தெரிவித்தால், இரத்த பரிசோதனை செய்யப்பட வேண்டும். சுமார் 300 pg/ml என்ற அளவு சாதாரணமாகக் கருதப்படுகிறது. குறைபாடு கண்டறியப்பட்டால், அடிப்படை காரணத்தைக் கண்டறிந்து, அதற்கான சிகிச்சை மூலம் சரிசெய்ய வேண்டும். குறைந்த B12 அளவுகளுக்கு பங்களித்தாலும், மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் மருந்துகளை நிறுத்திவிடக் கூடாது. காரணத்தை சரிசெய்ய முடியாதபோது, மாற்று சிகிச்சை தொடங்கப்பட வேண்டும். உறிஞ்சுதல் சரியாக இருக்கும் லேசான நிகழ்வுகளில், 250-1000 mcg கொண்ட வைட்டமின் B12 மாத்திரைகளை தினமும் எடுத்துக் கொள்ளலாம். இவை தனியாகவோ அல்லது ஃபோலிக் அமிலம் மற்றும் பிற B-காம்ப்ளக்ஸ் வைட்டமின்களுடன் இணைந்தோ பரிந்துரைக்கப்படலாம். குறைபாடு கடுமையாக இருந்தால் அல்லது உறிஞ்சுதல் பாதிக்கப்பட்டு இருந்தால், ஒரு வாரத்திற்கு தினமும் வைட்டமின் B12 ஊசிகள், அதைத் தொடர்ந்து ஆறு வாரங்களுக்கு வாராந்திர அளவுகளில் கொடுக்கப்படலாம். அதன் பிறகு ஒருவரின் வாழ்நாள் முழுவதும் மாதாந்திர பராமரிப்பு ஊசிகள் தேவைப்படலாம். சிகிச்சையின் மூன்று மாதங்களுக்குப் பிறகு இரத்த அளவுகள் மீண்டும் பரிசோதிக்கப்பட வேண்டும்.

நாம் வயதாகும்போது, வைட்டமின் குறைபாடுகள் படிப்படியாக உருவாகலாம் மற்றும் பெரும்பாலும் கவனிக்கப்படாமல் போகலாம். இந்த குறைபாடுகள் சோர்வு மற்றும் வயது தொடர்பான நினைவாற்றல் இழப்பு போன்ற அறிகுறிகளை மோசமாக்கலாம். நல்ல செய்தி என்னவென்றால், சரியான நேரத்தில் சரிசெய்வதன் மூலம் இவை பெரும்பாலும் குணப்படுத்தக்கூடியவை.

எழுத்தாளர் ஒரு குழந்தை மருத்துவர் மற்றும் Staying Healthy in Modern India என்ற புத்தகத்தின் ஆசிரியர் ஆவார்.

Rotary PEOPLE OF ACTION

ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

மொராதாபாதில் புதிய இரத்த வங்கி

மொராதாபாத் கிரெஸ்ட் மருத்துவமனையில் $50,000 பன்னாட்டு நல்கையின் வழியாக RC மொராதாபாத் ஈஸ்ட் அமைத்துள்ள, பகுதிகளைப் பிரிக்கும் இரத்த வங்கியை DG நிதின் அகர்வால் தொடங்கிவைத்தார்.

இந்த நிகழ்வின்போது சங்க உறுப்பினர்கள் ஐவர் இரத்தம் வழங்கினார்கள். இந்த வளாகம் ஒரு யூனிட் இரத்தத்திலிருந்து RBC, இரத்தத் தட்டுகள், பிளாஸ்மா என்ற மூன்று இரத்தப் பகுதிகளைப் பிரிக்கும். இவை மூன்று உயிர்களைக் காப்பாற்ற உதவலாம்.■

RID 3100 DG *நிதின் அகர்வால் (வலப்புறமிருந்து மூன்றாவது), அவருக்கு வலப்புறமாக* DRFC *லலித் மோகன் குப்தா, மொராதாபாத் புதிய இரத்த வங்கியில்.*

கட்சிரோலி பழங்குடியின மக்களுக்குக் கண்புரை அறுவைச்சிகிச்சை

கட்சிரோலி பழங்குடியினப் பகுதிகளைச் சேர்ந்த நோயாளிகளுக்குத் தீபாவளி இனிப்புகள் வழங்கப்படுகின்றன.

RC நாக்பூர் சவுத் ஈஸ்ட், RID 3030, நடத்திவரும் மருத்துவத் திட்டத்தின்கீழ், நக்சல் பாதிப்புக்குள்ளான பழங்குடியினப் பகுதியான கட்சிரோலியைச் சேர்ந்த 35 நோயாளிகளுக்கு நாக்பூர் ஷாலினிதாய் மெகெ மருத்துவமனையில் கண் புரை அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது.

இந்த ரோட்டரி ஆண்டில் இதுவரை இதன் மூலம் பலன் பெற்றோர் எண்ணிக்கை 194. இந்தச்சங்கம் நோயாளிகளுக்கு இலவசப் போக்குவரத்து வழங்குகிறது, மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சையின் போதும் அதற்கு முன்னும் பின்னும் தங்கும் பராமரிப்புச் செலவுகளை ஏற்றுக்கொள்கிறது.■

புணே ரோட்டரியன்கள் மொரீசியஸ் பயணம்

RID 3131-ஐ சேர்ந்த 12 உறுப்பினர்கள் டாக்டர் மதுரா விப்ரா தலைமையில் ரோட்டரி நட்புப் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் மொரீசியஸுக்கு ஐந்து நாள் பயணமாகச் சென்றார்கள். RC பூனா உறுப்பினர்களான PDG தீபக் ஷிகர்பூர், டாக்டர் ஃபரீதா இரானி, டாக்டர் கமல் பாலியா சங்கக் கொடியை மொரீசியஸ் அதிபர் தரம்பீர் கொகோலிடம் வழங்கினார்கள். அவர் தன் இந்தியப் பயணத்தின், இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுடன் உரையாடியதன் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டார்.

RC-கள் பூனா, கட்கி, புணே காந்தி பவன், புணே அமனோரா-வைச் சேர்ந்த உறுப்பினர்கள் RC ஹெளடெ ரிவெ-யின் வாரக் கூட்டம் ஒன்றிலும் கலந்துகொண்டார்கள்.■

மொரீசியஸுக்கான RFE வருகையின்போது மொரீசியஸ் அதிபர் தரம்பீர் கொகோலுடன் (நடுவில்) RID 3131 ரோட்டரியன்கள். PDG தீபக் ஷிகர்பூர் பின் வரிசையில் (நடுவில்) உள்ளார்.

சிறுநீரக நோயாளிகளுக்கு டயாலிசிஸ் பொதிகள்

ஏழை நோயாளிகளுக்கு டயாலிசிஸ் பொதிகளை வழங்கும் RC ஆலப்பி கிரேட்டர், RID 3211, மருத்துவத்திட்டத்தை ஆலப்புழா மாவட்ட ஆட்சித்தலைவர் அலெக்ஸ் வர்கீஸ் தொடங்கிவைத்தார். இந்தச்சங்கம் ஆண்டுதோறும் ரூ.3 லட்சம் செலவில், சிறுநீரக நோய் கொண்ட 20 பேருக்கு மாதந்தோறும் 20 டயாலிசிஸ் பொதிகளை வழங்கும்.

தொடக்க விழாவின் போது வர்கீஸ் முதல் பொதியை ஒரு நோயாளிக்கு வழங்கினார், மீதிப் பொதிகளை வாராந்திரச் சங்கக் கூட்டத்தின் போது சங்கத் தலைவர் நசீர் புண்ணக்கல் பலன் பெறுவோருக்கு வழங்கினார்.■

ஆலப்புழா மாவட்ட ஆட்சித் தலைவர் அலெக்ஸ் வர்கீஸ் (இடப்புறத்திலிருந்து மூன்றாவது) ஒருவருக்கு டயாலிசிஸ் பொதி வழங்குகிறார். RC ஆலப்பி கிரேட்டர் தலைவர் நசீர் புண்ணக்கல் அவருக்கு வலப்புறம் உள்ளார்.

TRF Star Performers (2024–25)

Trophy	Zone 4	Zone 5
Highest Contribution to TRF Annual Fund	Chetan Desai, RID 3141	Meerankhan Saleem, RID 3212
Highest Contribution to TRF Endowment Fund	Chetan Desai, RID 3141	Meerankhan Saleem, RID 3212
Highest Contribution to TRF Polio Fund	Dinesh Mehta, RID 3142	Meerankhan Saleem, RID 3212
Highest per capita APF Contribution to TRF	Dinesh Mehta, RID 3142	Meerankhan Saleem, RID 3212
Highest Total Contribution to TRF	Chetan Desai, RID 3141	Saravanan N S, RID 3234
Highest Donor Participation (% wise)	Tushar Shah, RID 3060	Subbarayan Baskaran, RID 2981
100% Club Participation for TRF Giving	Mohan Parashar, RID 3055 Tushar Shah, RID 3060 Chetan Desai, RID 3141 Dinesh Mehta, RID 3142	Sivakumar V, RID 2982 Suresh Babu S, RID 3203 Santhosh Sreedhar RID 3204 Meerankhan Saleem, RID 3212 Sushena Ranatunga, RID 3220
Highest Giving Club towards TRF Polio Plus Fund	President Chetna Singh RC Hiranandani Ivan, RID 3142	President V N M A K Rajivan RC Virudhunagar, RID 3212

RID 3234 PDG N S சரவணன் மற்றும் பாரதி RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோவிடம் இருந்து விருதைப் பெறுகிறார்கள். மேலும் (இடமிருந்து): PRID A S வெங்கடேஷ், RID K P நாகேஷ், ரவி சுந்தரேசன், PRID ராஜு சுப்ரமணியன், TRF அறங்காவலர் ஆன்-பிரிட் அசெபோல், குமார் ராஜேந்திரன், RID M முருகானந்தம், PDG-கள் J ஸ்ரீதர் மற்றும் மாதவ் சந்திரன். PDRR சசிகுமார் மற்றும் DRRE விக்னேஷ் சந்திரன் அமர்ந்துள்ளனர்.

அறங்காவலர் ஆன்-பிரிட் அசெபோலிடமிருந்து RID 3141 PDG சேத்தன் தேசாய் விருது பெறுகிறார். மேலும் RID நாகேஷ், PRID அனிருதா ராய்சௌத்ரி, தலைவர் அரெஸ்ஸோ மற்றும் ஜ்வாலா தேசாய் உள்ளனர்.

RID 3291 PDG கிருஷ்ணேந்து குப்தா மற்றும் சிம்ரன் உடன் (இடமிருந்து) RID நாகேஷ், PRID ராய்சௌத்ரி, தலைவர் அரேஸ்ஸோ, RID முருகானந்தம் மற்றும் அறங்காவலர் ஆன்-பிரிட் அசெபோல்.

— Zones 4, 5, 6 and 7

Trophy	Zone 6	Zone 7
Highest Contribution to TRF Annual Fund	Sukhminder Singh, RID 3240	Shital Shah, RID 3131
Highest Contribution to TRF Endowment Fund	Krishnendu Gupta, RID 3291	Sharad Pai, RID 3170
Highest Contribution to TRF Polio Fund	Sukhminder Singh, RID 3240	Malla Venkateswara Rao, RID 3020
Highest per capita APF Contribution to TRF	Sukhminder Singh, RID 3240	Shital Shah, RID 3131
Highest Total Contribution to TRF	Krishnendu Gupta, RID 3291	Shital Shah, RID 3131
Highest Donor Participation (% wise)	Bipin Chachan, RID 3250	Vikram Datta, RID 3181
100% Club Participation for TRF Giving	Sukhminder Singh, RID 3240 Bipin Chachan, RID 3250	M Venkateswara Rao, RID 3020 Shital Shah, RID 3131 Suresh Saboo, RID 3132 Sharath Choudary, RID 3150 Sharad Pai, RID 3170 Vikram Datta, RID 3181 Mahadev Prasad, RID 3192
Highest Giving Club towards TRF Polio Plus Fund	President Milan Kumar K C RC Pashupati Kathmandu RID 3292	President G Vinod Kumar RC Vizianagaram, RID 3020

Zone 4, 5, 6 & 7 (India, Nepal and Sri Lanka)	RI District
Nitish Laharry Trophy for Highest Total Contribution to TRF	3141
Binota and Kalyan Banerjee Trophy for Highest Endowment Fund Contribution	3291
Usha and Raja Saboo Trophy for Highest Annual Fund Contribution to TRF	3131
Highest Polio Fund Contribution to TRF	3020
District with highest new AKS members	3141

RID 3170 PDG *ஷரத் பாய் தனது விருதை அறங்காவலர் ஆன்-பிரிட் அசெபோல் மற்றும்* RI *துணைத் தலைவர் அலைன் வான் டி போயல் ஆகியோரிடமிருந்து பெறுகிறார். தலைவர் அரேஸ்ஸோ,* DGE *லென்னி டா கோஸ்டா மற்றும்* RID *முருகானந்தம் ஆகியோரும் உள்ளனர்.*

RID 3212 PDG *மீரான்கான் சலீம் (வலது) தலைவர் அரேஸோவிடம் இருந்து தனது விருதைப் பெறுகிறார். இடமிருந்து:* DG J*தினேஷ் பாபு,* RID *நாகேஷ் மற்றும்* PRID *சுப்ரமணியன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.*

Membership and Public Image Awards in the next issue.

இயற்கையோடு இணக்கமாக

இயற்கையோடு இணக்கமாக வாழ்வதன் அசாதாரணமான, ஆழமான அனுபவத்தின் ஒரு பகுதியாக இருங்கள், மேலும் விவேகமற்ற வளர்ச்சியின் விளைவுகளைக் கவனியுங்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் துணைக்கண்டத்தின் ஒளிரும் இலக்கிய நட்சத்திரமாகப் பலர் கருதும் சதாத் ஹசன் மண்ட்டோ எழுதிய ‘டோபா டேக் சிங்’ என்ற சிறுகதையைப் படித்தேன். ஈர்க்கப்பட்ட நான், அதன் மூல உருது வடிவத்தின் ஒலிப்பதிப்பைத் தேடிப்பிடித்து கேட்டு, மேலும் ஆச்சரியமடைந்தேன். தற்போது பாகிஸ்தானின் உள்ள மனநல காப்பகத்தில், பிரிவினைக் காலத்தில் அமைக்கப்பட்ட இந்தக் கதை, அந்த மாபெரும் பிரிவின் தாக்கத்தை, டோபா டேக் சிங் கிராமத்தைச் சேர்ந்த பிஷன் சிங் என்ற கைதியை மையமாகக் கொண்டு ஆராய்கிறது. அவர் 15 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப் பட்டுள்ளார், அத்தனை ஆண்டுகளும் பெரும்பாலும் அமைதியாகவே இருந்துள்ளார். ஆனால், அதிகாரிகளால் கைதிகளை பிரிக்க முடிவு செய்து, முஸ்லிம்கள் ஒரு பாகிஸ்தானிய காப்பகத்திற்கும், இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் இந்தியாவில் உள்ள ஒரு காப்பகத்திற்கும் அனுப்பப் படவுள்ள போது, பிஷன் சிங்கிற்கு ஒரே ஒரு கேள்வி தான் எழுகிறது: டோபா டேக் சிங் இந்தியாவில் இருக்கிறதா அல்லது பாகிஸ்தானில் இருக்கிறதா?

இந்த சிறுகதையின் சுருக்கம், மண்ட்டோ வெளிப்படுத்தும் நுணுக்கங்களையும், நுண்ணறிவுகளையும் பிரதிபலிக்கத் தவறுகிறது. அன்புள்ள வாசகர்களே, எனது வேண்டுகோள்: தயவுசெய்து இந்தக் கதையைத் தேடிப் படியுங்கள். அது இணையத்தில்

சந்தியா ராவ்

உங்களுக்குக் கிடைக்கும். நான் அதை, நகரங்களைப் பற்றிய பெங்குவின் நிறுவனத்தின் சிறந்த தொடரான சிட்டி ஆஃப் சின் அண்ட் ஸ்ப்ளெண்டர்: ரைட்டிங்ஸ் ஆன் லாகூர் என்ற புத்தகத்தில் அச்சு வடிவில் வைத்துள்ளேன். இந்த பதிப்பு, லாகூரில் வழக்கறிஞராகத் தொடங்கி, பின்னர் ஒரு துணிச்சலான பத்திரிகையாளர், எழுத்தாளர் மற்றும் வரலாற்றாசிரியராக வளர்ந்த, ட்ரைன் டு பாகிஸ்தான் என்ற தனது மிகவும் பிரபலமான நாவலுக்காக அறியப்பட்ட, குஷ்வந்த் சிங் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அவர் தி இல்லஸ்ட்ரேட்டெட் வீக்லி ஆஃப் இந்தியா-வை வெற்றிகரமாகத் திருத்தி, வித் மாலிஸ் டுவோர்ட்ஸ் ஒன் ஆண்ட் ஆல் என்ற மிகவும் பிரபலமான கட்டுரையை எழுதினார்.



இந்தக் கதையை நினைவு கூர்வதற்குக் காரணம், இன்று நான் அறிமுகப்படுத்த விரும்பும் புத்தகம் தான். இது முதலில் மலையாளத்தில் ஷீலா டோமி என்பவரால் எழுதப்பட்டு, ஜெயஸ்ரீ கலாத்தில் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்ட வல்லி என்ற புத்தகம். தி வைல்டிங்க்ஸ் என்ற அற்புதமான புத்தகத்தின் ஆசிரியர் எழுத்தாளர் நீலஞ்சனா S ராய் இந்தப் புத்தகத்தைப் பற்றிக் கூறுவதைப் படியுங்கள்: “...இது பூமியின் எழுச்சியூட்டும் மற்றும் மறக்க முடியாத பாடல், வயநாட்டின் நான்கு தலைமுறைகளின் அற்புதமான மற்றும் மனதை உலுக்கும் கதை, ஆனால் காடு மற்றும் நிலத்தின் முணுமுணுக்கும், ஆனால் எப்போதும் மீண்டெழும் குரல்களால் துளைக்கப்பட்ட ஒரு புத்தகமும் கூட.” மற்றொரு விருது பெற்ற எழுத்தாளர் K R மீரா, ஆராச்சார் என்ற புத்தகத்தின் ஆசிரியர், இந்த மொழிபெயர்ப்பை “பசுமையானது மற்றும் செழிப்பானது” என்று அழைக்கிறார். மலையாளத்தில், வல்லி பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது: நிலம், தாவரம், இளம் பெண், மற்றும் தினசரி கூலி, மேலும் இது கேரளாவின் பிரபலமான சுற்றுலாத் தலமான வயநாட்டிற்கான ஒரு உருவகமாக ஆசிரியரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நான் மதிக்கும் ஒரு நண்பரால் இந்தப் புத்தகம் பரிந்துரைக்கப்பட்டது, ஆனால் விவரிக்க முடியாத சில காரணங்களுக்காக, நான் அதைத் தொடங்க சில முயற்சிகள் தேவைப்பட்டன. ஆனால் நாவலுக்குள் நுழைந்தவுடன், என்னால் அதைக் கீழே வைக்க முடியவில்லை. ஒரு நேரத்தில், மனிதரும் பூமியும் இடையிலான அந்த வலுவான இணைப்பு, ‘வீடு’ என்ற உணர்வை மனிதர்கள் – உண்மையில் எல்லா உயிரினங்களும் – எப்படி அனுபவிக்கிறார்கள் என்பதை எனக்கு புரிய வைத்தது. அப்போதுதான் டோபா டேக் சிங் என் மனதில் பளிச்சிட்டது, நான் கதையை மீண்டும் படித்தேன்.

வல்லி ஒரு ஆசிரியர் தம்பதியினருடன் தொடங்குகிறது. காடுகள் மற்றும் பெரணிகள், தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள், மற்றும் இயற்கை வாழ்விடத்தின் வழிகளுடன் பின்னிப் பிணைந்திருக்கும் பூர்வீக மக்களிடையே குடியேறவும் வாழவும் அவர்கள் வயநாட்டிற்கு (அப்போது பயல்நாடு அல்லது வனநாடு என்று அழைக்கப்பட்டது) வருகின்றனர். காலப்போக்கில், மனிதர்களையும் இயற்கையையும் ஒரே மாதிரியாக வடிவமைத்து அசைக்கும் மாற்றங்கள் நிகழ்கின்றன. எளிமையாகச் சொல்ல வேண்டுமென்றால், இதுதான்

வல்லி-யின் உலகம் கட்டமைக்கப்பட்டுள்ள அடித்தளம். ஆனால் நிச்சயமாக, வாழ்க்கையில் இருப்பது போல, இந்த நாவலிலும், பல தலைமுறைகளாகக் கதை விரியும் போது, பல அடுக்குகளும் அவிழ்கின்றன. இறுதியில் அந்தப் பகுதி இன்று இருக்கும் சுற்றுலாத் தலமாக மாறுகிறது. இது பெரும்பாலும் வெளியூர்களில் இருந்து வந்த குடியேறியவர்களுக்கு வளர்ச்சி மற்றும் செழிப்பை வழங்குகிறது மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு நலன்களும் வசதிகளும் உருவாகின்றன.

ஆசிரியர் தம்பதியினரின் மகள் சூசன் எழுதிய நாட்குறிப்புகள் மூலம் கதை சொல்லப்படுகிறது. இதை அவளது மகள் டெஸ்ஸா படிக்கும் போது அவை வெளிப் படுகின்றன. கதை தொன்மத்திற்கும் யதார்த்தத்திற்கும், தொட்டுணரக் கூடியதற்கும் தொட்டுணர முடியாததற்கும், மனித மற்றும் இயற்கை இருப்புக்கும் இடையில் மாறி மாறிச் செல்லும்போதும், காலமானது கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையில் பறக்கிறது. இலக்கியத்தில் மேஜிக் ரியலிசம் என்ற சொல் நமக்கு நன்கு தெரியும், இது பொதுவாக தென் அமெரிக்க எழுத்தாளர்களுடன் தொடர்புடையது. வல்லி அந்தப் பெயரைச் சுமக்கலாம், ஆனால் அது உருவகிக்கும் வயநாடு உண்மையாக இருந்தாலும், மந்திரத்தால் நிறைந்துள்ளது. இதன் எழுத்து பிரகாசமானது, கவிதை நிறைந்தது, மேலும் ஒவ்வொரு அனுபவமும் எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் மற்றும் வாசகரால் உணரப்படுகிறது.

இருப்பினும், இத்தகைய புத்தகம் தீவிர புத்தகப் புழுக்களுக்கு கூட எளிதான வாசிப்பாக இருக்காது. உதாரணமாக, நான் பரிந்துரைத்தவுடன் தனது கின்டிலில் வல்லி-யைப் பதிவிறக்கம் செய்த ஒரு நண்பர் – அவர் ஆழமாகவும் தொடர்ந்து வாசிக்கும் ஒரு புத்தகப் புழு – சுமார் 200 பக்கங்களுக்குப் பிறகு அதனை

கைவிடத் தயாராக இருந்தார். புத்தகத்தைப் பற்றி விவாதிக்க அவர் அழைத்த போது, “எனக்கு புரிய வில்லை!” என்று சொன்னார், நான் இவ்வளவு ரசித்ததைப் பார்த்ததால், தான் என்ன தவறவிட்டேன் என்று கேட்டார். புத்தகங்களை விரும்பு பவர்களின் விஷயம் அதுதான்: அவர்கள் கைவிட மாட்டார்கள், என்ன, ஏன், எப்படி என்று தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். தனிப்பட்ட விருப்பங்கள் மற்றும் வெறுப்புகள் அவர்களை மூழ்கடிக்க அவர்கள் அனுமதிப்பதில்லை.

நாங்கள் சிறிது நேரம் அதைப் பற்றிப் விவாதித்த பிறகு, வல்லி-யின் ஓரிரு நன்கு எழுதப்பட்ட விமர்சனங்களைப் படிப்பது சிறந்தது என்று முடிவு செய்தோம். கதை சுருக்கத்திற்காக அல்ல, ஒரு உணர்வுக்காக, குறிப்புகளுக்காக, வழிகாட்டுதலுக்காக. அதற்குப் பிறகு, கதையின் ஓட்டத்தையே நம்மை வழிநடத்த அனுமதிக்க வேண்டும், கதைக்களத்தை முன்கூட்டியே புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டாம் என்று நினைத்தோம். “நான் கதைக் களத்தில் தெளிவைத் தேடுகிறேன்” என்று அவர் சொன்னார். சிறிது நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை முயற்சி செய்ய அவர் முடிவு செய்தார், மேலும் தெளிவாக வரையறுக்கப்பட்ட கதைக் களத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று முடிவு செய்தார். இப்போது அவர் தனது வாசிப்பைக் கட்டுப்படுத்த முயற்சிக்காமல், நாவலில் உருவாக்கப்பட்ட உலகம் அவரைக் கட்டுப்படுத்த அனுமதிக்க முடிவு செய்திருப்பதால், அவர் அனுபவத்தை ரசிக்கத் தொடங்குவார் என்று நம்புகிறேன்.

மேலும், எதிர்பாராத விதமாக, இதற்கு முன் ஒருபோதும் புத்தகப் பரிந்துரை செய்யாத ஒருவரிடமிருந்து வாட்ஸ்அப்பில் ஒரு பரிந்துரையைப் பெற்றேன்: அது இரா சக்ஸேனா எழுதிய இன்சைட் ஃப்யூமிங் ஃபாரெஸ்ட்ஸ். இது பஸ்தரின் சால் காடுகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ளது, மேலும் விளம்பரத்தின்படி, இயற்கையின் சுரண்டலுக்கு மத்தியில் அமைக்கப்பட்ட ஒரு சாகச கதையாகும். இது முதன்மையாக இளம் வாசகர்களுக்காக எழுதப்பட்டது என்று நான் நினைக்கிறேன், மேலும் அந்த வகையில், வல்லி-யிலிருந்து வேறுபட்டதாக இருக்க வாய்ப்புள்ளது. இருப்பினும், என் நினைவுக்கு வந்த மற்றொரு இளம் வயதினருக்கான புத்தகம், தேவாஷிஷ் மக்கிஜா எழுதிய ஊங்கா (‘எ சென்ஸ் ஆஃப் எ மீனிங்,’ வர்ட்ஸ்வேர்ல்ட், நவம்பர் 2022), இது இயற்கை வளங்கள் மற்றும் பழங்குடி மக்களின் சுரண்டலைப் பற்றிய ஒரு கடுமையான விமர்சனம். இதன் மிகவும் வெளிப்படையான தொடர்பு, ஆபிரகாம் வர்கீஸின் ‘தி கோவனன்ட் ஆஃப் வாட்டர்’ (‘எ சாலிட், ஆப்சார்பிங் ரீட்,’ வர்ட்ஸ்வேர்ல்ட், ஜூலை 2023) உடன் தான்.

அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளை ஒரு மூலோபாய மற்றும் பொருளாதார மையமாக மேம்படுத்தும் திட்டத்தைப் பார்த்தாலே வல்லி நம் வீட்டுப் பிரச்சனையைப் பற்றி பேசுகிறது என்பதை உணரலாம். அத்தகைய ஒரு திட்டம், பிராந்தியத்தின் சுற்றுச்சூழல் அமைப்பையும், அங்குள்ள மக்களின் இருப்பு நிலையையும் அழித்துவிடும், இவை இரண்டுமே ஈடுசெய்ய முடியாதவை என்பதை அனைவரும் அறிவார்கள். வல்லி ஒரு புனைகதையாக இருக்கலாம், ஆனால், நாவலில் உள்ள கதாபாத்திரங்களில் ஒருவர் கூறுவது போல: வரலாற்றை விட கதைகளில் அதிக உண்மை உள்ளது. ஏனெனில் கதை சொல்பவர்கள் தங்கள் இதயத்தில் உள்ள உண்மையை தாங்கள் சொல்லும் கதைக்கு கொண்டு வர கடமைப்பட்டுள்ளனர். வரலாற்றாசிரியர்கள் அப்படியில்லை. அவர்கள் எழுதச் சொல்பவர்களின் நலன்களுக்கு உடன்பட வேண்டிய கட்டாயம் உண்டு. இது நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

Go Green

காலநிலை மாற்றத்தை ஏற்பது காலத்தின் கட்டாயம்

ப்ரீதி மெஹ்ரா

காலநிலையை நம்மால் மாற்றியமைக்க முடியாத நிலையில் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். காலநிலை மாற்றம் பேரழிவை ஏற்படுத்தும்போது, நாடுகள் ஒன்று சேர்ந்து ஏதாவது செய்ய வேண்டும் என்று அங்கீகரிக்கும் நிலைக்கு தள்ளப்படும்போது உலகம் அதைத்தான் நம்பத் தொடங்கியது. இதன் பொருள் உலகில் நாம் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது என்பதுதான்.

கடந்த மாதம் பிரேசில், காலநிலை மாற்றம் தொடர்பான கட்சிகளின் மாநாட்டை (COP30) நடத்தியது. இதில் உலகம் முழுவதும் உள்ள நாடுகள் உலகளாவிய வெப்பநிலை மற்றும் பருவநிலையால் ஏற்படும் மோசமான சூழ்நிலை மற்றும் பேரழிவைத் தடுக்க என்ன செய்கின்றன என்று விவாதிக்கப்பட்டது. இந்தியாவும் இந்த மாநாட்டில் பங்கேற்றது. எளிமையாகச் சொன்னால், காலநிலை மாற்றம் மனிதச் செயல்களால் ஏற்படுகிறது. மேலும் இது நீண்டகாலத்திற்கு குடிமக்கள், தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் ஆரோக்கியத்தை மோசமாக பாதிக்கிறது. இவற்றால் பூமிக்கு மீளமுடியாத சேதம் ஏற்படுகிறது என்பதுதான் கவலைக்குரிய விஷயமாகும்.

இந்தியாவில்கூட காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை நாம் உணர்ந்திருக்கிறோம். கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு பருவநிலை மாற்றங்களை நாம் கண்டிக்கிறோம். முன் எப்போதும் இல்லாத நிலச்சரிவுகள், உருகும் பனிப்பாறைகள், அதிகரித்த வெப்பம், வெள்ளம், மேகவெடிப்பு, புயல், சூறாவளி மற்றும் காற்று மாசுபடுதல் ஆகியவை இதில் அடங்கும். பூமி வெப்பமடையும்போதுதான் இவை ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய ஏழாவது நாடாக இந்தியா மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த பேரிடர்கள் நமது மக்களுக்கு சொல்லமுடியாத துயரத்தை அளிக்கின்றன. மேலும் எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும். எனவே, குடிமக்கள் என்கிற முறையில் நாம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டாமா?

காலநிலை மாற்றத்தை ஏற்றுக்கொள்வதுதான் ஒரே வழி. சுருக்கமாகச் சொன்னால், பேரிடர்களை எதிர்காள்ள நாம் தயாராக இருக்க வேண்டும் மற்றும் எதிர்காலத்தில் காலநிலை மாற்ற நெருக்கடிகளை சந்திக்கும் அளவுக்கு நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை குறைப்பதற்கு நாம் எடுக்கும் நடவடிக்கை, நாம் வசிக்கும் இடத்தை பொறுத்ததாகும். நாம் மலைப் பகுதியில் வசிப்பவர்கள் என்றால் செய்வதும் கடலுக்கு அருகில் வசிப்பவர்கள் என்றால் செய்ய வேண்டியதும் மாறுபட்டு இருக்கும். இதேபோலத்தான் நகரத்தில் உயரமான அடுக்கு மாடி குடியிருப்பில், பெரிய பங்களாவில், குடிலில், சேரி அல்லது கிராமப்பகுதிகளில் உள்ள குடிசைகளில் வசிப்பவர்களுக்கும் இது பொருந்தும். காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ள அல்லது அவற்றுக்கு ஏற்ப எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளவே இந்த கட்டுரை.

மலைகளில் வாழ்வதிலிருந்து ஆரம்பிக்கலாம். குளிர்ந்த காலநிலை மற்றும் அழகான காட்சிகளை பாராட்டினாலும், உயரமான பகுதிகளில் காலநிலையால் ஏற்படும் பனிப்பாறைச் சரிவுகளும், நிலச்சரிவுகளும் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை.

நிலச்சரிவுகளை தடுத்து நிறுத்த முக்கியச் செயல்பாடு என்னவென்றால் மலைச் சரிவுகளை பசுமையாக்குவதும், மண்ணில் வேரூன்றிய மரங்களை வளர்ப்பதும் ஆகும். இவை நீரோட்டம் மற்றும் நுண்ணுயிர்சத்துக்களை தக்கவைத்துக் கொள்ளவும் மற்றும் மலைச் சரிவில் மண் அரிமானத்தை தடுக்கவும் உதவும். மேலும்

நீர்நிலைகள் உயிர்வாழ்வதை உறுதிசெய்யும்.

மலைப் பகுதிகளில் வாழ்வது என்பது, கோடை, குளிர் மற்றும் மழைக்காலங்களுக்கு ஏற்றவாறு உங்கள் வீட்டை வடிவமைத்துக்கொண்டு வாழ்வதாகும். சுற்றுச்சூழலில் ஆர்வமுள்ள குடிமக்கள் காலநிலை மாற்ற நெருக்கடிக்கு ஏற்றவாறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்பட உள்ளூர் அரசை வலியுறுத்த வேண்டும்.

மாறாக, கடலோரப் பகுதிகளில் வாழ்வது என்று முற்றிலும் மாறுபட்ட அனுபவமாகும். பெரும்பாலான கடலோரப் பகுதிகளில் சதுப்புநிலக் காடுகள் இருப்பது இயற்கையான பாதுகாப்பாகும். ஆனால், இந்தியாவில் துறைமுகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அமைப்பதற்காக சதுப்பு நிலங்கள் அழிக்கப்படுகின்றன. காலநிலை மாற்றத்தால் பூமி

வெப்பமடையும்போது, மக்கள் கடலோரப் பகுதிகளில் வசிப்பதை தவிர்ப்பது நல்லது. அப்போதுதான் இயற்கை தாவரங்கள் பாதுகாப்பு அரணாக செயல்பட்டு அலைகளின் உயரத்தையும் வலிமையும் குறைத்து புயல் சீற்றங்களிலிருந்து கரையை பாதுகாக்க முடியும். வெள்ளத்தை தடுக்க கடல் பகுதியில் தடுப்புச் சுவர்கள் கட்டுவதைவிட சதுப்பு நிலங்களை அழிக்காமல் விட்டுவிடுவது மலிவானது மற்றும் விவேகமானது. இது நடப்பதை உறுதிசெய்வது நம் கடமை.

நிலத்தால் சூழப்பட்ட பகுதிகளில் வசிக்கும் நகரவாசிகள் காற்று மாசுபடுதலை அதிகம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டாம். ஏனெனில் இவை உங்கள் நுரையீரலை பாதிக்கிறது. உள்ளூர் நிர்வாகம் பெட்ரோல் அடிப்படையிலான போக்குவரத்தை குறைத்து பொது போக்குவரத்துக்கு சைக்கிள் மற்றும் மின்சார வாகனங்களை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

நீங்கள் ஒரு வீட்டை கட்டுகிறீர்கள் அல்லது ஒரு அடுக்குமாடி குடியிருப்பைத் தேடுகிறீர்கள் என்றால் கடும் வெப்பநிலையையும், எதிர்காலத்தில் காலநிலை மாற்றத்தை சமாளிக்கும் விதத்திலும் அவை வடிவமைக்கப்பட்டுள்ளதா என்பதை பார்க்க வேண்டும். காலநிலை நெருக்கடிகள் அதிகரிக்கும் சூழலில் அதற்கேற்ப நம்மை மாற்றிக்கொண்டு செயல்படுவதுதான் சரியான வழியாகும்.

உதாரணமாக, உணவை ஒருபோதும் வீணாக்கக்கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் வேண்டாம் என்று தூக்கி வீசும் உணவுப் பொருள்கள் குப்பைக் கிடங்குக்குச் சென்றால், அது அழுகிப்போவதுடன் அது பசுமை இல்ல வாயு மற்றும் மீத்தேன் என்னும் கொடிய மாசுபடுத்தியை உருவாக்கும். நீங்கள் என்ன உணவு வாங்குகிறீர்கள், எவ்வளவு வாங்குகிறீர்கள், உட்கொள்கிறீர்கள், தூக்கி எறிகிறீர்கள் என்பது முக்கியமானது. எனவே உணவை வாங்குவதிலும் உணவுக் கழிவுகளை உரமாக்குவதிலும் பழமையை கடைப்பிடிப்பதுதான் சரியான வழியாகும்.

நகரவாசிகள், டவுனில் வசிப்பவர்கள் மற்றும் கிராமவாசிகளுக்கு பொதுவான ஒரு கடமை உள்ளது. அவர்கள் அனைவரும் தங்களின் எரிசக்தி தடத்தை கண்காணிக்க வேண்டும், சின்னச் சின்ன விஷயங்களில், அதாவது குளிர்சாதனக் கருவிகளை சுவிட்ச் ஆஃப் செய்வது அல்லது தேவையில்லாமல் ஓடும் மின்விசிறியை நிறுத்துவது நன்மை தரும். ஆனால், நம்மில் பலர் அதிக செயல்திறனுக்கான காற்று வடிகட்டியை மாற்றுவதில் கவனம் செலுத்தாமலும் நல்ல தரமான எலெக்ட்ரிகல் மற்றும் எலெக்ட்ரானிக்ஸ் பொருள்களை வாங்காமலும், பயன்பாட்டில் இல்லாதபோது அவற்றை அவற்றை சுவிட்ச் ஆஃப் செய்வதையும் புறக்கணிக்கிறோம்.

ஆற்றல் மிகுந்த மின்சார மற்றும் மின்னணு பொருள்களை வாங்குவதன் மூலம் ஆண்டுதோறும் 10% முதல் 50% எரிசக்தி நுகர்வை குறைக்க முடியும். உலகம் முழுவதிலும் சராசரியாக ஒருநபர், தனது செயல்பாட்டின் மூலம் 4 டன் கரியமில வாயுவை உற்பத்தி செய்கிறார். ஆனால், நீங்கள் அமெரிக்கா போன்ற வளர்ச்சி அடைந்த நாட்டில் வசித்துவந்தால் 16 டன் கரியமில வாயுவை உற்பத்தி செய்கிறீர்கள் என்றும் அதுவே இந்தியாவாக இருந்தால் சுமார் 2 டன் கரியமில வாயுவை உற்பத்தி செய்கிறீர்கள் என்றும் கூறலாம். ஆனால், பிரச்னை என்னவென்றால் இந்தியாவில் அதிகம்பேர் வசிக்கின்றனர். ஆண்டுக்கு ஆண்டு மக்கள் தொகை உயர்ந்துகொண்டே செல்கிறது. எனவே நாம் கார்பன் தடத்தை குறைத்து, மீள்தன்மையுடன், எதிர்காலத்தை கருத்தில் கொண்டு காலநிலை மாற்றத்தை ஏற்றுக்கொண்டு, எச்சரிக்கையுடன் அதற்கேற்ப செயல்பட்டு வாழவேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதுதான் உண்மை.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சுழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதி வருகிறார்.

RID 3150

RC குன்டூர்-விகாஸ்

அனந்தவரப்பாடு கிராமத்தில் சங்கரா கண் மருத்துவமனை, பெடா ககானி, ரீசைக்கிள்ஸ்பெக்ஸ், டெக்சாஸ், USஐச் சேர்ந்த விதிஷா பலெடி ஆதரவுடன் நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாமில் 200க்கும் மேற்பட்டோர் பரிசோதிக்கப்பட்டார்கள்.

Rotary PEOPLE OF ACTION

சங்கச் செய்திகள்

RID 3205

RC திருச்சூர்

இந்தச் சங்கம் திருச்சூர் மன நலக் குறைபாடு கொண்ட குழந்தைகள்/பெரியவர்களுக்கான அமைப்புடன் இணைந்து அவர்களுடைய ஆட்டிசம் பயிற்சி, மறுவாழ்வு மையங்களை ஆதரிக்கிறது. இதன் திறன் மேம்பாட்டு மையத்திற்கான பணி முதலீட்டை வழங்குவதற்காக ஓர் RCC தொடங்கப்பட்டது.

RID 3231

RC திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்டம் புதூர்நாடு மலைகளுக்கு அருகிலுள்ள கீழனூர் கிராமத்தில் 30 விவசாயிகளுக்கு உரங்கள் வழங்கப்பட்டன. ரோட்டரியன்கள் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 100 கட்டடத் தொழிலாளர்களுக்குக் கருவிகளை வாங்கினார்கள்.

RID 3234

RC சென்னை காலக்ஸி

இந்தச் சங்கம் நடத்திய அறிவியல், தொழில்நுட்ப விநாடி வினாவில் 150 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 1,200 மாணவர்கள் பங்கேற்றார்கள். இதன் சிறப்பு விருந்தினர், பள்ளிக் கல்வி அமைச்சர் அன்பில் பொய்யாமொழி.

RID 3170

RC தார்வாட் சென்ட்ரல்

இங்கு நடைபெற்ற உறுப்பினர் கருத்தரங்கத்தில், ரோட்டரி இசைக்கலைஞர்களின் பன்னாட்டுத் தோழமையின் (IFRM) உள்ளூர்ப் பிரிவை RI இயக்குநர் K P நாகேஷ் தொடங்கி வைத்தார். DG அருண் பண்டாரே இதில் கலந்துகொண்டார்.

RID 3261

RC சம்பல்பூர்

இந்தச் சங்கத்தின் பசுமைப் பணியின் கீழ், சம்பல்பூர் IIM வளாகத்தில் வெவ்வேறு வகைகளைச் சேர்ந்த 1000 மரக்கன்றுகள் நடப்பட்டன.

RID 3291

RC கல்கத்தா பிரசிடென்சி

தொழிலாளர்களுக்காக விவாசிட்டி மருத்துவமனையுடன் இணைந்து சிறுநீரக ஆரோக்கிய முகாம் நடத்தப்பட்டது. இரத்த அழுத்தம், இரத்த சர்க்கரை, காது பரிசோதனை, சுவாச பரிசோதனை மற்றும் சிறுநீரக செயல்பாடு பரிசோதனைகள் செய்யப்பட்டன. பரிசோதனை முடிவு களுடன் கூடிய சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

ஜப்பான், இந்தியா: ஒரு வேறுபாட்டின் ஆய்வு

LBW



TCA ஸ்ரீனிவாச ராகவன்

கடந்த மாதம், ஜப்பான் பற்றி எங்களை அதிகமாக கவர்ந்தது என்ன என்று பலரும் ஆர்வமாக கேட்டார்கள். இதுபோன்ற நேரடியான கேள்விகளுக்கு என் மனைவி மிகவும் இராஜதந்திரமாகப் பதிலளிப்பார். ஆனால் எனக்கு அப்படியான தயக்கங்கள் இல்லை. நான் உடனே, “வேகத்தடைகள்,” என்று சொன்னேன்.

ஜப்பானில் ஒரு வேகத்தடையும் இல்லை. ஆனால் நான் வசிக்கும் சிறிய சமூகத்தில் கூட, 800 மீட்டர் சுற்றுப்பாதையில் 8 வேகத்தடைகள் உள்ளன.

ஒரு குறியிடப்படாத வேகத்தடையில் மோதிப் போய் என் தலையில் பட்ட ஒரு அடிதான் இந்த பதிலைச் சொல்ல வைத்தது. அந்த நேரத்தில் என் மனதில் இருந்ததைத் தான் நான் சொன்னேன்.

விஷயம் என்னவென்றால், நாங்கள் வசிக்கும் இடம் காட்டுமிராண்டிகள் நிறைந்ததல்ல. ஒரு காலத்தில் பத்திரிகையாளர்கள் பெரும்பான்மையாக இருந்தபோது அப்படி இருந்திருக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, இது ஊடகவியலாளர்களால் கட்டப்பட்ட ஒரு குடியிருப்பு வளாகம். ஆனால் இப்போது எங்கள் குடியிருப்பு வளாகத்தில் மிகவும் படித்த ஊடகவியலாளர் அல்லாதவர்களும் வசிக்கிறார்கள். இருந்தும், ஒவ்வொரு 100 மீட்டருக்கும் ஒரு வேகத்தடை எங்களுக்குத் தேவை. அதேபோல் நாய்களின் கழிவுகளும் ஒரு பிரச்சனையே. உண்மையைச் சொல்லப் போனால், அந்த விஷயத்தில் ஜப்பான் மட்டும் தனிச்சிறப்பு வாய்ந்தது அல்ல. ஐரோப்பா உட்பட பல நாடுகளிலும் அதே நிலைதான். ஆனால் இந்தியாவில் நிலைமை “என் நாயை நேசிக்கிறேன், அதன் கழிவையும் நேசிக்கிறேன்” என்ற போக்கில் இருக்கிறது. எனவே, எங்கள் குடியிருப்பு காலனியில் நீங்கள் வாகனம் ஓட்டினால், வேகத்தடைகளைச் சமாளிக்க வேண்டும். நீங்கள் நடந்தால், நாய் மலத்தைச் சமாளிக்க வேண்டும். வீட்டிலேயே இருப்பதுதான் சிறந்தது.

மற்றொரு முக்கிய வேறுபாடு நடை. ஜப்பானியர்கள் ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு கிலோமீட்டர் நடக்கிறார்கள், ஒரு நாளைக்கு 10,000 படிகள் நடக்க வேண்டும் என்று யாரோ அவர்களிடம் சொன்னதால் அல்ல. மிகக் குறைந்த பார்க்கிங் இடங்களே இருப்பதாலும், அவர்களிடம் முற்றிலும் அற்புதமான சப்வே அமைப்பு இருப்பதாலும் தான். ஆனால் இந்தியாவில், சில நூறு அடிகள் செல்ல கூட கார் அல்லது மோட்டார் சைக்கிளை நாம் எடுத்துச் செல்கிறோம். இது குறித்து ஒரு நாள் ஒரு அண்டை வீட்டுப் பையனிடம் கேட்டேன். நடப்பது சலிப்பாக இருக்கிறதாம். “சலிப்பா? அப்படியென்றால் நீ எப்போதுமே காதில் போட்டிருக்கும் அந்த இயர்போன் பற்றி என்ன நினைக்கிறாய்?” என்று நான் கேட்டேன். “அங்கிள் இப்போது நீங்கள்தான் சலிப்பாக பேசுகிறீர்கள்,” என்றான். ஒரு ஜப்பானியர் ஒரு மூத்த நபரிடம் - அதிலும் என்னை போல் 75 வயது நெருங்கியவரிடம் - அப்படிப் பேச மாட்டார்கள்.

இந்தியாவில் நீங்கள் பார்க்க முடியாத வேறு ஒன்றையும் நாங்கள் ஜப்பானில் பார்த்தோம் - மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் போக்கு, பழைய லக்னோவில் “பெஹ்லே ஆப்” தெஹ்சீப் (மரியாதை) என்று அழைக்கப்பட்டது. ஜப்பானியர்கள் மரியாதையை வேறு எங்கும் பார்க்காத அளவு உச்சத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள். இது இந்தியாவிற்கு முற்றிலும் மாறுபட்டது. ஒருமுறை நம் அன்பான மற்றும் கண்ணியமான நாட்டில் ஒரு ரயிலில், இரண்டு இளம் ஆண்கள் தங்களுடைய இருக்கைகளின் மேலே இரு திசைகளிலும் சுமார் ஆறு அடிவரை தங்கள் சூட் கேஸ்களைப் வைத்து விட்டார்கள். அது குறைந்தது 15 பயணிகளுக்கு மேல்தள மூட்டைத் தளத்தை பயன்படுத்த முடியாமல் செய்துவிட்டது. நானும் அவர்களில் ஒருவன். ஆனால் நான் எதிர்ப்பு தெரிவித்தபோது, என் தந்தை ரயிலை வாங்கினாரா என்று கேட்டார்கள். என் மனைவியின் தலையீடு மட்டுமே சண்டையைத் தடுத்தது. ஆனால், ஜப்பானும் முரட்டுத்தனமாகி வருகிறது என்று அவர் சொல்கிறார். அவர் அங்கு பலமுறை சென்றிருக்கிறார், அங்கே சிறிய மாற்றங்களைக் கவனிக்கிறார், குறிப்பாக வெளிநாட்டவர்களை பற்றிய மனப்பான்மையில். அதிகப்படியான சுற்றுலாப் பயணிகள் ஜப்பானியர்களை எச்சரிக்கையாக ஆக்கியுள்ளனர். இந்தியாவில் நாம் அடிக்கடி செய்வது போல, அவர்கள் வெளிநாட்டவர்களை வரவேற்று, பின்னர் அவர்களை ஏமாற்றுவதில்லை. இது போன்ற காரியங்களைச் செய்வது கௌரவக்குறைவானது என்று அவர்கள் நினைக்கிறார்கள், மேலும் ஜப்பானியர்கள் கௌரவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

“இன்னும் ஏதாவது?” என்று அவர் கேட்க, “குப்பைத் தொட்டிகள்,” என நான் சொன்னேன். அவை ஜப்பானில் அரிதாகவே உள்ளன. அந்த விஷயத்தில் இந்தியாவும் ஜப்பானும் ஒரே மாதிரியானவை. ஆனால் காரணங்கள் வெவ்வேறு. அங்குள்ள மக்கள் குப்பையைப் போடவே மாட்டார்கள். அவர்களுக்கு எதையாவது தூக்கி எறிய வேண்டியிருந்தால், அதைத் தங்கள் பாக்கெட்டுகளில் வைத்து வீட்டு குப்பைத் தொட்டிக்கு எடுத்துச் செல்கிறார்கள். இங்கே நாம் வெறுமனே குப்பைத் தொட்டிகளைத் திருடுகிறோம், அதனால்தான் இங்கே குப்பைத் தொட்டிகள் இல்லை.■

A Record Year of Generosity:
Rotary Members Make History

In 2024-25, Rotary members around the world came together to make history — raising more than US$569 million to support life-changing service projects. This remarkable achievement reflects the power of collective action and the deep commitment of our global community.

2025 by 2025 Endowment Goal Achieved

Through the successful completion of our 2025 by 2025 Endowment campaign, we set out to raise US$2.025 billion and surpassed that goal with an incredible **US$2.050 billion**. This achievement secures Rotary's ability to keep Doing Good in the World for generations to come.

Your Gifts Making an Impact

Thanks to the generosity of supporters around the world, The Rotary Foundation awarded over

1,424 GLOBAL GRANTS

468 DISTRICT GRANTS

74 DISASTER RESPONSE GRANTS

Better Together

- Renewed our agreement with the **Gates Foundation**, recommitting to the fight to end polio
- Awarded the **Programs of Scale grant** to an initiative that works to build peace in Colombia
- Partnered with Symbiosis International University to create a **Rotary Peace Center in India**

"Your gifts, commitments, and dedication matter not just today, not just this year, but for future generations of Rotary members to come. This is why the goal of reaching 2025 by 2025 was set, not just as a number, but to deliver on the promise of Rotary for our communities."

— Mark Daniel Maloney
2024-25 Rotary Foundation Trustee Chair, at the Rotary International Convention

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27